KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000
$1000 $20/month

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

GT Brokers
Protect You & Your Family
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage

மலர்:- 33, 18 September 2026 இதழ்:- 26

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் 12ம் 1ம் 16ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# மக்கள் ஆதரவை நிலை நிறுத்த தேசிய மக்கள் சக்தி திணறுகிறதா?



ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகள் நிறைவடையவிருக்கும் தறுவாயில், மக்கள் ஆதரவு தளம்பத் தொடங்கியிருப்பதாக அதன் தலைவர்கள் கவலைப்படத் தொடங்கியிருக்கிறார்கள் போன்று தெரிகிறது. மக்கள் செல்வாக்கை மீண்டும் மீட்டெடுக்கும் நோக்கில், ஜனாதிபதியே நேரடியாக களமிறங்கி கிராமங்களை நோக்கிச் சென்று பிரசாரங்களை முன்னெடுக்கவிருப்பதாக வெளியாகி யுள்ள செய்திகள், ஆளும் தரப்பினரிடையே ஏற்பட்டுள்ள ஒருவித அச்சத்தையும் வெளிக்காட்டுகின்றன. அதிகாரத்திற்கு வந்த ஆரம்ப கட்டத்தில் தேசிய மக்கள் சக்தி மீதிருந்த அதீத எதிர்பார்ப்புகள், (5ம் பக்கம் பார்க்க)

## கனடாவில் சோதிடரிடம் தன் வாழ் நாள் சேமிப்பை இழந்த பெண்!

# ஜே.வி.பி.யின் இலக்கு என்னவாக இருக்கும்?

ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியானது, ஆட்சியை கைப்பற்றி இரண்டு வருடங்களாகின்றது. பொருளாதார வங்குரோத்து நிலைமையின் விளைவாக ஏற்படும் அரசியல் இடைவெளியில் புதியவர் கள் மீதான கவர்ச்சி ஏற்படுவது சாதாரணமானது. அப்படித் தான் நடக்கும். அது தான் உலக அனுபவ மும் கூட. அவ்வாறானதொரு அரசியல் கவர்ச்சியின் விளைவாகவே அனுரகுமார திசாநாயக்க கதாநாயக இடத்தைப் பிடித்தார். அந்த கதாநாயக கவர்ச்சி ஒரு புதிய அரசியல் அலையாக மாற்றம் பெற்றது. அந்த அலையில் பெரும் பாண்மையான மக்கள் மிதந்தனர். ஈழத் தமிழர்களிலும் கணிசமானவர்கள் அடித்துச் செல்லப்பட்டனர். யார், எவர் என்று தெரியாமலேயே மக்கள் வாக்களித்தனர். பொதுவாக அரசியலுக்கு(14ம் பக்கம் பார்க்க)

# நாமல்:- மொட்டு கட்சியின் எதிர்காலம்?



இலங்கையில் அடுத்தடுத்த வாரங்களில் தேர்தல் வரப் போகிறதோ? என்று எண்ணுகின்ற அளவுக்கு தென்னிலங்கை அரசியல் களம் சூடு பிடித்து இருக்கிறது. அரசாங்கத்தின் ஊழல் ஒழிப்பு குரலையும் எதிர்க்கட்சிகளின் அரசியல் பழி வாங்கல் கூக்குரலையும் நாமலின் கைது கல்லும் தேங்காயும் சந்தித்த கதையாக மாற்றியிருக்கிறது. தென்னிலங்கை அரசியலில் பிளவுபட்டு நிற்கிறது. மக்கள் இரண்டு அணி களாக திரண்டு இருக்கிறார்கள். இந்த களநிலை மாற்றத்தை நாமலின் கைதுக்கு முன்னர் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவின் அரசாங்கம் சரியாக கணிப்பிட்டதா? என்ற கேள்வி தவிர்க்க முடியாததாகிறது. (16ம் பக்கம் பார்க்க)


METROPOLITAN CENTRE
KENNEDY & FINCH
3840 FINCH AVE E, SCARBOROUGH, ON M1T 3T4
OCT 3, 2026 | SATURDAY @ 6 PM
Title Sponsor
Vijaya Jewellery
TICKET AVAILABLE HERE
Scarborough
Cell Tell Mobility
2611 Eglinton Ave East
416-266-6818
Sun City Supermarket
2761 Markham Rd
(416) 724-6666
Gunaams Supermarket
145 Morningside Ave Unit 33
(416) 283-9998
Cell Tell Mobility
Birchmount Road / Finch
2950 Birchmount Rd Unit# 5C
(416) 495-7776
Kennedy & Ellesmere
Samy & Sons
416-298-1598
Ruby & Ruby Saree Palace Inc.
2843 Lawrence Ave Est
416-264-7833
Markham & Steeles
New Ranganas Jewellery
6055 Steeles Ave E Unit C102
(647) 947-2864
Vijaya Jewellery
3341 Markham Rd #127,
(437) 833-3197
NEW ROYAL FASHIONS
6055 Steeles Ave E
(416) 519-1119
Sprin Florist Canada
3011 Markham Rd
416-893-2624
Majestic City
Designs 2 Prints LTD
Tel: 647-858-2290
GTA Square Mall
Winners Lotto Centre
Tel: 416-291-9990
Eraa plaza (Neilson / Finch)
Sai Elanthulir Fashion
Jewellery & Money Transfer
Tel: 416-471-1002
Tapscott Rd / Finch ave
MS Convenience
416-332-0961
5633 Finch Ave E units 5
Middlefield Rd & Steeles Ave
Pasumai Market
2-2002 Middlefield Rd, Markham,
(905) 472-5525
Etobicoke (Kipling & Steeles)
A S A Financial Service
(in Uthayas Supermarket)
Tel:416-742-1425
AJAX (Harwood & Taunton Rd)
New Spiceland Restaurant
905-426-4445
SCAN NOW
GET 20% OFF YOUR TICKET!
Mukesh
Playback Singer
Varsha S krishnan
Zee Tamil Title Winner
Santhosh Subramanian
Playback Singer
Magisha
Super Singer
Venkat
Tabla
Manikandan
Keybordist
Old is gold
நெஞ்சம் மறப்பதில்லை
Thalalaya Live Band
Amazing Electric Motors Ltd.
Kenney Nithiy
Service Center Manager
Tel: (416) 291-7242
1-877-291-7242
Cell: (416) 540-0875
Fax: (416) 623-8258
VIBRANT HOSPITALITY GROUP
STANDARD MORTGAGES INC.
RAJ SUBRAYAM
CEO
416-993-2638
SHIVAS CHICKEN
WHOLE SALE CANADA INC
416-910-3244
186 Bartley Dr. #12A, Toronto, ON
TICKETS $30 | $50 AND VIP
More Info 416-564-9642 | 416-566-0790
H&ME
(416) 894-9309
YOUR NEXT MOVE STARTS HERE
Real Estate + Mortgage Guidance in One Call
CALL ME WITH CONFIDENCE
SIVA NAGAMANY
KT GROUP
BEHIND ME MEDIA
Guna Selliah
Insurance Broker
416.317.6500
நியூ ரங்கனாஸ்
தங்கச்சுரங்கம்
சிங்கப்பூர்,டுபாய் தங்க நகைகளை
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellerys
North Toronto
CREMATORIUM
(416) 993-0826
(647) 778-4217
Royal Fashions
BRIDAL JEWELLERY RENTAL
Ocean Accounting Tax Consultants
Accounting Services for Personal and Smalll Business
Call us 416-285-6900
Spring
For All Moments of Life
416-893-2624 647 218 6222
TSA
MEAT STORE
All type of Meat, Seafoods, Poultry can be ordered under different specification
437-886-2597
647-328-8880
Canadian Tamils' Business Directory
TAMILS' GUIDE
Athavan Publications Inc.
Tel: 416.615.4646
info@tamilsguide.com
771 Birmley Road,
Scarborough, ON. Canada. M1J 1C7
Senthi Chelliah
President & CEO
www.tamilsguide.com
Our Services
Oasis
EVENTS AND DECOR
ONLINE: 416-623-8110
YUGAM
RADIO
Ravi: 416-898-7284
Ruby: 416-670-6522
JRB
universal inc
R.R.Rajkumar
647-289-6164
ஈழநாடு
MAKILCHI

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART
4A WADE AVE
TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO**

**5 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடாவாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தைகளின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய குழந்தைகளின் புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.cam என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# கனடாவில் சோதிடரிடம் தன் வாழ் நாள் சேமிப்பை இழந்த பெண்




கனடாவின் டொராண்டோ நகரைச் சேர்ந்த பெண் ஒருவர், தான் கடுமையான உடல் நலப் பாதிப்பிலும் குடும்ப உறுப்பினர்களின் இழப்பிலும் தவித்த தருணத்தைப் பயன்படுத்தி ஜோதிடர் ஒருவர் தன்னிடம் இருந்து சுமார் 96,000 டாலர்களை ஏமாற்றி விட்டதாக வேதனையுடன் தெரிவித்துள்ளார்.

தன் அடையாளத்தை வெளிப்படுத்த விரும்பாத அந்தப் பெண் தன்னை 'நேன்சி' என்ற பெயரில் ஊடகத்திடம் தனது துயரத்தைப் பகிர்ந்துள்ளார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கடுமையான இடுப்பு வலியால் அவதிப்பட்டு வந்த நேன்சி அதே காலகட்டத்தில் தனது தந்தை மற்றும் சகோதரரை அடுத்தடுத்து இழந்தார்.

இதனால் கடும் மன உளைச்சலில் இருந்த போது இன்ஸ்டாகிராமில் வெறும் 30.00 கட்டணத்தில் ஜோதிடம் பார்க்கப்படும் என்ற விளம்பரத்தைப் பார்த்து அந்த ஜோதிடரை அணுகியுள்ளார். ஜோதிடத்தைச் சந்தித்த போது நேன்சியைச் சுற்றிப் பொல்லாத ஆவிகளும் கடுமையான பில்லி சூனியமும் இருப்பதாக அச்சமூட்டப்பட்டுள்ளது.

இந்தச் சூனியத்தினால் விரைவில் நீங்கள் முடங்கி, சக்கர நாற்காலியில் அமர நேரிடும் இறுதியில் உயிரிழப்பீர்கள்' என்று ஜோதிடர் அச்சுறுத்தியுள்ளார்.

ஒரு துர்சக்தியை பிளாஸ்டிக் பாட்டிலில் அடைத்து ஏரியில் புதைக்க 25,000 டொலர் வேண்டும் எனக் கேட்டுப் பெற்றுள்ளார்.

அதன் பின்னர் மேலும் 7 துர்சக்திகள் இருப்பதாகக் கூறி சிறுகச் சிறுக நேன்சியின் வாழ்நாள் சேமிப்பான மொத்தம் 96,000 டொலாலர்களை பறித்துள்ளார்.

தனது சேமிப்பு முழுவதையும் கொடுத்த பிறகும் நேன்சியின் உடல்நலத்திலோ பிரச்சினைகளிலோ எந்த மாற்றமும் ஏற்படவில்லை. இறுதியில் எதுவுமே நடக்கவில்லை. நான் மிகப் பெரிய முட்டாள்தனம் செய்து விட்டேன். தினமும் அழுதுகொண்டிருக்கிறேன்' என நேன்சி கதறியுள்ளார்.

இத்தகைய ஜோதிட மோசடிகள் பயம், அச்சுறுத்தல் மற்றும் உணர்ச்சிப்பூர்வமான சூழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டவை என கனடா மோசடி எதிர்ப்பு மையம் எச்சரித்துள்ளது.

இந்திய மற்றும் பல நாடுகளில் இருந்து கனடாவுக்கு வருகை தந்து மக்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் சோதிட மோசடி நபர்களுக்கு கனடா அரசு விசா வழங்குவதை உடனடியாக நிறுத்த வேண்டுமென பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## சவுதியில் 5 வருட சிறைத் தண்டனை பெற்ற இலங்கை தமிழ் இளைஞனுக்கு அது மரண தண்டணையாக மாறியது எப்படி?

சவுதி அரேபியாவில் கைது செய்யப்பட்ட இலங்கை தமிழ் இளைஞன் அனோஜனுக்கு மரண்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங்களில் நபிகள் நாயகம் தொடர்பாக பிழையானதொரு கருத்தைப் பதிவு செய்ததாகக் தெரிவித்தே இந்த மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.முதற்கட்டமாக ஐந்து வருட சிறைத்தண்டனையும் 3 மில்லியன் சவுதி ரியால் அபராதமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து அனோஜன் தரப்பில் மேன்முறையீடு செய்யப்பட்டிருந்த நிலையில், நேற்று (17.09.2026) அதற்கான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் போது அனோஜனுக்கு மரண



தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவு அவருக்கான தண்டனையைக் குறைப்பதற்காக (18ம் பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# இலங்கையில் சட்டங்கள் தயாரிக்கப்படும் முறைமை குறித்து ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆன்ரே தீவிர கரிசனை

நிகழ்நிலைக் காப்புச் சட்டம் கொண்டுவரப்பட்ட வேளையில், நான் சுமார் 45 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கதைத்தேன். ஆனால் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு ஆதரவாக அவர்களில் பலர் வாக்களித்திருந்தார்கள். ஏனெனில் நிகழ்நிலைக் காப்புச் சட்ட வரைவை அவர்கள் வாசித்திருக்கவில்லை. ஒரு சட்டம் அல்லது கொள்கைகள் அறிமுகப்படுத்தப்படும் போது அதனை முழுமையாக வாசிப்பது என்பது அடிப்படையான ஒரு விடயம். அதனைச் செய்யமுடியாவிடின், பாராளுமன்ற உறுப்பினராகக் கூடாது என ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க்–ஆன்ரே பிரான்சே தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இலாப நோக்கற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை முடக்குவதற்கும், சிவில் சமூக இடைவெளியை சுருக்குவதற்கும் நிதி நடவடிக்கை பணிக்குழுவின் தர நியமங்கள் அரசாங்கத்தினால் தவறாகப் பயன்படுத்தப்பட்டு வருவதாக இலங்கையைத் தளமாகக் கொண்டு இயங்கி வரும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் அமைப்புக்களை உள்ளடக்கிய இலங்கை சிவில் சமூக நிதி நடவடிக்கைப் பணிக்குழு வலையமைப்பு தொடர்ச்சியாகக் கரிசனை வெளியிட்டு வந்தது.

இந்நிலையில் இவ்வாண்டு நிதி நடவடிக்கைப் பணிக்குழுவின் இலங்கை தொடர்பான மதிப்பீடு நடைபெறவுள்ள நிலையில், இதன்போது பரிசீலிக்கப்பட வேண்டிய விடயங்களை உள்ளடக்கி இலங்கை சிவில் சமூக நிதி நடவடிக்கைப் பணிக்குழு வலையமைப்பினால் தயாரிக்கப்பட்டு, நிதி நடவடிக்கை பணிக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிழல் அறிக்கை வெளியீட்டு நிகழ்வு வியாழக்கிழமை (17) கொழும்பில் உள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த



சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சிவில் சமூகப் பிரதிநிதிகள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், பன்னாட்டு இராஜதந்திரிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரது பங்கேற்புடன் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஐ.நா வதிவிடப் பிரதிநிதி, நிதி நடவடிக்கைப் பணிக்குழுவுக்கு இவ்வாறானதொரு நிழல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியது அவசியம் என வலியுறுத்தியதுடன், இந்நாட்டில் ஐக்கிய நாடுகள் சபையின் பணிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் அரச சார்பற்ற சிவில் சமூக அமைப்புக்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ள போதிலும், பல சந்தர்ப்பங்களில் அப்பங்களிப்பு குறைத்து மதிப்பிடப்படுவதாகக் கரிசனை வெளியிட்டார்.

அத்தோடு 'சிவில் சமூக அமைப்புக்களைத் தமது பங்காளிகளாகப் பேணுவது அரசுக்கும் நாட்டுக்கும் நேர்மறையான விளைவுகளையே பெற்றுத்தரும்.

ஒரு கண்காணிப்புக் கட்டமைப்பாக செயற்படக்கூடிய சிவில் சமூக அமைப்புக்கள் உலகளாவிய நிலைவரங்களுக்கும் உள்நாட்டு யதார்த்தத்துக்கும் இடையிலான பாலமாகத் தொழிற்படும். அது மாத்திரமன்றி சிவில் சமூகத்தின் இடைவெளியை உறுதிப்படுத்துவது என்பது இரண்டாம் பட்சமான விடயமல்ல. மாறாக அமைதி, மனித உரிமைகள் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை நிலைநாட்டுவதற்கு அது இன்றியமையாததாகும். எனவே சிவில் சமூக அமைப்புக்கள் சுயாதீனமாக இயங்குவதற்கு இடமளிக்கப்பட வேண்டும்' என்றும் அவர் வலியுறுத்தினார்.

அதேபோன்று நாட்டில் துடிப்புடன் இயங்கி வரும் சிவில் சமூக அமைப்புக்களுக்கு நிதி அளிப்பது என்பது நாட்டின் முன்னேற்றத்துக்கான முதலீடாகவே அமையும் எனச் சுட்டிக் காட்டிய ஐ.நா வதிவிடப் பிரதிநிதி, கடந்த ஆண்டு 'தித்வா' சூறாவளியினால் ஏற்பட்ட பேரனர்த்தத்தின் பின்னரான மீட்சி நடவடிக்கைகளில் சிவில் சமூக அமைப்புக்களில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை நினைவுகூர்ந்தார்.

அதேவேளை பயங்கரவாத ஒழிப்பு எனக் கூறி ஊடகவியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டம் பிரயோகிக்கப்பட்டமை நினைவுறுத்திய அவர், தற்போது அரசாங்கத்தினால் புதிதாக கொண்டுவரப்படும் சட்டங்கள் தொடர்பில் போதுமான கலந்தாலோசனைகள் முன்னெடுக்கப்படவில்லை எனக் கரிசனை வெளியிட்டார்.

## ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் எயார்பஸ் வழக்கு:- நாமல் ராஜபக்ஷவுக்கு தொடர்ந்து விளக்கமறியல்!



ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு எயார்பஸ் விமானங்களைக் கொள்வனவு செய்த நடவடிக்கையின் போது 100 மில்லியன் ரூபா (சுமார் 800,000 அமெரிக்க டொலர்) இலஞ்சமாகப் பெற்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை எதிர்வரும் செப்டம்பர் 29 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அவரது பிணை மனு மீதான உத்தரவு செப்டம்பர் 29 அறிவிக்கப்படும் எனவும் நீதவானின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலஞ்ச ஊழல் ஆணைக்குழு சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஜனக பண்டார (18ம் பக்கம் பார்க்க)

SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

# தமிழறிஞர் சாலமன் பாப்பையா மறைந்தார்





புகழ்பெற்ற தமிழறிஞரும் பட்டிமன்ற நடுவருமான சாலமன் பாப்பையா வயது முதிர்வு தொடர்பான உடல்நலக் குறைவு காரணமாக மதுரையில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் 11 செப் 2026 காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 90. சுமார் ஒரு வாரமாக பாப்பையா சிகிச்சை பெற்று வந்தார்.

மதுரை அமெரிக்கக் கல்லூரியின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியரான பப்பையா, இலக்கியம் மற்றும் சமூகக் கருத்தாடல்களைத் தொலைக்காட்சி வாயிலாகப் பரந்த பார்வையாளர்களிடம் கொண்டு சேர்த்ததன் மூலம், தமிழ்நாட்டின் மிகச் சிறந்த பட்டிமன்ற நடுவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார்.

இலக்கியம் மற்றும் கல்வித் துறைகளில் ஆற்றிய பங்களிப்பிற்காக 2021ஆம் ஆண்டில் அவருக்கு 'பத்ம ஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

எழுத்தாளர், கவிஞர் மற்றும் பேச்சாளராகவும் அறியப்பட்ட அவர், தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தை மேம்படுத்தும் பணிகளில் நெருக்கமாக ஈடுபட்டிருந்தார்.

பாப்பையா மதுரையில் உள்ள ஞானஒளிபுரத்தில் தனது குடும்பத்தினருடன் வசித்து வந்தார். இவரது மனைவி ஜெயபாய் முன்னரே காலமானார் இவருக்கு ஒரு மகனும் ஒரு மகளும் உள்ளனர்.

தமிழறிஞரின் மறைவுக்கு ஈழநாடு பத்திரிகை வாசகர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

# மக்கள் ஆதரவை நிலை நிறுத்த தேசிய மக்கள் சக்தி திணறுகிறதா?




ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகள் நிறைவடையவிருக்கும் தறுவாயில், மக்கள் ஆதரவு தளம்பத் தொடங்கியிருப்பதாக அதன் தலைவர்கள் கவலைப்படத் தொடங்கியிருக்கிறார்கள் போன்று தெரிகிறது.

மக்கள் செல்வாக்கை மீண்டும் மீட்டெடுக்கும் நோக்கில், ஜனாதிபதியே நேரடியாக களமிறங்கி கிராமங்களை நோக்கிச் சென்று பிரசாரங்களை முன்னெடுக்கவிருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள், ஆளும் தரப்பினரிடையே ஏற்பட்டுள்ள ஒருவித அச்சத்தையும் வெளிக காட்டுகின்றன.

அதிகாரத்திற்கு வந்த ஆரம்ப கட்டத்தில் தேசிய மக்கள் சக்தி மீதிருந்த அதீத எதிர்பார்ப்புகள், தற்போதைய பொருளாதார மற்றும் நிர்வாக யதார்த்தங்களால் குறையத் தொடங்கியுள்ளன. விலைவாசி உயர்வு, வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் உள்ள தாமதம் மற்றும் கிராமப்புற மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காண முடியாமை போன்றவை அரசாங்கத்தின் மீதான விமர்சனங்களை அதிகரித்துள்ளன.

இதன் காரணமாகவே, கட்சியின் மத்திய அமைப்பை மீண்டும் கிராம மட்டத்திற்கு கொண்டு சென்று, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் கிராமப்புற தொண்டர்களை மீண்டும் ஒருங்கிணைக்க வேண்டிய கட்டாயம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

மாவட்ட ரீதியிலும் கிராம மட்டத்திலும் மீண்டும் பேரணிகளையும் கூட்டங்களையும் ஏற்பாடு செய்வது, ஒருபுறம் அரசியல் கட்சிகளின் இயல்பான மறுசீரமைப்பு நடவடிக்கை போலத் தோன்றினாலும், மறுபுறம் அது ஆளுங்கட்சியின் பின்னடைவை மறைமுகமாக ஒப்புக்கொள்வதாகவே அமைகிறது.

பேரணிகளுக்கு ஜனாதிபதியை முதன்மைப் பிரசாரகராகக் களமிறக்குவது, மத்திய தலைமைத்துவத்தின் பிம்பத்தைக் கொண்டு மட்டுமே தொண்டர்களைத் தக்க வைக்க முடியும் என்ற நிலையை உணர்த்துகிறது.

பேரணிகளில் விவசாயிகள் மற்றும் பெண்களை மையப்படுத்துவது, அரசாங்கத்தின் மீதான அதிருப்தி எந்தப் பிரிவினரிடம் அதிகமாக உள்ளதோ அவர்களை மீண்டும் சமாதானப்படுத்தும் முயற்சி என்பதில் சந்தேகமில்லை.

எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களை எதிர்கொள்வதையும் கடந்து, களத்தில் மக்கள் மத்தியில் குறைந்து வரும் நம்பிக்கையை மீட்டெடுப்பதே அரசாங்கத்தின் முன்னுள்ள மிகப்பெரிய சவாலாகும். வெறும் மேடைப் பேச்சுகளும் பிரசாரப் பேரணிகளும் மட்டுமே குறைந்துவரும் செல்வாக்கை மீட்டெடுத்து விடாது. கிராமங்களை நோக்கி மீண்டும் செல்வது அரசாங்கத்தின் விழிப்புணர்வைக் காட்டினாலும், மக்களின் உண்மையான குறைகளைத் தீர்க்கும் நடைமுறை யதார்த்தமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறினால், இந்த பேரணிகள் வெறும் அரசியல் சடங்காகவே முடியும் என்பதை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உணர வேண்டும்.

# அன்று புலி என்றாவர்கள் இப்போது பதவி ஆசையில் மேடையேற்றுகின்றனர்

அன்று புலி என்றார்கள் இன்று ஆட்சி ஆசையில் புலி என்பவரை மேடையில் ஏற்றுகிறார்கள் இது தான் அவர்களுடைய அரசியல் விளையாட்டு என விமர்சித்துள்ளார் இலங்கை ஜனாதிபதி அனுர குமார திசநாயக்க.

மகிந்த குடும்பத்தை வேட்டையாடும் அனுர அரசின் அடுத்து நகர்வாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவி சிராந்தி ராஜபக்ச இலக்கு வைக்கப்பட்டுள்ளர்.

சிராந்தி நடத்தும் கார்டன் முன்பள்ளிக்கு கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள இரண்டு சொகுசுப் பேருந்துகளை வழங்கியதில் நடந்த ஊழல் மற்றும் நிதி முறைகேடுகள் குறித்து, இலஞ்சம் அல்லது ஊழல் புலனாய்வு ஆணையமும் குற்றப் புலனாய்வுத் திணைக்களமும் ஒரு கூட்டு விசாரணையைத் தொடங்கியுள்ளன. இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்ட உண்மைகளின் அடிப்படையில் குற்றவியல் குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்வதற்குப் போதுமான சான்றுகள் உள்ளன என்று நிதியியல் புலனாய்வுப் பிரிவு வழங்கிய அறிவுறுத்தல்களைத் தொடர்ந்து, சட்டமா அதிபர் திணைக்களமும் முறைகேடுகள் குறித்து ஒரு முறையான விசாரணையைத் தொடங்கியுள்ளது. ஊழல்வாதிகளுக்கும், பாதாளக் குழுக்களுக்கும் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துள்ள போது அவர்களின் நண்பர்களான எதிர்க்கட்சியினர் இன்று ஒன்றி ணைந்துள்ளார்கள். சட்ட மறுசீரமைப்பு க்களை மேற்கொள்வதால் நாட்டு மக்களுக்கு எவ்வித பிரச்சினைகளும் இல்லை. இவர்களுக்கு தான் பிரச்சினை. எதிர்க்கட்சிகளின் கூட்டணி எனக்கு சவாலல்ல என்றார்.

# நியூயோர்க்கில் வண்டவாளத்தில் தவறி விழுந்த நண்பரைக் காப்பாற்ற முற்பட்ட இந்தியப் பெண்! ரயில் மோதி இருவரும் பலி!





இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மலாய்க்கா சித்ரே (24), அமெரிக்காவின் நியூ ஜெர்ஸியிலுள்ள டேடன் நகரில் வசித்து வந்தார். இவரும், நேபாளத்தைச் சேர்ந்த இவரது நண்பர் நவம்கவுலும் இங்குள்ள ரட்கர்ஸ் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு படித்து விட்டு அமெரிக்காவிலேயே தங்கி வேலை பார்த்து வந்தனர். இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இருவரும் லோயர் மன்ஹாட்டன் சப்வே ரயில் நிலையத்துக்கு சென்றுள்ளனர். ரயில்வே தண்டவாளத்தைக் கடக்க முயன்ற போது இருவரும் அந்த வழியே வந்த ரயில் மோதி அதே இடத்திலேயே இறந்தனர்.

பின்னர் அவர்களது உடல்கள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது ரயில் தண்டவாளத்தில் நவம் கவுல் தவறி விழுந்ததாகவும், இதைப் பார்த்த மலாய்க்கா சித்ரே அவரைக் காப்பாற்றச் சென்று விபத்தில் சிக்கியதாகவும் நியூயார்க் போஸ்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

# தற்காலிக தலைவர்களுக்கு எதிராக வழக்கு

இலங்கை தமிழரசுக்கட்சியின் தற்காலிக தலைவர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சீ.வி.கே.சிவஞானம் உள்ளிட்டோருக்கு எதிராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரனை கட்சியில் இருந்து நீக்கியமைக்கு எதிராக, தமிழரசுக் கட்சியின் தற்போதைய தற்காலிக தலைவர் மற்றும் செயலாளர் உள்ளிட்டோருக்கு எதிராக மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் 16 செப் 2026 வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கட்சியின் தற்காலிக தலைவர் சீ.வி.கே.சிவஞானம், தற்காலிக செயலாளர் எம்.ஏ. சுமந்திரன், முன்னாள் பொதுச் செயலாளர் சத்தியலிங்கம், நிர்வாகச் செயலாளர் குலநாயகம் ஆகியோருக்கு எதிராக, வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கினை நீதவான் பரிசீலித்ததை அடுத்து, எதிர்வரும் டிசம்பர் மாதம் 16 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்துள்ளார்.

# ஊழல்வாதி நாமலும் நெல்சல் மண்டேலாவும் ஒன்றா?

அரச நிதியை மோசடி செய்து சிறையில் உள்ள நாமல் ராஜபக்ஷ தன்னை நெல்சன் மண்டேலா என்று குறிப்பிட்டுக் கொள்கிறார். நெல்சன் மண்டேலா ஏன் சிறை சென்றார், ராஜபக்ஷர்கள் ஏன் சிறை செல்கிறார்கள் என்பதை அறிவார்ந்த மக்கள் நன்கு அறிவார்கள். ஊழல்வாதிகளுடன் ஒப்பிட்டு நெல்சன் மண்டேலாவை அவமதிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நஜித் இந்திக தெரிவித்தார்.



கொழும்பில் 14 செப் 2026 திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசாங்கத்துக்கு சவால் விடுப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு அநுராதபுரத்தில் பொதுஜன பெரமுனவினர் கூட்டத்தை நடத்தினார்கள். கூட்டத்துக்கு வந்தவர்கள். நாமல் திருடர், என்று குறிப்பிட்டுக் கொண்டு பேரணியாக சென்றார்கள்.

மதுபானம் வழங்கி கூட்டத்துக்கு ஆட்களை சேர்க்கும் பழைய கலாசாரத்தில் இருந்து ராஜபக்ஷர்கள் இன்னும் விடுபடவில்லை. முறையற்ற வகையிலாவது அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்று இவர்கள் நினைக்கிறார்கள்.

அரச நிதியை மோசடி செய்து சிறையில் உள்ள நாமல் ராஜபக்ஷ தன்னை நெல்சன் மண்டேலா என்று குறிப்பிட்டுக் கொள்கிறார். நெல்சன் மண்டேலா ஏன் சிறை சென்றார், ராஜபக்ஷர்கள் ஏன் சிறை செல்கிறார்கள் என்பதை அறிவார்ந்த மக்கள் நன்கு அறிவார்கள். ஊழல்வாதிகளுடன் ஒப்பிட்டு நெல்சன் மண்டேலாவை அவமதிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம்.

ஊழலுக்கு எதிராக நடவடிக்கைகளை சட்டத்தின் பிரகாரம் முன்னெடுப்பது எவ்வாறு அரசியல் பழிவாங்கலாக அமையும். ராஜபக்ஷர்களினால் தான் நாடு வங்குரோத்து நிலையடைந்தது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதன் பின்னரும் இவர்கள் நாட்டு மக்களை முட்டாள்கள் என்று நினைத்துக் கொண்டு செயற்படுவது முறையற்றது என்றார்.

## செம்மணி புதைகுழி:- சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் பிரிட்டன்!

பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோருக்கான நீதி என்பவற்றை இலங்கை அரசாங்கத்திடம் தாம் தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகச் சுட்டிக் காட்டியுள்ள பிரிட்டன் வெளியுறவு, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் பாராளுமன்ற இணைச் செயலாளர் கிறிஸ் எல்மோர், செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பில் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக நம்பகமானதும், வெளிப்படைத்தன்மை வாய்ந்ததுமான விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோருக்கான நீதி என்பவற்றை இலங்கை அரசாங்கத்திடம் தாம் தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகச் சுட்டிக் காட்டியுள்ள பிரிட்டன் வெளியுறவு, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் பாராளுமன்ற இணைச் செயலாளர் கிறிஸ் எல்மோர், செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பில் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக நம்பகமானதும், வெளிப்படைத்தன்மை வாய்ந்ததுமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை செம்மணி மனிதப்புதைகுழி விவகாரத்துடன் தொடர்புடைய நகர்வுகளை பிரிட்டன் உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகவும், இது பற்றி வெளிப்படைத்தன்மை வாய்ந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து இலங்கை அதிகாரிகளிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். அதேபோன்று இவ்விசாரணை செயன் முறையில் வலுவான தடயவியல் பாது காப்பு நடைமுறைகள் உள்வாங்கப்பட வேண்டும் என்றும், வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் ஆக்கபூர்வமான பங்கேற்பு உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வுப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அதற்கு சர்வதேச சமூகத்தின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கான சாத்தியப்பாடு குறித்துப் பரிசீலிக்குமாறு நாம் இலங்கையை ஊக்குவித்துள்ளோம்' எனவும் பிரிட்டன் பாராளுமன்றத்தில் எழுத்துமூலம் சமர்ப்பித்த பதிலில் இணைச் செயலாளர் கிறிஸ் எல்மோர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான இணையனுசரணை நாடுகளுக்குத் தலைமை தாங்குவதன் ஊடாகவும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டத்துக்கு ஆதரவு வழங்குவதன் ஊடாகவும் பிரிட்டன் உறுதியுடன் இருப்பதாக அவர் தெரிவித்தார்.


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# அனுராதபுரம் பேரணி சர்ச்சை:- அர்ச்சுனாவின் உரை குறித்து TID விசாரணை



அனுராதபுரத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பேரணியின் போது தடைசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை ஊக்குவித்ததாகக் கூறப்படும் குற்றச் சாட்டுகள் குறித்து விசாரணை நடத்து மாறு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்கு (TID) பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பேணியின் போது தெரிவிக்கப்பட்ட கருத்துகள் குறித்த முறைப்பாட்டைத் தொடர்ந்து, பொலிஸ்மா அதிபர் இந்த உத்தரவைப் பிறப்பித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் பேரணியில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை ஊக்குவிப்பதாகவோ அல்லது ஆதரிப்பதாகவோ அமைந்திருந்ததாகக் குற்றம் சாட்டி, சிவில் சமூக ஆர்வலர்கள் குழுவொன்று குற்றப் புலனாய்வுத் துறையிடம் முறைப்பாடு அளித்துள்ளதை பொலிஸார் முன்னதாகவே உறுதிபடுத்தியிருந்தனர்.

செப்டம்பர் 12 அன்று அனுராதபுரம் மாநகர சபைக் மைதானத்தில் நடைபெற்ற பேரணியில் உரையாற்றிய யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா வெளியிட்ட கருத்துகளே இச்சிறப்புக்குரிய சர்ச்சைக்கு மையமாக அமைந்துள்ளன.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை உள்ளடக்கிய அரசியல் ஒப்பீடு ஒன்றை மேற்கொண்ட போது, இராமநாதன் அர்ச்சுனா தனது உரையில் தன்னை ஒரு புலி என்று குறிப்பிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பல எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். இலங்கையில் விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்ந்து தடைசெய்யப்பட்ட ஒரு அமைப்பாகவே உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணையில் உரிமை மீறல்- தென்னக்கோர் உள்ளிட்டோருக்கு எதிராக தீர்ப்பு!



பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் (DIG) ஷானி அபேசேகர ஆகியோரின் அடிப்படை உரிமைகளை முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னகோன் மற்றும் இருவர் மீறியுள்ளதாக இலங்கை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

2019ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக ரவி செனவிரத்ன மற்றும் ஷானி அபேசேகர ஆகியோருக்கு எதிராக நடத்தப்பட்ட விசாரணைகள் மூலம், தென்னகோன் மற்றும் இருவர் அவர்களின் அடிப்படை உரிமைகளை மீறியதாக நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அரசியல் நோக்கங்களின் அடிப்படையில் செயல்பட்டதன் மூலம் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னகோன், தலைமை பொலிஸ் பரிசோதகர் சில்வா மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பாலித சிரிவர்தன ஆகியோர் அந்த இருவரின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாக நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

# ஷிரந்தியிடம் 24ம் திகதி விசாரணை!

கொழும்பு சிறுவர் வைத்தியசாலைக்கு சிரி ஸ்கேனர் இயந்திர கொள்வனவுக்காக நன்கொடையாகப் பெறப்பட்ட ஒரு மில்லியன் ரூபா நிதியை, ‘சிரிலிய சவிய’ அறக் கட்டளையினால் பராமரிக்கப்பட்டு வந்த வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டமை தொடர்பில் முன்னெடுத்துவரும் விசாரணைகளுக்கமைய வாக்குமூலம் அளிப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் துணைவியார் ஷிரந்தி ராஜபக்ஷவை எதிர்வரும் 24ஆம் திகதி முன்னிலையாகுமாறு குற்றப்புலனாய்வு பிரிவு அழைப்பானை விடுத்துள்ளது.

மருத்துவ சிகிச்சைக்காக 16 செப் 2026 நாட்டிலிருந்து(13ம் பக்கம் பார்க்க)



இன்று $200,000 வரை ஒரு புதிய வீட்டின் மீது மிச்சப்படுத்திடுங்கள்
நாளை அது நிறைய குடும்பங்களாகவும் நிறைய வீடுகளாகவும் பெருகும்



புதிய வீட்டின் மீது $200,000 வரையிலும் எவ்வாறு மிச்சப்படுத்துவது என்பதை பின்வரும்இணையப் பக்கத்தில் அறிந்துகொள்ளுங்கள்:
ontario.ca/MoreHomesFaster

Ontario

ஒன்ராறியோ அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வெளியிடப்பட்டது.

# தியாகதீபம் திலீபனின் 39வது ஆண்டு நினைவேந்தல்!

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து நீராகாரமின்றி உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 39வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் 15 செப்டம்பர் 2026 செவ்வாய்க்கிழமை பல பகுதிகளில் அனுஷ்டிக்கப் பட்டன.

1). மீளக்குடியமர்தல் என்ற பெயரில் இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப் படும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

2). சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.

3). அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

4)ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.

5). தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும். ஆகிய ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து நீராகாரமின்றி உண்ணாவிரதம் இருந்து தியாக தீபம் திலீபனின் கோரிக்கைகள் எவையும் நிறைவேற்றப்படாத நிலையில், 12 நாட்களின் பின்னர் செப்டெம்பர் 26ஆம் திகதி காலை 10.48 மணிக்கு அவரது உயிர் பிரிந்தது.

யாழ்ப்பாணம், நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் தியாகி தீலிபன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த நேரம் காலை 9.45 மணியளவில்



அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பமானது. மூத்த போராளியும் மாவீரர்களின் தந்தையுமான பஷீர் காக்கா பொதுச் சுடர் ஏறியதை தொடர்ந்து, நினைவேந்தலில் கலந்து கொண்டவர்கள் மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

தமிழ் மக்களின் உரிமைக்காக ஐந்தம்சக் கோரிக்கைகளை முன் வைத்து நீராகாரமின்றி 12 நாட்கள் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 39ஆவது ஆண்டு நினைவேந்தல் முல்லைத் தீவு கள்ளப்பாடு பகுதியில் அமைந்துள்ள வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மக்கள் தொடர்பகத்தில் செவ்வாய்க் கிழமை உணர்வெழுச்சியுடன் ஆரப்பிக்கப்பட்டது.

அந்த வகையில் அகவணக்கம் செலுத்தப்பட்டதையடுத்து தியாகதீபம் திலீபனின் உருவப்படத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுடரேற்றி நினைவேந்தலை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து, கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் உறுப்பினர் மகாதேவா குணசிங்கராவினால் தியாகதீபம் திலீபனின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப் பட்டது. அதனையடுத்து,குறித்த நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்றிருந்தவர்களால் தியாக தீபம் திலீபனின் உருவப்படத்திற்கு மலர்தூவி உணர்வெழுச்சியுடன் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதேவேளை திருகோணமலையிலும் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு திருகோணமலை சிவன் கோயிலடிக்கு முன்னால் இடம்பெற்றது.

39 ஆவது நினைவு தினமாக இதன் போது தியாக தீபம் திலீபனின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், ஈகைச் சுடரும் ஏற்றப்பட்டு அவரது நினைவு அனுஷ்டிக்கப்பட்டது. நிகழ்வில் அரசியல் பிரதிநிதிகள், காணாமல் போன உறவுகளின் சங்கங்கள்,சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு திலீபனின் தியாகத்தை நினைவு கூர்ந்தனர்.

இதேவேளை தியாக தீபம் திலீபனை நினைவுகூரும் வகையில் நான்காவது வருடமாக நல்லூரில் வரலாற்று ஆவணக் கண்காட்சி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் 20ஆம் திகதி மாலை 7 மணிக்கு ஆரம்பமாகும் இந்தக் கண்காட்சி, தொடர்ந்து 27ஆம் திகதி வரை ஒரு வார காலத்திற்கு நல்லூரில் நடைபெறவுள்ளது. இது தொடர்பான ஊடக சந்திப்பு இன்று யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்றபோது, கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் சார்பில் யாழ். மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் வரதராஜன் பார்த்தீபன் இதனைத் தெரிவித்தார்.

திலீபனின் வரலாறு மற்றும் அவரது தியாகங்களை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் வகையில் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்த ஆண்டுக்கான கண்காட்சியில் திலீபனின் குடும்பத்தினர், அவருடன் பயணித்தவர்கள் மற்றும் அவர் கல்வி கற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் உள்ளிட்டோர் இணைந்து வரலாற்று ஆவணங்களைத் தொகுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் காட்சிப்படுத்தப் பட்ட ஆவணங்களில் காணப்பட்ட சில பிழைகள் மற்றும் குறைபாடுகள் குடும்பத்தினர் மற்றும் அவருடன் பயணித்தவர்களின் உதவியுடன் திருத்தப்பட்டு, இம்முறை முழுமையான ஆவணமாகத் தொகுக்கப் பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.


Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• Vistation
• Funeral & Memorial Service
• Reception
• Burial • Cremation



Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
• Lock in the cost at today's prices
• Convenient time payments
• Insured against early death

EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com



# நாமலுக்காக ரணில் உருகி வழிவது சஜித்தை அரசியலில் இருந்து ஒதுக்கவா?

அரசியலில் சிலரை மையப்படுத்தி சில வேளைகளில் ஒரு காற்று அடிக்கும். இது தென்றலாக இருக்குமா அல்லது புயலாக இல்லையெனில் சூறாவளியாக மாறுமா என்று உடனடியாகத் தெரியாது. கொஞ்சம் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

கடந்த ஒரு வாரமாக இலங்கை அரசியலில் இந்தக் காற்று நாமல் ராஜபக்சவை நோக்கி அடித்தது. ராஜபக்சக்களின் இளவரசர் என்றும் பேபி என்றும் அழைக்கப்படும் நாமலின் எதிர்காலம் ராசியானதாக இருக்குமா அல்லது ராசியில்லாத ராஜாவாக இருக்குமா என்பதை இப்போது சொல்ல முடியாது.

இலங்கை அரசியலில் ராஜபக்ச குடும்பத்துக்கு எண்பது ஆண்டுகளை எட்டும் தொடர்பு உண்டு. இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ். சேனநாயக்கவின் ஐக்கிய தேசிய கட்சியின் முதலாவது ஆட்சியில் அமைச்சராக விருந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க, 1951 செப்டம்பரில் அமைச்சர் பதவியை துறந்து விட்டு அக்கட்சியிலிருந்து வெளியேறி எதிர்க்கட்சிக்கு சென்ற போது முதலாவது ஆளாக அவரோடு சேர்ந்து எதிர் திசைக்குப் போனவர்களில் டி.ஏ. ராஜபக்ச முக்கியமானவர்.

இதனால் பண்டாரநாயக்க 1952 செப்டம்பர் 27ம் திகதி சிறிலங்கா சுதந்திர கட்சியை ஆரம்பித்த போது அதன் நிறுவக உறுப்பினராக டி.ஏ.ராஜபக்ச அமைந்தது வரலாறு. இவரது சகோதரரான டி.பி.ராஜபக்ச மற்றும் இவரது பிள்ளைகள் என்பதுடன் நிற்காது, டி.ஏ.ராஜபக்சவின் பிள்ளைகளான மகிந்த, சாமல், பசில், கோதபாய என்ற தொடர் நாமல் ராஜபக்சவையும் அரசியலில் உள்வாங்கியது. மகிந்த ராஜபக்சவும் அவரது சகோதரர்களும் உருவாக்கிய பொதுஜன பெரமுன கட்சியின் ஊடாக கடந்த தேர்தலில் போட்டியிட்டவர்கள் படுதோல்வியடைந்தனர். கிடைத்த மூன்றரை லட்சம் வாக்குகளால் இக்கட்சிக்கு இருவர் மட்டும் தெரிவாக, நாமல் ராஜபக்சவுக்கு தேசிய பட்டியல் இடம் கொடுத்தது.

இருப்பினும், இவரையே தங்கள் கட்சியின் அடுத்த ஜனாதிபதி தேர்தல்(?) வேட்பாளர் என்று ஆரம்பத்தில் கூறி வந்த பொதுஜன பெரமுன, பின்னர் இவரே அடுத்த ஜனாதிபதி என்றும் அறிமுகம் செய்ய ஆரம்பித்தது. அந்தத் தொப்பியை விருப்புடன் லாவகமாக எடுத்து தமது தலையில் அணிந்து கொண்ட நாமல் ராஜபக்ச நாடு தழுவிய ரீதியில் பெருமளவு ஆதரவு சேர்க்கும் கூட்டங்களை நடத்த முயற்சித்த வேளையில் அவருக்குச் சோதனை வந்தது.

நுணலும் தன் வாயால் கெடும் என்ற பழமொழி நாமலுக்கு மிகவும் பொருந்தும். தொடர்ந்து அநுர அரசுக்கு எதிராக இவர் தொடுத்து வந்த சவாலுக்கு அநுர அரசு தங்கள் செயல் மூலம் பதிலளிக்க கொஞ்சக் காலம் சென்றது. கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி.யின் மறுவடிவம்) மீண்டும் மீண்டும் ஒன்றையே கூறி வந்தது.

ஊழல் ஒழிப்பு என்ற இரட்டைச் சொல்லே அது. ராஜபக்ச குடும்பம் அல்லது ராஜபக்ச சகோதரர்களும் வாரிசுகளும் அவர்கள் ஆட்சிக்காலத்தில் மேற்கொண்ட கையூட்டல், கையாடல், வெளிநாடுகளில் பதுக்கி வைத்த கோடிக்கணக்கான பணம் போன்ற கொள்ளை, களவு ஆகிய ஊழல்களை தமது அரசு வெளிக்கொண்டு வரும் என்பதே தேசிய மக்கள் சக்தி ஒவ்வொரு மேடையிலும் மந்திர வார்த்தைகளாக உச்சாடனம் செய்தது.

புலிகள் அழிப்பு, பயங்கரவாத ஒழிப்பு என்ற மாய வார்த்தைகளில் அள்ளுப்பட்டு ராஜபக்சக்களை ஜனாதிபதிகளாகவும், பிரதமர்களாகவும், அமைச்சர்களாகவும் கதிரையேற்ற தங்கள் வாக்குகளை அள்ளிப் போட்டவர்கள் (பெரும்பான்மை இனத்தவர்களே ,திலும் பெரும்பான்மை) ஒரு மாற்றத்தை விரும்பி தங்கள் வாக்கை மாற்றிக் கொண்டனர். தேசிய மக்கள் சக்தியை நம்பியதால் கிடைத்தது இந்த மாற்றம். இது விடயத்தில் வடக்கு கிழக்கு மக்களில் கணிசமானவர்களும் அடங்குவர்.

ஆட்சிக்கு வந்த அநுர தலைமையிலான அரசு தேர்தல் வாக்குறுதியான ஊழல் ஒழிப்பு நடவடிக்கையை முதல் வருடத்தில் எதிர்பார்த்தளவுக்கு மேற்கொள்ளவில்லை. அதற்குத் தேவையான தரவுகள், சாட்சியங்கள், ஆவணங்களை சேகரிப்பதிலும், நாட்டில் புரையோடிக் கொண்டிருந்த போதைவஸ்தைத் தடுப்பதிலும் அரசின் கவனம் இருந்தது. பொருளாதார மீட்சியுடன் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை ஆர்ப்பாட்டமின்றி மேற்கொண்டு வந்தது.

இச்சந்தர்ப்பத்தில் தான் அநுர அரசுக்கு நேரடியாக சவால் விடும் அரசியல்வாதியாக நாமல் தம்மை முன்னிலைப்படுத்த ஆரம்பித்தார். வெளிநாடுகளில் பதுக்கப்பட்ட பணத்தை மீட்க மாட்டீர்களா என்ற சவால் ஒவ்வொரு மேடையிலும், நாடாளுமன்ற உரைகளிலும் இவரால் முன் வைக்கப்பட்டு வந்தது.

ராஜபக்ச குடும்பத்தினர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் தமது தந்தை மீதும், அவரது பிள்ளைகளான மூவர் மீதும் அநுர அரசு கடும் போக்கில் செயற்பட மாட்டாது என்று நாமல் நம்பியிருந்ததாக விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்ற இவரது முன்னைய தோழர்கள் சிலர் பொதுவெளியில் தெரியுமளவுக்கு இப்போது கூறி வருகின்றனர்.

இதற்கான காரணமாக 1987-1989 காலப்பகுதியில் மகிந்த ராஜபக்சவுக்கும் ஜே.வி.பிக்கும் இருந்த நெருக்கமான தொடர்பு சொல்லப்படுகிறது. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்து ஜே.வி.பி. கட்டுமீறிய ஆர்ப்பாட்டங்களை அப்போது மேற்கொண்டிருந்தது.

இதனைமுறியடிக்க ஜே.வி.பி. யின் ஆதரவாளர்கள் என்று கூறப்பட்ட ஆயிரக்கணக்கான இளைஞர்களை அரச படைகள் கொலை செய்தன. கழுத்தில் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டவர்களும், தலையில்லாத முண்டங்களான உடலங்களும், கடல்களிலும் வாவிகளிலும் வீசப்பட்ட அடையாளம் தெரியாத சடலங்களும் பொது மக்களுக்கு அச்சத்தை ஊட்டின. ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசு இக் கொலைகளுக்கு பூரண அனுமதியை படையினருக்கு வழங்கியிருந்தது.

அப்போது மகிந்த ராஜபக்ச, தோல்வியடைந்த முன்னாள் எம்.பியாக அம்பாந்தோட்டையிலுள்ள இல்லத்தில் வசித்து வந்தார். பதவி இழந்திருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆதரவுடன் ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசின் மனித உரிமை மீறல்களை ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்புக்கு பல தடைகளைத் தாண்டி மகிந்த எடுத்துச் சென்றார். ,

இலங்கையில் இடம்பெற்ற சட்டத்துக்குப் புறம்பான படுகொலைகள், நீதி விசாரணையற்ற காணாமல் போனோர்கள் விவகாரம் என்பவற்றை முதன் முதலாக ஜெனிவாவுக்கு எடுத்துச் சென்றவர் மகிந்த ராஜபக்ச தான்.

(பின்னர் தமது ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக இடம் பெற்ற மனித உரிமை மீறல்களை ஜெனிவா கண்டித்த போது அதனை நிராகரித்தவரும் இவரே என்பது

**கட்டுரையாளர்:-**
**பனங்காட்டான்**

இன்னொரு பக்கக்கதை).

சுமார் நாற்பதாண்டுகளுக்கு முன்னர் மகிந்த ராஜபக்ச தங்கள் தரப்புக்கு ஆதரவாக ஜெனிவா வரை சென்றவர் என்ற காரணத்தினால் அவர் மீது அல்லது அவர் குடும்பத்தின் மீது கடும்போக்கில் ஜே.வி.பி.யின் தேசிய மக்கள் சக்தி அரசு நடவடிக்கை மேற்கொள்ளாது என்று நாமல் ராஜபக்ச நம்பியிருந்ததாக அவரது பழைய கூட்டாளிகள் தங்களுக்குள் பேசி வருகின்றனர்.

ஊழல் ஒழிப்பை தங்கள் அரசின் பிரதான செயற்பாடாக கூறி வந்த அநுர அரசு தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியவாறு அதனை நிறைவேற்ற ஆரம்பித்துள்ளது தெரிகிறது.

ஆனால் இதனை அரசியல் பழிவாங்கல் என்று மகிந்த ராஜபக்சக்களுடன் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஒட்டியிருந்த ரணிலும் கூறி வருவது தான் இப்போது பிரதான பேசுபொருளாகியுள்ளது.

அரகலய போராட்ட காலத்துக்கு முன்னர் ராஜபக்சக்களின் ஊழலை பகிரங்கமாகச் சாடி வந்தவர் தாமே என்பதை மறந்து விட்ட ரணில் இப்போது அவர்களுக்காக உருகி வழிவது வேடிக்கையானது.

இது, உண்மையிலேயே ராஜபக்சக்களுக்கான ஆதரவு என்பதை விட சஜித் பிரேமதாசவை அரசியலிலிருந்து ஓரங்கட்டுவதற்கான ஒரு செயற்பாடாகவே அவர் மேற் கொள்வது அப்பட்டமாகத் தெரிகிறது.

நாமல் ராஜபக்ச கைது, சட்ட நடவடிக்கை, விளக்கமறியல் ஆகியவைகளை ரணில் பகிரங்கமாகக் கண்டித்தது போல் சஜித் பிரேமதாச இதுவரை எதுவுமே கூறாமல் அசாதாரண மௌனம் சாதித்து வருகிறார்.

நாமல் மீது அநுர அரசு மேற் கொண்டிருக்கும் சட்டப்படியான நடவடிக்கைகள் அவரை அரசியலில் மேலெழ வைத்து விடலாம் என்ற அச்சம் சஜித்திடம் இருப்பதை அவரது மௌனம் பகிரங்கப்படுத்துகிறது. ரணில் நாமலுக்கு ஆதரவாக செயற்படுவதும் இதற்காகவே என்பதும் சஜித்துக்குப் புரியும்.

எதுவானாலும், கடந்த 12ம் திகதி அநுராதபுரத்தில் நாமலால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுஜன பெரமுனவின் கூட்டத்தின் அறுவடையே அடுத்த நகர்வு என்ன என்பதற்கான கருவாக இருக்கும். .

ஆனால், நாமல் விவகாரம் ராஜபக்ச குடும்பத்துடனான ஒரு தொடர்கதையாவதற்கான சாத்தியமே பெரிதளவில் காணப்படுகிறது.

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.


05 செப்டம்பர் 2026 முதல் 18 செப்டம்பர் 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**


## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு ஆறுமுகம் செல்லப்பா

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த ஓய்வுபெற்ற முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் திரு ஆறுமுகம் செல்லப்பா அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 11 செப்டம்பர் 2026 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு ஆறுமுகம் செல்லப்பா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 24வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தம்பிராஜா ஞானானந்தன்

வேலணை தலையாட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களது 24வது ஆண்டு நினைவு நாள் 08 செப்டம்பர் 2026 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள் திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை

புங்குடுதீவு நான்காம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரத்தை வதிவிடமாக வும் சாவகச்சேரி, கனடா ஆகிய இடங்கைள வாழ்விடமாகவும் கொண்டிருந்த சாவகச்சேரி ரஞ்சனா கபே உரிமையாளர் திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாள் 10 செப்டம்பர் 2026 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக் கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் ஹீராம் ஞானச்செல்வம்

கனடாவைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வன் ஹீராம் ஞானச்செல்வம் அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாள் 05 செப்டம்பர் 2026 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது பெற்றோர்கள் உடன்பிறப்பு இணைந்து அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வன் ஹீராம் ஞானச்செல்வம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது பெற்றோர்கள் உடன்பிறப்பு மற்றும் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 36வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம்

யாழ்ப்பாணம் வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது 36வது ஆண்டு நினைவு நாள் 14 செப்டம்பர் 2026 விநாயகர் சதுர்த்தி தினமான திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது பெற்றோர், சகோதர்கள் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 32வது 6வது ஆண்டு நினைவஞ்சலிகள்



### திரு சின்னப்பு சிங்கநாயகம்
### திருமதி பரிமளம் சிங்கநாயகம்

தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்களான திரு சின்னப்பு சிங்கநாயகம் அவர்களது 32வது ஆண்டு நினைவு நாளுக்காகவும் திருமதி பரிமளம் சிங்கநாயகம் அவர்களது 6வது ஆண்டு நினைவு நாளுக்காகவும் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக 09 செப்டம்பர் 2026 புதன்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு திருமதி சிங்கநாயகம் பரிமளம் இணையர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



05 செப்டம்பர் 2026 சனிக்கிழமை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகம் முத்துலிங்கம் அவர்களது 4வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



01 செப்டம்பர் 2026 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு ஸ்ரீகுமரன் சுவர்ணா இணையர்களின் திருமண இணைவு நன்நாளாகும். அன்றைய நாளுக்காக இணையர்கள் 07 செப்டம்பர் 2026 திங்கட்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



08 செப்டம்பர் 2026 செவ்வாய்க்கிழமை வேலணை தலையாட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களது 24வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



09 செப்டம்பர் 2026 புதன்கிழமை தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்களான திரு சின்னப்பு சிங்கநாயகம் அவர்களது 32வது ஆண்டு நினைவாகவும் திருமதி பரிமளம் சிங்கநாயகம் அவர்களது 6வது ஆண்டு நினைவாகவும் அன்னார்களது குடும்பத்தினர் அன்றையதினம் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



10 செப்டம்பர் 2026 வியாழக்கிழமை புங்குடுதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



11 செப்டம்பர் 2026 வெள்ளிக்கிழமை யாழ்.சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த ஓய்வு பெற்ற முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் திரு ஆறுமுகம் செல்லப்பா அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



09 செப்டம்பர் 2026 புதன்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு முத்துத்தம்பி பசுபதிப்பிள்ளை அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் 12 செப்டம்பர் 2026 சனிக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



14 செப்டம்பர் 2026 திங்கட்கிழமை ஆவணி சதுர்த்தி தினத்தன்று வேலணை கிழக்கைச் சேர்ந்த செல்வன் இன்பநாயகம் ஜெயந்தன் அவர்களது 36வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது பெற்றோர்களும் சகோதரங்களும் இணைந்து அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



17 செப்டம்பர் 2026 வியாழக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



# ஐ.நா. கூட்டத் தொடர் காலத்தில் கைது செய்யப்பட்ட நாமல்

12 செப்டம்பர் 2026 சாவகச்சேரியில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களும் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களும் அனுர அரசின் இரண்டு ஆண்டு கால ஆட்சிக்கு எதிராக உண்ணாவிரதம் இருந்த அதே காலப் பகுதியில், சாவகச்சேரி மக்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்ற உறுப்பினராகிய அர்ஜுனா அனுராதபுரத்தில், ராஜபக்சக்களின் கூட்டத்தில் முன் வரிசையில் காணப்பட்டார்.

இந்த உண்ணாவிரதத்துக்கு அடுத்த நாள் அதாவது 13 செப் 2026 தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவை யாழ்ப்பாணத்தில் ஒரு பேரணியை ஒழுங்குப்படுத்தி இருக்கிறது. தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் எல்லாப் பிரச்சனைகள் தொடர்பிலும் அனைத்துலக கவனத்தை ஈர்ப்பதும் அனைத்துலக விசாரணைப் பொறிமுறையைக் கேட்பதும் இந்தப் பேரணியின் பிரதான நோக்கங்கள் ஆகும்.

ஐநாவின் 63ஆவது கூட்டத் தொடர் கடந்த ஏழாம் திகதி தொடங்கி நடந்து கொண்டிருக்கும் ஒரு பின்னணியில் இந்தப் பேரணி இடம் பெறவிருக்கிறது. கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகே உள்ள ஐநா அலுவலகத்தில் இருந்து தொடங்கி யாழ்ப்பாணம் கிட்டு பூங்கா வரை செல்லும் இந்த பேரணியானது அங்கே ஒரு பெரும் கூட்டத்துடன் முடிவடையும்.

இந்த இரண்டு காட்சிகளும் ஐநாவின் 63ஆவது கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கும் ஒரு காலச் சூழலில் இடம்பெற்றுள்ளன. கடந்த வாரம் நாமல் ராஜபக்ச கைது செய்யப்பட்டதும் இதே காலச் சூழலில் தான் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். மூன்றாம் திகதி மனித உரிமைகள் ஆணையாளருடைய அறிக்கை வெளியிடப்பட்டது.ஏழாம் திகதி மனித உரிமைகள் கூட்டத் தொடர் தொடங்கியது. இந்தப் பின்னணியில் நான்காம் திகதி நாமல் ராஜபக்ச கைது செய்யப்பட்டிருக்கிறார்.

கடந்த சில வாரங்களாக எதிர்க்கட்சிகள் மக்கள் சந்திப்புகளை ஒழுங்குபடுத்தி வருகின்றன. அவ்வாறு நாமல் ஒழுங்குபடுத்திய ஒரு மக்கள் சந்திப்பு 12 செப் 2026 இடம்பெற்றது. அந்தச் சந்திப்பு நடப்பதற்கு முன்னரே நாமல் கைது செய்யப்பட்டு விட்டார். அதனால் அந்தக் கூட்டத்துக்குரிய ஏற்பாடுகளை அவருடைய தகப்பன் மகிந்த முன்னெடுத்தார். மஹிந்த கூட்டத்துக்கு தலைமை தாங்கினார். ஆனால் மௌனமாக இருந்தார். எதையும் பேசவில்லை. அந்தக் கூட்டம் அவர்கள் எதிர்பார்த்த வெற்றியைக் கொடுத்திருக்கிறது என்பதனைத் தான் அனுராதபுரத்தில் திரண்ட மக்கள் கூட்டம் காட்டுகிறது.

அதேசமயம் அரசாங்கமும் எதிர்க்கட்சிகளைப் போன்று மக்கள் சந்திப்புகளை ஒழுங்குப்படுத்தி வருகிறது. 12 செப் 2026 அவ்வாறு பொலநறுவையில் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு கூட்டம் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்றது. ஆனால் ராஜபக்சகளின் கூட்டம் பிரம்மாண்டமானது என்பதனை விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். அப்படியென்றால் நாமலின் கைது அவருடைய கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் கோபத்தோடு கூடிய எழுச்சியை ஊக்குவித்திருக்கிறதா?

நாமல் கைது செய்யப்பட்டமை ஊழலுக்கு எதிரான அதன் நடவடிக்கைகளில் அரசாங்கம் முன்னேறி வருவதைக் காட்டும் ஆகப்பிந்திய உதாரணம் எனலாம். ஊழல் மோசடி போன்றவற்றுக்கு எதிராக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் அனைத்துலக மட்டத்திலும் கவனத்தை ஈர்த்திருப்பது தெரிகிறது.

இந்த மாதம் முதலாம் திகதி வெளி வந்த சர்வதேச மன்னிப்புச் சபையின்



அறிக்கையில் அது சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. அதன் பின் மூன்றாம் திகதி வெளிவந்த ஐநா மனித உரிமைகள் ஆணையாளருடைய அறிக்கையிலும் அது சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் போருக்குப் பிந்தைய காலத்தில் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றங்கள் தொடர்பான சில வழக்குகள் உள்ளிட்ட, அரசாங்கம் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் வரவேற்கப்பட்டுள்ளன. இருப்பினும் உண்மை, நீதி, நல்லிணக்கம் மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தம் ஆகியவற்றில் அரசாங்கம் கொண்டுள்ள உறுதிப்பாடுகளை உறுதியான நடவடிக்கைகளாக மாற்றுவதற்கு மேலும் பல நடவடிக்கைகள் தேவை என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதன்பின் ஏழாம் திகதி தொடங்கிய 63ஆவது ஐநா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் பேசிய ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தின் பிரதி உயர் ஸ்தானிகர் ஊழலுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று கூறியுள்ளார். இலங்கைவரலாறு

அதாவது ஊழலுக்கு எதிராக அரசாங்கம் கடந்த இரண்டு ஆண்டுகளாக முன்னெடுத்து வரும் கைது நடவடிக்கைகள்,விசாரணை நடவடிக்கைகள் போன்றன அனைத்துலகக் கவனத்தை ஈர்த்திருக்கின்றன. அது இலங்கைத் தீவின் உள்நாட்டு நீதி விசாரணைக் கட்டமைப்பின் நம்பகத் தன்மையை உலக அளவில் பலப்படுத்த உதவுகிறது. இந்தக் கைதுத் தொடரில் ஆகப்பிந்திய நடவடிக்கையாக நாமல் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

ஏற்கனவே ஒரு முன்னாள் ஜனாதிபதி ஆகிய ரணில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். இப்பொழுது வருங்கால ஜனாதிபதி வேட்பாளராகக் கருதப்படும் நாமல் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இது எதிர்க்கட்சிகளை தற்காப்பு நிலைக்குத் தள்ள உதவும். ராஜபக்சக்களை தற்காப்பு நிலைக்குத் தள்ள உதவும்.எதிர்க்கட்சிகள் தங்களுக்கு இடையே ஒற்றுமைப்பட முடியாதவைகளாகக் காணப்படுகின்றன. சஜித் பிரேமதாச தகப்பனைப் போல தலைமைத்துவப் பண்பு உடையவர் அல்ல. தேசிய மக்கள் சக்தியின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துக்கு முன்னால் எதிர்க்கட்சிகளுக்குத் தலைமை தாங்கும் சக்தி உடையவராக சஜித் காணப்படவில்லை. எதிர்க்கட்சிகளுக்கு சஜித் தலைமை தாங்க முடியாத ஒரு வெற்றிடத்தில், ஒரு பகுதி எதிர்க்கட்சிகள் நாமலை எதிர்பார்ப்போடு பார்ப்பது தெரிகிறது.

ஆனாலும் எல்லா எதிர்க்கட்சிகளாலும் சந்தேகத்துக்கு இடமின்றி ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு தலைமையாக நாமல் இன்று வரை வளரவில்லை. இது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்குள்ள ஒரு முக்கியமான சாதகமான அம்சம்.

இப்படியாக எதிர்க்கட்சிகள் மத்தியில் பலமான தலைமை அல்லது ஐக்கியம் இல்லாத ஒரு பின்னணிக்குள், ஒப்பீட்டளவில் தலைமைத்துவப் பண்பு மிக்கவர் என்று கருதப்படும் நாமலை உள்ளே போட்டதன்மூலம் அரசாங்கம் எதிர்க்கட்சிகள் தங்களை ஒருங்கிணைப்பதற்குத் தேவையான அவகாசத்தை வழங்க விரும்பவில்லை என்று தெரிகிறது.



இது தென்னிலங்கை அரசியல். ஆனால் தமிழ் நோக்கு நிலையிலிருந்து பார்க்கும்போது நாமலின் கைது வேறு ஒரு விளைவை ஏற்படுத்தக் கூடியது. ஏற்கனவே மனித உரிமைகள் கண்காணிப்பகம், ஐநா போன்றன அரசாங்கம் ஊழலுக்கு எதிராகப் போராடி வருகிறது என்று சுட்டிக்காட்டியிருக்கும் ஒரு பின்னணியில், ஐநாவின் 63ஆவது கூட்டத்தொடர் நடக்கவிருந்த ஒரு பின்னணியில், நாமலைக் கைது செய்ததன் மூலம் அரசாங்கம் ஐநாவின் கவனக்குவிப்பு மையத்தை இடம்மாற்ற விளைகிறதா? பொறுப்புக் கூறலில் இருந்து ஐநாவின் கவனக் குவிப்பு மையம் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளின் மீது திசை மாற்றப்படுகிறதா?

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் அறிக்கை,ஐநா மனித உரிமைகள் ஆணையாளருடைய அறிக்கை போன்றன அரசாங்கம் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளில் முன்னேறி வருவதைச் சுட்டிக்காட்டும் அதே சமயம், பொறுப்புக்கூறும் விடயத்தில் அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுகளை முன் வைக்கக் காணலாம். பொறுப்புக் கூற வேண்டிய தனது பொறுப்பிலிருந்து ஐநாவின் கவனக் குவிப்பு மையத்தை ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் மீது குவிமையப்படுத்தும் நோக்கம் நாமலின் கைதுக்கு பின்னால் உண்டா?

நாமலை கனகாலம் சிறையில் வைத்திருந்தால் அவர் நீண்ட எதிர்காலத்தில் பலமடையக்கூடிய வாய்ப்புகளும் உண்டு. எதிர்க்கட்சிகளுக்கு உறுதியான ஒரு தலைவர் கிடைக்கக் கூடாது என்று சிந்தித்தால் நாமலை தற்காப்பு நிலையில் வெளியிலேயே வைத்திருப்பது தான் புத்திசாலித்தனமானது. அவரைத் தொடர்ந்து அடைத்து வைத்திருப்பதனால் சில சமயம் அவர் தியாகியாகி விடக்கூடும். என்பதைத் தான் அனுராதபுரக் கூட்டம் உணர்த்துகின்றதா?

## ஒரு செங்கல்லை வைத்தாலும் போராட்டம்!

(20ம் பக்கத் தொடர்ச்சி) எங்களுடைய வாழ்வாதாரமும் தொழிலும் முற்றிலும் நசுக்கப்படும். அதேபோல் இந்த ஏகப்பட்ட பள்ளிகள் உள்ளன. சாந்தோம் பகுதி ஒரு பள்ளி மண்டலமாகவே இருக்கிறது. இங்குள்ள மக்கள் மற்றும் குழந்தைகள் அந்த வழியாக தான் பள்ளிகளுக்கு சென்று வருகிறார்கள். இது எங்கள் மக்களுக்கு மட்டுமல்லாமல், கிட்டத்தட்ட 20,000 பள்ளி மாணவர்களின் எதிர்காலத்தையும் வாழ்க்கையையும் கேள்விக்குறியாக்கும். முதலமைச்சருக்கு ஒரு சிறிய கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தேர்தலில் வாக்கு கேட்கும் போது ‘குட்டீஸ்... குட்டீஸ்...’ என்று உருகினாரே, அந்த ‘குட்டீஸ்’களின் வாழ்க்கையை தான் இப்போது கெடுக்க போகிறார் என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறோம். அவர் வெளிநாட்டிலிருந்து 14ஆம் தேதி திரும்பிய பிறகு, அவருடைய பதிலுக்காகவும் அறிவிப்புக்காகவும் நாங்கள் காத்திருக்கிறோம்.

எங்கள் கோரிக்கையை ஏற்று, உடனடியாக இங்கு சட்டசபை அமைக்கும் அரசாணையை ரத்து செய்து



விட்டால், அவருக்கு கோடான கோடி நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம். ஒரு செங்கல்லை வைத்தாலும்! ஒரு வேளை அதை செய்யாத பட்சத்தில், அவருக்காக இன்னும் மூன்று அல்லது நான்கு நாட்கள் காத்திருப்போம். அதற்கும் அவர் செவிசாய்க்காமல், அந்த சட்டசபை அமைக்கும் பணியில் ஒரு செங்கலை நட்டு வைத்தாலும் அதற்கான கடும் விளைவுகளை அவர் சந்திக்க நேரிடும் என்பதை இந்த தருணத்தில் தெரிவித்து கொள்கிறோம். அடுத்தகட்ட போராட்டமாக ஒட்டு மொத்தத் தமிழகம் மட்டுமல்லாமல், புதுச்சேரியில் உள்ள அனைத்து மீனவ கிராமங்களையும் ஒருங்கிணைத்து மிக பெரிய அளவில் போராட்டம் நடத்துவோம்’ என்றார்.

# அமெரிக்காவைச் சார்ந்திருப்பதைக் குறைக்க ஐரோப்பிய ஒன்றியத்துடன் நெருக்கத்தை நாடும் கனடா!

அமெரிக்காவுடனான வர்த்தக மற்றும் அரசியல் உறவுகளில் ஏற்பட்டுள்ள பதற்றங்களுக்கு மத்தியில், ஐரோப்பிய ஒன்றியத்துடன் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு நெருக்கமான உறவை உருவாக்க கனடா முயன்று வருகிறது. பிரதமர் மார்க் கார்னி, கனடாவை ஐரோப்பியரல்லாத நாடுகளில் மிகவும் ஐரோப்பியத் தன்மை வாய்ந்த நாடு என வர்ணித்துள்ளதுடன், ஐரோப்பிய ஒன்றியத்தின் முழுமையான உறுப்பினராக இணைவதை விட அந்த அமைப்புடன் தனித்துவமான மற்றும் ஆழமான கூட்டாண்மையை உருவாக்குவதே கனடாவின் நோக்கம் என தெரிவித்துள்ளார்.

மார்க் கார்னி இந்த வாரம் பிரான்சின் ஸ்ட்ராஸ்பர்க் நகருக்குச் செல்கிறார். அங்கு புதன்கிழமை நடைபெறவுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலை குறித்த நிகழ்வில் பங்கேற்கும் முதல் அரசாங்கத் தலைவர் என்ற சிறப்பை அவர் பெறுகிறார். இதனைத் தொடர்ந்து, மறுநாள் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் கார்னி உரையாற்ற உள்ளார்.

அவரது ஐரோப்பியப் பயணத்தின் ஒரு பகுதியாக பிரிட்டனின் லிவர்பூல் நகருக்கும் அவர் செல்கிறார். அங்கு பிரிட்டனின் புதிய பிரதமர் ஆண்டி பர்ன்ஹாமை முதல் முறையாக சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

### ஐரோப்பாவுக்கு கனடாவின் முக்கியத்துவம்!

ஐரோப்பிய ஒன்றியம்—கனடா ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தக் கோரும் மார்ச் மாதத் தீர்மானத்தின் முக்கிய ஆதரவாளரான ஜெர்மனியைச் சேர்ந்த ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் டோபியாஸ் கிரெமர், கார்னியின் வருகையை மகத்தான சின்னம் என வர்ணித்துள்ளார்.

கனடாவிடம் ஐரோப்பாவுக்கு மிகவும் தேவையான பல முக்கிய வளங்கள் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். குறிப்பாக ஆற்றல் வளங்கள், அரிய கனிமங்கள் மற்றும் பதப்படுத்தப்படாத தாதுக்கள் போன்றவற்றில் கனடா முக்கிய பங்காற்ற முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்காவுடனான நெருங்கிய பொருளாதார ஒருங்கிணைப்பை நீண்ட காலமாகக் கொண்டிருக்கும் கனடா, அதிபர் டொனால்ட் டிரம்பின் வர்த்தகக் கொள்கைகளால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், அமெரிக்கச் சந்தையை மட்டுமே சார்ந்திருப்பதைக் குறைத்து புதிய பொருளாதார மற்றும் வர்த்தகக் கூட்டாளிகளைத் தேடும் அவசியம் கனடாவுக்கு ஏற்பட்டுள்ளது.

அதேவேளை, டிரம்பின் இரண்டாவது பதவிக்காலம் ஐரோப்பிய ஒன்றியத்திலும் கவலையை ஏற்படுத்தியுள்ளதாக கிரெமர் தெரிவித்துள்ளார். கனடாவைப் போலவே ஐரோப்பிய ஒன்றியமும் தனது வெளிநாட்டு உறவுகளைப் பன்முகப்படுத்தி ஒரே நாட்டைச் சார்ந்திருப்பதால் ஏற்படும் பொருளாதார மற்றும் பாதுகாப்பு அபாயங்களைக் குறைக்க முயன்று வருகிறது.

### நெருக்கமாகும் கனடா ஐரோப்பிய ஒன்றிய உறவு

கார்னி பிரதமராகப் பதவியேற்ற பின்னர், கனடாவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையிலான உறவு மேலும் வலுப்பெற்று வருகிறது.

ஐரோப்பிய ஒன்றியம் அல்லாத நாடுகளில், அதன் பாதுகாப்பு கொள்முதல் திட்டத்தில் இணைந்த முதல் நாடாக கனடா மாறியுள்ளது. அதே போல், ஐரோப்பிய நாடுகளின் பிரபலமான கலாச்சார இசைப் போட்டியான யூரோவிஷனில் கனடா இணைவதற்கான முயற்சிகளிலும் கார்னி ஈடுபட்டுள்ளார்.

அடுத்த மாதம் மாண்ட்ரீலில் ஐரோப்பிய ஒன்றியம் கனடா உச்சி மாநாட்டை கார்னி நடத்த உள்ளார். இந்த மாநாட்டின் மூலம் மிகவும் வலுவான மற்றும் ஆழமான பொருளாதார மற்றும் பாதுகாப்பு கூட்டாண்மையை உருவாக்குவதற்கான பேச்சுவார்த்தைகள் தொடங்கும் என அவர் தெரிவித்துள்ளார்.



காலநிலை மாற்றம் மற்றும் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட பல முக்கிய துறைகளில் கனடாவும் ஐரோப்பிய ஒன்றியமும் ஒரே மாதிரியான நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளதாக, கனடாவுடனான உறவுகளுக்கான ஐரோப்பிய நாடாளுமன்றக் குழுவின் தலைவரான ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ஜேவியர் மொரேனோ சான்செஸ் தெரிவித்துள்ளார்.

இரு தரப்புக்கும் இடையிலான டிஜிட்டல் வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பணிகளும் நடைபெற்று வருகின்றன. இது ஏற்கனவே நடைமுறையில் உள்ள ஊநுவுய எனப்படும் விரிவான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும்.

CETA மூலம் கிடைக்கக் கூடிய வாய்ப்புகளை குறிப்பாக சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் இன்னும் முழுமையாகப் பயன்படுத்தவில்லை என்றும் சான்செஸ் குறிப்பிட்டுள்ளார்.

### ஐரோப்பிய ஒன்றியத்தில் கனடா இணையுமா?

டிரம்பின் இரண்டாவது பதவிக்காலத்தில் அமெரிக்காவுடனான கனடாவின் உறவுகள் மோசமடைந்துள்ள நிலையில், கனடா எதிர்காலத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தில் முழு உறுப்பினராக இணையுமா என்ற விவாதமும் அதிகரித்துள்ளது. ஆனால் அந்தக் கருத்தை கார்னி தெளிவாக நிராகரித்துள்ளார்.

நாங்கள் ஐரோப்பிய ஒன்றியத்தில் உறுப்பினராக ஆக விரும்பவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதற்குப் பதிலாக ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஒரு தனித்துவமான கூட்டணியை ஏற்படுத்துவதே கனடாவின் நோக்கம் என அவர் கூறியுள்ளார். கனடாவும் ஐரோப்பிய ஒன்றியமும் ஒரே மாதிரியான விழுமியங்கள் மற்றும் முன்னுரிமைகளைப் பகிர்ந்து கொள்வதுடன், ஒன்றுக்கொன்று துணையாக அமையக்கூடிய பலங்களையும் கொண்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். இருப்பினும் ஏப்ரல் மாதத்தில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் 57 சதவீத கனடியர்கள் ஐரோப்பிய ஒன்றிய உறுப்புரிமைக்கு ஆதரவு தெரிவித்ததாகத் தெரிய வந்துள்ளது.

### சட்டரீதியாக உறுப்பினராக முடியுமா?

ஐரோப்பிய ஒன்றியத்தின் சட்ட விதிகளின்படி மனித மாண்பு, சுதந்திரம், ஜனநாயகம், சமத்துவம், சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் ஐரோப்பிய நாடு ஒன்றியம் சேர விண்ணப்பிக்க முடியும்.

ஆனால், ஐரோப்பிய நாடு என்பதற்கான குறிப்பிட்ட புவியியல் வரையறை அந்த ஒப்பந்தத்தில் தெளிவாக குறிப்பிடப்படவில்லை. இருந்த போதிலும், கனடா ஐரோப்பிய ஒன்றியத்தில் முழு உறுப்பினராக இணைவது நடைமுறையில் மிகவும் கடினமானதாக இருக்கும் என நிபுணர்கள் கருதுகின்றனர்.

பிரஸ்ஸல்ஸைத் தலைமையிடமாகக் கொண்ட புரூகல் சிந்தனைக் குழுவின் ஆய்வாளர் இக்னாசியோ கார்சியா பெர்செரோ, பொருளாதார ரீதியாகவோ அரசியல் ரீதியாகவோ கனடா ஐரோப்பிய ஒன்றியத்தில் உறுப்பினராகும் வாய்ப்பு யதார்த்தமானதாகத் தெரியவில்லை என தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்திலும் இது போன்ற ஒரு முன்னுதாரணம் உள்ளது. 1987ஆம் ஆண்டு, மொராக்கோ ஐரோப்பிய நாடு அல்ல என்ற காரணத்தால் ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னோடி அமைப்பில் உறுப்பினராகும் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

கனடாவுக்கு அருகில் டென்மார்க்கின் தன்னாட்சிப் பிரதேசமான கிரீன்லாந்து இருப்பதைச் சுட்டிக்காட்டிய சான்செஸ், புவியியல் ரீதியாக கனடா அவ்வளவு தொலைவில் இல்லை என்று நகைச்சுவையாகக் குறிப்பிட்டுள்ளார்.

### முழு உறுப்புரிமைக்கு மாற்றாக. ஆழமான கூட்டாண்மை

கனடா ஐரோப்பிய ஒன்றியத்தில் முழு உறுப்பினராக இணையாவிட்டாலும், அதனுடன் மிக நெருக்கமான உறவை உருவாக்க முடியும் என்பதற்கு ஐஸ்லாந்து மற்றும் சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளின் உறவுகள் உதாரணமாக உள்ளன என சான்செஸ் தெரிவித்துள்ளார்.

ஆனால் கனடாவின் நிலைமை சுவிட்சர்லாந்திலிருந்து வேறுபட்டது. கனடாவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையே அதிக தொலைவு இருப்பதால், சரக்குப் போக்குவரத்துக்கு அதிக செலவு ஏற்படுகிறது. மேலும், கனடாவுக்கு மிகப்பெரிய வர்த்தகச் சந்தையாக இருக்கும் அமெரிக்காவுக்கு ஐரோப்பிய ஒன்றியம் முழுமையான மாற்றாக அமைய முடியாது.

இதன் அளவை வெளிப்படுத்தும் வகையில், ஜீலை மாதத்தில் கனடாவின் மொத்த ஏற்றுமதிகளில் சுமார் 70 சதவீதம் அமெரிக்காவுக்குச் சென்ற நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்துக்குச் சென்ற ஏற்றுமதி சுமார் 5 சதவீதமாக மட்டுமே இருந்தது.

எனவே அமெரிக்கச் சந்தையை ஐரோப்பிய சந்தையால் முழுமையாக மாற்றுவது சாத்தியமில்லை என்றாலும், வர்த்தகம், பாதுகாப்பு, ஆற்றல், அரிய கனிமங்கள், தொழில்நுட்பம் மற்றும் காலநிலை மாற்றம் போன்ற துறைகளில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் உறவை ஆழப்படுத்துவது கனடாவுக்கு முக்கியமான மூலோபாய வாய்ப்பாக பார்க்கப்படுகிறது.

நாம் எவ்வளவு நெருக்கமாக ஒத்துழைக்க முடியுமோ, அவ்வளவு நல்லது என்று ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் டோபியாஸ் கிரெமர் தெரிவித்துள்ளார்.

இதனால் கனடாவின் தற்போதைய அணுகுமுறை ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதை நோக்கமாகக் கொண்டதல்ல மாறாக, அமெரிக்காவை மட்டுமே சார்ந்திருக்கும் நிலையை குறைத்து, ஐரோப்பாவுடன் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்புத் துறைகளில் நீண்டகால, தனித்துவமான மற்றும் வலுவான கூட்டாண்மையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# ஷிரந்தியிடம் 24ம் திகதி விசாரணை!

(7ம் பக்கத் தொடர்ச்சி) வெளியேற தயாரான நிலையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து ஷிரந்தி ராஜபக்ஷவிடம் குற்றப்புலனாய்வு அதிகாரிகள், நிதி குற்றப்புலனாய்வு பிரிவில் முன்னிலையாவதற்கான எழுத்து மூல அறிவிப்பைக் கையளித்திருந்தனர். சிங்கப்பூருக்கு பயணிக்க முற்பட்ட போதே விமான நிலையத்தில் வைத்து அவரிடம் இந்த அறிவித்தல் கையளிக்கப்பட்டுள்ளது.

குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் 109(6)ஆம் அத்தியாயத்தின் கீழ் விடுக்கப்பட்டுள்ள இந்த அறிவித்தலுக்கு அமைய, எதிர்வரும் செப்டம்பர் 24ஆம் திகதி நிதி குற்றப்புலனாய்வுப் பிரிவில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க ஷிரந்தி ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறியதாக ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் முற்றிலும் பொய்யானவை என ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர் ஒருவரை மேற்கோள் காட்டி ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஷிரந்தி ராஜபக்ஷ தனியார் வைத்தியசாலையிலிருந்தே நேரடியாக விமான நிலையத்திற்கு வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது மேலும், நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவில் ஆஜராகி வாக்குமூலம் அளிக்குமாறு இதற்கு முன்னர் அவருக்கு எந்தவொரு அழைப்பாணையும் விடுக்கப்பட்டிருக்கவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதையடுத்து ஷிரந்தி ராஜபக்ஷ எதிர்வரும் 19ஆம் திகதி மீண்டும் இலங்கை திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஜே.வி.பி.யின் இலக்கு என்னவாக இருக்கும்?

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியானது, ஆட்சியை கைப்பற்றி இரண்டு வருடங்களாகின்றது. பொருளாதார வங்குரோத்து நிலைமையின் விளைவாக ஏற்படும் அரசியல் இடைவெளியில் புதியவர்கள் மீதான கவர்ச்சி ஏற்படுவது சாதாரணமானது. அப்படித் தான் நடக்கும். அது தான் உலக அனுபவமும் கூட. அவ்வாறானதொரு அரசியல் கவர்ச்சியின் விளைவாகவே அனுரகுமார திசாநாயக்க கதாநாய இடத்தைப் பிடித்தார்.

அந்த கதாநாயக கவர்ச்சி ஒரு புதிய அரசியல் அலையாக மாற்றம் பெற்றது. அந்த அலையில் பெரும்பாண்மையான மக்கள் மிதந்தனர். ஈழத் தமிழர்களிலும் கணிசமானவர்கள் அடித்துச் செல்லப்பட்டனர். யார், எவர் என்று தெரியாமலேயே மக்கள் வாக்களித்தனர். பொதுவாக அரசியலுக்கு அறிமுகம் தேவை. அறிமுகம் இல்லாதவர்கள் வெற்றி பெற்றால் அதனை அதிசயம் என்றே பலரும் சொல்வதுண்டு. தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாண்மையினர், அப்படியான அதிஸ்டத்தினால் வெற்றி பெற்றவர்கள் தான்.

ஒரு பொருளாதார நெருக்கடியின் பின்னரான அரசியல் நிலைமை என்பது கொள்கை கோட்பாடு தொடர்பானதாக இருப்பதில்லை பொதுவாகச் சொல்வார்களே பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்று அப்படியானதொரு மனநிலையில் தான் மக்கள் இருப்பர். இந்த அடிப்படையில் தான் 159 ஆசனங்களை தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றது. இதனை அவர்களே எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். அது ஒரு வகையில் ஜே.வி.பிக்கான அரசியல் அதிஸ்டலாபச் சீட்டு. அதிஸ்டத்தில் வெற்றி பெற்ற ஜே.வி.பியின் அடுத்த கட்ட இலக்கு என்னவாக இருக்க முடியும். இதனை புரிந்து கொள்வதற்கு அதிகம் அரசியல் படித்திருக்க வேண்டும் என்பதில்லை. சாதாரண அரசியல் புரிதலே போதுமானது.

ஜே.வி.பி இரண்டு தடவைகள் அதிகாரத்தை கைப்பற்றுவற்காக ஆயுதங்களை நம்பிய வரலாற்றைக் கொண்டஇயக்கம். இரண்டு தடவைகளிலும் அழிக்கப்பட்டனர். முள்ளிவாய்க்காலில் தமிழர்கள் பேரழிவை கண்டனர் என்றால், ஜே.வி.பி அதற்கு முன்னரே, அவர்களுடைய எல்லைக்குள் பேரழிவை கண்டவர்கள் தங்களின் பல்லாயிரணக்கணக்கான உறுப்பினர்களை இழந்தவர்கள். இரண்டாவது, கிளர்ச்சியின் போது, அவர்களுடைய ஸ்தாபகத் தலைவர் ரோகண விஜயவீரவும் கொல்லப்பட்டார். அவரது உடல் எரியூட்டப்பட்ட போது, அரை உயிரில் முணகிக் கொண்டிருந்தாகவும் கூறப்படுகின்றது.

ஒரு ஆயுத இயக்க நடவடிக்கை தோற்கடிக்கப்படும் போது எவ்வாறெல்லாம் கொலைகள் நிகழும், எப்படியெல்லாம் கொடுரங்கள் அரங்கேறும் என்பதை தமிழர்களுக்கு முன்னரே கண்டவர்கள் தான் ஜே.வி.பியினர். அரச அடக்குமுறை, அழித்தொழிப்பு என்பவற்றை பற்றியெல்லாம் அவர்களுக்கு வேறு எவரும் புத்தி புகட்ட வேண்டியதில்லை.

ஆயுதங்கள் வழி அதிகாரத்தை பெறுவதில் மோசமாக அழித்தொழிக்கப்பட்டிருந்தாலும் கூட, அதிகாரத்தை கைப்பற்றும் ஜே.வி.பியின் தீராத ஆசையை எந்த அடக்குமுறையும் தோற்கடித்து விடவில்லை. அறுபது வருடங்களுக்கு பின்னர் அதிகாரத்தை கைப்பற்றும் அவர்களுடைய தீராத ஆசையை தீர்த்துக் கொண்டனர். அவர்கள் அதிகாரத்தை கைப்பற்றியதில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்தியது. ஒரு அரசியல் கட்சி எந்தளவு உறுதியாக தன்னை அரசியல் ரீதியில் கட்டியெழுப்பி வருகின்றது, அதில் எந்தளவு அர்ப்பணிப்புடன் இருக்கின்றது என்பது மட்டும் அந்த வெற்றியை தீர்மானித்து விடுவதில்லை அத்துடன் சூழ்நிலைமை சாதகமாக இருக்கின்ற போது அதனை ஒரு அரசியல் இயக்கம் எந்தளவு புத்திசாலித்தனமாக பயன்படுத்திக் கொண்டு, தன்னை ஒரேயொரு நம்பிக்கையாக மக்களுக்கு காண்பிக்கின்றது என்பதே மிகவும்



முக்கியமானது, அதுவே வெற்றியின் அடிப்படையாகக் கூட இருப்பதுண்டு. இவை அனைத்தும் ஒன்று சேர்ந்த தருணம் தான், ஜே.வி.பியின் இன்றைய அரசியல் வெற்றியாகும்.

கரடு முரடான பாதையின் வழியாக பயணித்து, அதிகாரத்தை கைப்பற்றும் பயணத்தில் அதிகம் இழந்து போன வரலாற்றைக் கொண்டிருக்கும் அரசியல் இயக்கம் ஒன்று, அதிகாரத்தை கைப்பற்றிய பின்னர், எவ்வாறு சிந்திப்பார்கள்? கிடைத்த அதிகாரத்தை தொடர்ந்தும் தக்க வைப்பது பற்றி யோசிப்பார்களா அல்லது தங்களை நேர்மையானவர்களாக காண்பிப்பதற்காக செய்வதற்கு கடினமானவற்றை தெரிவு செய்து, அதிகாரத்தை இழந்து போக முயற்சிப்பார்களா? எதனைச் செய்வர்? இந்தக் கேள்விக்கான பதிலை தெரிந்து கொள்ள முடிந்தால் ஜே.வி.பி எவ்வாறு பயணிக்கும் என்பதை புரிந்து கொள்வது மிகவும் இலகுவான விடயமல்லவா!

இலங்கையின் அரசியல் அதிகாரத்தை கைப்பற்ற முயற்சிக்கும் எந்தவொரு அரசியல் இயக்கத்தின், கட்சியின் முன்னாலும் ஒரேயொரு தெரிவுதான் இருக்கின்றது. அதாவது, பெரும்பாண்மை சிங்கள மக்களின் ஆதரவை தக்க வைக்க வேண்டும் - அவர்களின் நலன்களை பாதுகாக்கக் கூடியவர்கள் தாங்கள் மட்டும்தான் என்பதை நிரூபிக்க வேண்டும். இந்தப் பரிட்சையில் எவர் வெல்லுகின்றாரோ அவரிடம் தான் சிங்கள மக்கள் தங்களின் எதிர்காலத்தை ஒப்படைப்பர். இங்கு ஏனைய சிறுபாண்மை மக்கள் எவரிடம் அதிகாரத்தை ஒப்படைக்க விரும்புகின்றனர் என்பது ஒரு அரசியல் விடயமல்ல — தென்னிலங்கை அதிகம் அரசியல் ரீதியில் பிளவுற்றிருக்கும் சூழலில் மட்டும் தான் ஒப்பீட்டடிப்படையில் சிறுபாண்மை கையாளப்படுகின்றது. ஆனால் அதிலும் சிறுபாண்மை எந்தவொரு குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அரசியல் நன்மைகளையும் இதுவரையில் பெறவில்லை காரணம் சிறுபாண்மைகளின் அரசியல் எதிர்பார்ப்புக்களும் ஆர்வங்களும் ஒன்றல்ல. ஈழத் தமிழர்கள் மட்டுமே அரசியல்ரீதியின் தனித்துவமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றனர். மற்றவர்களின் நிலைப்பாடுகள் அவர்களுக்கு எது வசதியானதோ அதனை சாருவதாகவே இருக்கின்றது. அதற்காக எவரையும் குற்றம் சாட்டு முடியாது. ஒவ்வொருவருக்கும், ஒவ்வொன்று சரியாகவும் வசதியாகவும தெரிகிறது. இந்தப் பின்புலத்தில் ஜே.வி.பி விடயத்திற்கு திரும்பினால், கிடைத்திருக்கும் அதிகாரத்தை தக்கவைக்க வேண்டும் என்பதே அவர்களுடைய ஒரேயொரு அரசியல் நிகழ்ச்சி நிரலாக இருக்கும் அப்படித் தானே இருக்கவும் முடியும். இந்த அடிப்படையில் ஜே.வி.பி எவ்வாறான விடயங்களை யோசிக்கும்? முதலாவது எதனை செய்தால், அதிகாரத்தில் நீடிக்கும் தங்களின் இலக்கு கேள்விக்குள்ளாகுமோ, அவை எவற்றையும் செய்யாமல் இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பதுதான், அவர்களுடைய அரசியல் நிகழ்ச்சிநிரலின் அடிப்படையாக இருக்கும். இருக்கவும் வேண்டும். ஒரு வேளை நாங்கள் ஜே.வி.பியின் இடத்தில் இருந்தாலும் கூட, இப்படித்தான் சிந்திப்போம்.

இந்த இடத்தில் தான் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை விவகாரம் முதலாவது இடத்தில் இருக்கின்றது. இனப்பிரச்சினை தொடர்பிலும் அதன் தார்ப்பரியங்கள் தொடர்பிலும் ஜே.வி.பியினருக்கு வேறு எவரும் அறிவுரைக்க வேண்டியதில்லை. ஜே.பி.யின் இடதுசாரிப் பாரம்பரியமும் (அது சிங்கள தேசியவாதத்தோடு இரண்டறக் கலந்தது என்றாலும் கூட) அவர்கள் கடந்து வந்த பாதையும் அவர்களுக்கு அவர்களே ஆசிரியர்களா இருக்கும் ஆற்றலை வழங்கியிருக்கின்றது. இப்போது பிரச்சினை, தமிழர்களின் பிரச்சினை புரிந்து கொண்டு, அதற்கான தீர்வை காண்பதல்ல. ஏனெனில், அவ்வாறு செயற்பட்டால் அதிகாரத்தில் நீடிக்கும் அவர்களின் இலக்கில் தோல்வியுற நேரிடும். அதற்கு அவர்கள் முயற்சிப்பார்களா? நிச்சயமாக இல்லை.

எனவே தமிழர் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்னும் பேச்சுக்கே அவர்களிடம் இடம் இல்லை. அப்படியானால் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி, அரசியலமைப்பில் இருக்கின்ற பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தையாவது படிப்படியாக அமுல்படுத்துவார்களா? அதுவும் நடக்காது. அதற்கான கடுமையான அழுத்தங்கள் வர முடியுமென்றால், அது புதுடில்லியின் பக்கத்தில் இருந்து மட்டும்தான் வர முடியும். அதற்கான வாய்ப்பு எந்தளவு இருக்கின்றது என்பதும் கேள்வி தான்

ஏனெனில் புதுடில்லி ஏற்கனவே ஈழத் தமிழர்களுக்காக உதவுவதற்கு வந்து, விரல்களை சுட்டுக் கொண்டது. இந்த நிலையில் ஈழத் தமிழ் தலைமைகளை நம்பக் கூடிய நிலையில் எந்தளவிற்கு புதுடில்லி இன்றுள்ள ஈழத் தமிழ் தலைமைகளை நம்பக் கூடிய நிலையில் இருக்கின்றது என்பதும் ஒரு கேள்வி. தமிழ் தலைமைகள் மாகாண சபை விடயத்தில் ஒன்றுபட்டு நிற்க வேண்டும் என்று புதுடில்லி தொடர்ந்தும் வலியுறுத்தி வந்திருக்கின்றது ஆனால் அது இன்று வரையில் நடக்கவில்லை.

இது பற்றி பேசிக் கொண்டிருந்த போது ஒரு நண்பர் ஒரு மாறுபட்ட கருத்தை கூறினார். தற்போது நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதெல்லையை இரண்டு வருடங்களால் அதிகரிப்பது பற்றி பலரும் பேசுகின்றனர். எதிர்த்தரப்பு அரசியல்வாதிகளை இலக்கு வைத்து தான் அவர்கள் இதனை செய்வதாகவே பலரும் எண்ணுகின்றனர். ஆனால் இதற்கு பின்னால் இப்படியும் ஒரு நகர்வு இருக்கலாம் தானே அதாவது, ஜே.வி.பியின் வரலாறு அடிப்படையில் இந்தியாவிற்கு எதிரானதாகவே இருந்தது. அதன் அடிப்படையாக இந்திய – இலங்கை ஒப்பந்தமே இருந்தது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான பதின்மூன்றை அவர்கள் அடிப்படையிலேயே எதிர்த்து வந்திருக்கின்றனர். அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பதாக பதின்மூன்றை, இல்லாமலாக்குவதற்கான ஒரு திருத்தச் சட்டத்தை கொண்டு வந்து, நீதித்துறையின் ஆதரவுடன் அதனை இல்லாதொழிக்கலாம் தானே இருந்து பாருங்கள் அப்படிதான் நடக்கும் என்றார் அந்த நண்பர்.

அரசியலில் எது நடக்கும் – எது நடக்காது என்பதெல்லாம் ஆட்சியில் இருப்பதால் மட்டும் தீர்மானித்து விட முடியாது என்பதுதான் அரசியல் யதார்த்தம். குறிப்பிட்ட சூழ்நிலை, வெளிச் சக்திகளின் தலையீடுகள் என பல்வேறு விடயங்கள் இலங்கையின் அரசியலுடன் பின்னிப்பிணைந்திருக்கின்றது. ஆனால் ஒரு வாய்ப்பு இருக்கின்றது அதனை செய்து பார்க்கலாம் என்றால், ஆட்சியிலிருப்போர், அதனைச் செய்ய முயற்சிப்பார்கள் என்னும் யதார்த்தத்தையும் நிராகரித்து விடவும் முடியாது தான்.

ஆனால் ஒரு விடயம் மட்டும் நிராகரிக்க முடியாத உண்மை. கிடைத்திருக்கும் வாய்ப்பை தவற விடும் வகையில், ஜே.வி.பி செயற்படப் போவதில்லை. ஒன்றில் வெற்றி பெறக் கூடிய வரையில் வெற்றி பெறுவது – அல்லது, ஒரு வேளை தோற்கத்தான் போகின்றார்கள் என்னும் நிலை வந்தால், தவிர்க்க முடியாத எதிர்த்தரப்பாக தங்களை தக்க வைப்பது. இந்த அடிப்படையில் மட்டும்தான் ஜே.வி.பி சிந்திக்கும், செயல்படும். இதற்கு அப்பால் அவர்களிடம் (18ம் பக்கம் பார்க்க)

# பொறுப்புக் கூறாமை?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -






ஐநாவின் 63ஆவது கூட்டத் தொடர் கடந்த 7ஆம் திகதி தொடங்கியது. தொடரை முன்னிட்டு கடந்த மூன்றாம் திகதி வெளியிடப்பட்ட மனித உரிமைகள் ஆணையாளருடைய அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.. அனைத்துத் தரப்பினராலும் இழைக்கப்பட்ட சர்வதேச சட்டத்தின் கீழான குற்றங்கள், பெரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் கடுமையாக மீறப்பட்டமை ஆகியன எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை அவற்றுக்கு பொறுப்பு கூறப்படவும் இல்லை.

மேற்கண்ட அறிக்கை வெளியிடப்படுவதற்கு இரண்டு நாட்கள் முன்னதாக, உலகப்பொது நிறுவனங்களில் ஒன்றாகிய மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் (Human Rights watch) அறிக்கை வெளிவந்தது.

அந்த அறிக்கை பின்வருமாறு கூறுகிறது. அரசாங்கம் நீதியின் விடயத்தில் நேர்மையாக இல்லை என்று. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடந்த இரண்டு ஆண்டுகளிலும் நாட்டின் மிக மோசமான பல வழக்குகளை மீண்டும் திறந்துள்ளது.எனினும் அந்த வழக்குகளை இன்றுவரை முடிக்கவில்லை என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தன் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேற்கண்ட அறிக்கைகள் நமக்கு எதனை உணர்த்துகின்றன? கடந்த 17 ஆண்டுகளாக இலங்கைத் தீவு இறந்த காலத்துக்குப் பொறுப்புக் கூறவில்லை என்பதைத் தான். இதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால்,2009 மே 18க்குப் பின், அப்போது இருந்த ஐநா பொதுச் செயலாளர் கொழும்புக்கு வருகை தந்த போது, அப்போது இருந்த மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அவருக்கு கொடுத்த வாக்குறுதிகளின் பிரகாரம் இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறவில்லை என்பதைத் தான்.

கடந்த 17ஆண்டுகளிலும் ராஜபக்சக்கள் மட்டுமல்ல, ரணில் விக்கிரமசிங்க மைத்திரிபால சிறிசேன, அனுர குமார... யாருமே பொறுப்புக் கூறவில்லை என்பதுதான் உண்மை.

குறிப்பாக 2015இல் தமிழ்,சிங்கள, முஸ்லிம் மக்களின் ஆதரவோடு நிகழ்ந்த ஆட்சி மாற்றத்தின் பின், அதே ஆண்டு செப்டம்பர் மாதம் ஐநாவில் நிறைவேற்றப்பட்ட 30.:1 தீர்மானத்தின் அடிப்படையில் இலங்கை அரசாங்கம் இன்றுவரை பொறுப்பு கூறவில்லை. இதை இன்னும் விரிவாகச் சொன்னால் அந்த தீர்மானமானது பொறுப்புக் கூறலுக்கானது. அதாவது நிலை மாறுகால நீதிக்கானது.

அந்தத் தீர்மானத்தை அப்போது இருந்த மைத்திரி-ரணில் அரசாங்கம் இணை அனுசரணை வழங்கி ஏற்றுக் கொண்டது. தான் இணை அனுசரணை வழங்கிய ஒரு தீர்மானத்தின் அடிப்படையில் கடந்த சுமார் 11 ஆண்டுகளாக இலங்கை அரசாங்கம் கடந்த காலத்துக்கும் நிகழ் காலத்துக்கும் பொறுப்புக் கூறவில்லை. இதை இன்னும் ஆழமான கோட்பாட்டு வார்த்தைகளில் சொன்னால், கடந்த 11 ஆண்டுகளில் அனைத்துலக சமூகத்துடன் தான் ஒப்புக் கொண்டதன் அடிப்படையில் தொடர்ச்சியாக வந்த எந்த ஓர் இலங்கை அரசாங்கமும் பொறுப்புக் கூறவில்லை.

இது ஒரு ராஜபக்ச குடும்பத்தின் அல்லது ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் அல்லது அனுர குமாரவின் தனிப்பட்ட பொறுப்புக் கூறாமை அல்ல.இது சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பின் பொறுப்புக் கூறாமை. அவ்வாறு சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பைப் பொறுப்புக்கூற வைப்பதில் ஐநா கடந்த 17 ஆண்டுகளாக அதிலும் குறிப்பாக,2015 நிலைமாறு கால நீதிக்கான தீர்மானத்தின் பின்னரான 11ஆண்டுகளில் பின்னடைவைக் கண்டுள்ளது என்பதுதான் உண்மை.

நிலைமாறு கால நீதியின் தமிழ்ப்பங்காளியாகிய சுமந்திரன் கடந்த 2021 ஆம் ஆண்டு, வவுனியாவில் நடந்த ஒரு கூட்டத்தில் கூறியதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அந்தக் கூட்டம் அப்பொழுது நடக்கவிருந்த ஐநா மனித உரிமைகள் கூட்டத்தொடரை முன்னிட்டு தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டுக் கடிதம் ஒன்றைத் தயாரிக்கும் நோக்கத்தோடு கூட்டப்பட்ட இரண்டாவது கூட்டம் ஆகும். அந்தக் கூட்டத்தில் சுமந்திரன் கூறினார் 6 ஆண்டுகளாக ஒரு பரிசோதனை செய்தோம், அதில் தோல்வி அடைந்து விட்டோம் என்று. அந்த பரிசோதனைதான் நிலைமாறு கால நீதியாகும். அதாவது நிலைமாறு கால நீதியின் தமிழ்ப் பங்காளியாகிய சுமந்திரன் அது ஒரு தோல்வியுற்ற பரிசோதனை என்று கூறினார்.

நிலை மாறுகால நீதி இலங்கைத் தீவில் தோல்வியுற்ற ஒரு பரிசோதனை என்பதற்கு அதைவிட வேறு கூர்மையான உதாரணங்களைக் கூறலாம். முதலாவது உதாரணம், நிலைமாறு கால நீதியின் பெற்றோறில் ஒருவராகிய மைத்திரிபால சிறிசேன 3ஆண்டுகளில் தன் குழந்தையைக் காட்டிக் கொடுத்தார். அவர் ராஜபக்ஷங்களோடு இணைந்து ஒரு யாப்புச் சதி முயற்சியில் ஈடுபட்டார். அதாவது இலங்கைத் தீவை பொறுப்புக்கூற வைப்பதற்கான செயற்பாடுகளின் பிரதான பங்காளியாகிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அந்தச் செயற்பாடுகளில் இருந்து பின்வாங்கினார். அனைத்துலக சமூகம் ஒன்றுக்கு தான் வழங்கிய வாக்குறுதிகளைத் தானே விழுங்கி நிலைமாறு கால நீதியைக் காட்டிக் கொடுத்தார். இது முதலாவது உதாரணம்.

அடுத்த உதாரணம் ஈஸ்டர் குண்டு வெடிப்பு. ஈஸ்டர் குண்டு வெடிப்பானது நிலைமாறு கால நீதியின் தோல்வியின் விளைவு எனலாம். நிலைமாறுகால நீதி செய்முறைகள் நாட்டில் அமுலில் இருந்த ஒரு காலகட்டத்தில் தான் ஈஸ்டர் குண்டுகள் வெடித்தன. எனவே நிலைமாறு கால நீதியின் இயலாமையை தோல்வியை அந்த குண்டு வெடிப்புகள் ரத்தம் சிந்தி நிரூபித்தன.

நான்காவது உதாரணம், மிகவும் பிந்தியது. இப்பொழுது நடந்து கொண்டிருப்பது. இலங்கை அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தைச் புதுப்பிக்க முயற்சிக்கின்றது. அந்த அடிப்படையில் பயங்கரவாதத்தில் இருந்து அரசாங்கத்தைக் காப்பாற்றும் சட்டமூலம் கடந்த மாதம் அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுள்ளது. நாட்டை பயங்கரவாதத்தில் இருந்து விடுவித்து விட்டதாகக் கூறும் அரசாங்கங்கள் எதற்காக தொடர்ந்தும் பயங்கரவாத தடைச் சட்டத்தைப் புதுப்பிக்க வேண்டும்? நிலைமாற்றம் ஏற்பட்டு விட்டது என்றால் பிறகு எதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டம்? நிலைமாறு கால நீதியின் ஆகப் பிந்திய தோல்வி அது.

மேற்கண்ட நான்கு உதாரணங்களும் ஐநாவின் இலங்கையைப் பொறுப்புக் கூற வைப்பதற்கான திட்டம் தோல்வி அடைந்ததைக் காட்டுகின்றன. அதற்குப் பொறுப்பு, இலங்கைத் தீவின் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பு மட்டுமல்ல. அதைவிட முக்கியமாக ஐநாவும் தான். ஏனென்றால் நிலை மாற்றம் ஏற்படாத ஒரு நாட்டில் நிலைமாறு கால நீதியை ஸ்தாபிக்க முயன்றமைதான் அந்தத் தவறுக்கு அடிப்படைக் காரணம்.

தென்னாபிரிக்காவில் நிலைமாற்றம் ஏற்பட்டிருந்தது. அங்கே பெரும்பான்மை கருப்பின மக்களுக்கு ஆட்சி அதிகாரம் கிடைத்தது. அந்த நிலை மாற்றத்தின் பின்னணியில் அங்கே நல்லிணக்கப் பொறிமுறைகள் ஒப்பிட்டுளவில் வெற்றி பெற்றன. ஆனால் இலங்கைத் தீவிலோ போரில் விடுதலைப்புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டதை வைத்துக் கொண்டு அதனை ஒரு நிலை மாற்றமாக எடுத்துக் கொண்டு, ஐநா நிலைமாறு கால நீதியை இலங்கைக்கு பரிந்துரைத்தது.

ஆயுதப் போராட்டத்தை தோற்கடித்ததை நிலைமாற்றம் என்று ஐநா ஏற்று கொண்டதா? ஆயுதப் போராட்டம் எனப்படுவது ஒரு மூல காரணம் அல்ல. அது விளைவு. இன ஒடுக்குமுறையின் விளைவு தான் .2009இல் தோற்கடிக்கப்பட்டது விளைவு தான். மூல காரணம் அல்ல.மூலகாரணம் அப்படியே மாறாமல் இருந்த காரணத்தால் தான் ,மைத்திரிபால சிறிசேன அதற்குப் பயந்து அப்பத்தைச் சாப்பிட்டு விட்டு நிலைமாறு கால நீதியைக் காட்டிக்கொடுத்தார்.

மூல காரணம் அப்படியே மாறாமல் இருந்த காரணத்தால் தான், ஈஸ்டர் குண்டுகள் வெடித்தன. அந்தக் குண்டு வெடிப்பின் பின்னரான உணர்ச்சிகரமான அரசியல் சூழலில், ராஜபக்சக்கள் மீண்டும் ஆட்சிக்கு வர முடிந்தது.

மூல காரணம் அப்படியே உள்ளபடியால் தான், பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் புதுப்பிக்க வேண்டிய தேவை வந்தது.புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உருவாக்க வேண்டி வந்தது. மாற்றத்தை வாக்களித்து ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தியாலும் அந்த மூல காரணத்தை மாற்ற முடியவில்லை என்பதை அது காட்டுகிறது.

இவ்வாறு மூல காரணம் அப்படியே இருக்கத் தக்கதாக, விளைவின் தோல்வியை வைத்துக் கொண்டு, நாட்டில் நிலை மாற்றம் ஏற்பட்டிருப்பதாகக் கணித்தமை ஐநாவின் தவறு.இது ஐநா அதாவது அனைத்துலக சமூகம் தெரியாமல் செய்த தவறு அல்ல. தெரிந்து செய்த தவறு. தமிழ்மக்களுக்கு அவர்கள் தரக்கூடிய நீதியின் வரையறையை உணர்த்துவது அது.

எனவே இப்பொழுது ஐநா மனித உரிமைச் செயலாளருடைய அறிக்கைகளும் சரி, ஏனைய அனைத்துலக நிறுவனங்களின் அறிக்கைகளும் சரி, சுட்டிக்காட்டுகின்ற போதாமைகள், தவறுகள், பின்னடைவுகள் போன்றவற்றுக்கு ஐநாவும் உட்பட உலக சமூகமும் பொறுப்பு.

இந்தப் பொறுப்பின்மைக்கு பலியாடுகள் ஆக்கப்படுவது தமிழ்மக்கள்தான். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடந்த சுமார் இரண்டு ஆண்டு கால பகுதிக்குள் ஊழல் முறைகேடு போன்ற குற்றச் செயல்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. அதில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தை ஐநா,மனித உரிமைகள் காப்பகம் போன்றன ஏற்றுக்கொள்கின்றன. ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக நாட்டில் யார் யாருக்கு எதிராக, என்னென்ன குற்றங்களுக்கு எதிராக, வழக்குகள் தொடுக்கப்பட்டிருக்கின்றன என்ற தொகுத்துப் பார்த்தால் அவற்றில் பெரும்பாலானவை இன முரண்பாடு சம்பந்தப்படாத வழக்குகள் தான்.

அதாவது இன முரண்பாடுகள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் அரசாங்கம் கை வைக்கவில்லை. இந்த விடயத்தில் அவர்களிடம் ஓர் அரசியல் தெரிவு உண்டு. அந்தத் தெரிவுதான் இனவாதம். ஆனால் அண்மையில் பேருவளையில் மக்களை சந்தித்த போது ஜனாதிபதி என்ன கூறினார் தெரியுமா? இலங்கைத் தீவின் நவீன வரலாற்றிலேயே இனவாதம் இல்லாத காலம் கடந்த இரண்டு ஆண்டுகள் தான் என்று.அரசு சேவைகளைப் பெறு எனவே இதில் ஐநாவும் கூட்டுப் பொறுப்பாளி. நிலைமாறு கால நீதி இலங்கைத்தீவில் தோல்வியடைந்து விட்டது என்பதனை அதன் தமிழ் பங்காளியே கூறிவிட்டார். எனவே இனி யும் ஐநா நிலை மாறுகால நீதிச் செய்முறைகளைத் தொடர முடியாது.

மாறாக இலங்கை அரசாங்கங்களைப் பொறுப்பு க்கூற வைப்பதற்கான புதிய ஏற்பாடு களையும் பொறிமுறைகளையும் குறித்துச் சிந்திக்க வேண்டியுள்ளது. உதாரணமாக இப்போது ஆட்சியில் இருக்கும் என்.பி.பி அரசாங்கம் உலக வங்கி பன்னாட்டு நாணய நிதியம் போன்ற வற்றின் நிகழ்ச்சி நிரல்களுக்கு உட்பட்டிருக்கிறது. இந்த விடயத்தில் நிதி உதவிகளையும் பொறுப்புக்கூறலையும் பிரிக்கப்படவியலாதபடி இணைப்பதற்கு உலக சமூகத்தால் முடியும். ஆனால் அதை அவர்கள் செய்யவில்லை. செய்ய முடியவில்லையா? செய்ய விரும்பவில்லையா?

# நாமல்:- மொட்டு கட்சியின் எதிர்காலம்?

இலங்கையில் அடுத்தடுத்த வாரங்களில் தேர்தல் வரப் போகிறதோ? என்று எண்ணுகின்ற அளவுக்கு தென்னிலங்கை அரசியல் களம் சூடு பிடித்து இருக்கிறது. அரசாங்கத்தின் ஊழல் ஒழிப்பு குரலையும் எதிர்க்கட்சிகளின் அரசியல் பழிவாங்கல் கூக்குரலையும் நாமலின் கைது கல்லும் தேங்காயும் சந்தித்த கதையாக மாற்றியிருக்கிறது. தென்னிலங்கை அரசியலில் பிளவுபட்டு நிற்கிறது. மக்கள் இரண்டு அணிகளாக திரண்டு இருக்கிறார்கள். இந்த களநிலை மாற்றத்தை நாமலின் கைதுக்கு முன்னர் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்காவின் அரசாங்கம் சரியாக கணிப்பிட்டதா? என்ற கேள்வி தவிர்க்க முடியாததாகிறது.

கடந்த ஆட்சியாளர்களின் ஊழல், இலஞ்சம் தொடர்பான விசாரணைகள் கடந்த இரண்டு வருடங்களாக தொடர்கின்றன. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது மனைவியுடனான லண்டன் பயணம் தொடர்பாக கைது செய்யப்பட்டார். அப்போது அரசியலில் பலம் இழந்த கட்சியின் தலைவர் ஒருவரை தெரிவு செய்து கைது செய்து இருப்பதாக எதிர்த்தரப்பு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

அதற்குப் பின்னரும் முன்னாள் அரசியல்வாதிகள் பலரும் கைது செய்யப்பட்டுள்ளனர். தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ராஜபக்ச குடும்பத்திலும் நாமல் ராஜபக்ச உட்பட பலரும் விசாரணைக்கு அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர். ஆனால்இம்முறை நாமலின் கைதும் தடுத்து வைப்பும் தென்னிலங்கை சிங்கள மக்களை இரண்டாக பிளவுபடுத்தி இருப்பதை அவதானிக்க முடிகிறது.

நாமல் ராஜபக்ச தென்னிலங்கை அரசியல் வரலாற்றில் கடந்த 75 ஆண்டுகள் அரசியல் ஆணிவேரைக் கொண்ட ஒரு குடும்பத்தை சேர்ந்தவர். இலங்கை படையினருக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான உள்நாட்டு போரில் ராஜபக்சாக்களின் அரசியல் தலைமைத்துவம் போர் வெற்றி வரை நீண்டகாலம் களத்தில் நின்று போராடிய ஒன்று. பயங்கரவாதத்தில் இருந்து சிங்கள தேசத்தை மீட்டவர்களாக தென்னிலங்கை சிங்கள மக்களும், பௌத்த பீடங்களும் கருதுகின்றனர். இந்த மனநிலையின் வெளிப்பாடே என்.பி.பி. அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டு மாதங்களில் நுகேகொட கூட்டத்தில் கூடிய மக்கள் கூட்டமும், இரண்டு ஆண்டுகளுக்கு பின்னர் அநுராதபுரத்தில் கூடிய மக்கள் கூட்டமும் எமக்கு சொல்கிறது.

42 வீதம் மக்கள் ஆதரவைப் பெற்று இரண்டாவது விருப்புவாக்கு கணிப்பில் நிறைவேற்ற அதிகாரத்தை பெற்ற ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவும், 159 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்ட அவரது மூன்றில் இரண்டு பெரும்பான்மை பாராளுமன்றமும் இரண்டு வருடங்கள் ஆட்சியில் உள்ள நிலையில் மிகவும் விரைவாக மக்களின் ஆதரவை அரசாங்கம் இழப்பதற்கு காரணம் என்ன?

ஊழல், இலஞ்ச ஒழிப்பு, போதைப் பொருள் ஒழிப்பு, பொருளாதார ரீதியாக நாட்டை மீட்டெடுக்கும் முயற்சிகள், பல்வேறு பட்ட நிவாரண அறிவிப்புகள், சர்வதேச அமைப்புகளுடனான நல்லுறவு அவர்கள் வழங்கும் நற்சான்றிதழ்கள் போன்ற இத்தனைக்கும் மத்தியில் இந்த அரசாங்கத்திற்கான மக்கள் ஆதரவு குறைவடைய அல்லது மக்கள் இந்த அரசாங்கத்தில் வெறுப்படைய காரணம் என்ன? யாரெல்லாம் ஊழல்வாதிகள், திருடர்கள், கள்வர்கள், கொள்ளையர்கள் என்றெல்லாம் முன்னாள் அரசியல்வாதிகளை அரசாங்கமும், அரச தலைமையும் குறிப்பிடும் போது அதன் நம்பகத் தன்மையை மக்கள் கேள்விக்குட்படுத்துகிறார்களா? இதற்கு பின்னால் உள்ள அரசியல் பழிவாங்கலை கட்சி அரசியலை இனம் காண்கிறார்களா?

மகனுக்கு திருடக்கூடாது என்று தகப்பன் சொல்லிக் கொடுக்காது இப்போது கண்ணீர் சிந்துகிறார்.... என்று மேடைப்பேச்சு அரசியல் செய்கிறார் ஜனாதிபதி. அப்படியானால் புத்தரின் பஞ்சசீலக் கொள்கையின்படி மனித உயிர்களை கொலை செய்யக் கூடாது என்று ஜே.வி.பி. தனது தோழர்களுக்கு போதிக்காதது ஏன்? என்று கேட்க முடியும் அல்லவா? குறைந்த பட்சம் ஜனாதிபதி ஜே.வி.பி. தலைவராக இருந்த போது தமிழ் மக்களுக்கு எதிரான போரில் ஆட்சேர்பிற்கு எப்படி உதவ முடியும்? 1987–1989 காலத்தில் ஜே.வி.பி. வன்முறையாளர்களுக்கு புத்ததர்மத்தை போதிக்காதது ஏன்?

வடக்கு, கிழக்கு, மலையக எண்ணிக்கையில் சிறுபான்மையினரான தேசிய இனங்களை விடுங்கள். அவர்களின் எதிர்பார்ப்புகளை. அவர்களுக்கு வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளை இந்த அரசாங்கம் நிறைவேற்றவில்லை. குறிப்பாக அதிகாரப் பகிர்வு, மாகாணசபை தேர்தல், காணிப் பிரச்சினை, அரசியல் கைதிகள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரங்களை தேர்தல் காலத்தில் குறிப்பிட்டதற்கு மாறாக அரசாங்கம் மொழிபெயர்ப்பு செய்கிறது. இதனால் இந்த மக்கள் அதிருப்தியில் உள்ளனர்.

ஆனால் சிங்கள மக்கள்....? சுண்டுக் கொத்து, கொத்தமல்லி பேச்சுக்கள் மக்களை அரச தலைமை அவமானப்படுத்துவதாகவும், மக்கள் மீது குற்றம் சுமத்துவதாகவும் அமைகிறது. சர்வதேச நிதி நிறுவனங்களின் நிபந்தனைகளை நிறைவேற்ற அரசாங்கம் தங்களை நிர்ப்பந்திக்கிறது என்பது மக்களுக்கு நன்கு புரிகிறது.

ஒட்டுமொத்த இலங்கையில் மக்களின் வாழ்வாதார நெருக்கடிகள் அதிகரித்து வருகின்றன. வேலையின்மை, வருமானம் குறைவு, விலைவாசி உயர்வு போன்றவற்றுடன் கிராமிய மட்டத்தில் அரசாங்கத்தின் கட்சி அரசியல் புறக்கணிப்பும், முன்னுரிமையும் மக்களுக்கு தெளிவாகத் தெரிகிறது. இதனால்தான் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களில் மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக வாக்களிக்கிறார்கள்.

நாமல் ராஜபக்ச தலைமையிலான மொட்டு கட்சி இவற்றில் இருந்து தங்களுக்கு நிவாரணம் தரும் என்று மக்கள் நம்புவதை விடவும் தாம் தேர்தல் பொய்வாக்குறுதிகளின் மூலம் ஏமாற்றப்பட்டிருப்பது அவர்களுக்கு வருத்தமளிக்கிறது. அரசாங்கம் உயர்தர, நடுத்தர வர்க்கத்தினருக்கு என்னவெல்லாம் செய்திருக்கிறது என்பதல்ல. கீழ் மட்டத்தில் உள்ள தங்களுக்கு என்ன நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது என்பதே அவர்களின் கேள்வி. ஒரு கோடீஸ்வரர் ஒரு லீற்றர் பெற்றோலுக்கு செலுத்தும் விலைக்கும் ஒரு சாதாரண விவசாயி, மீனவர் தோட்டத்தொழிலாளி செலுத்தும் விலைக்கும் வேறுபாடில்லை. அதே போன்று தான் அத்தியாவசியப் பொருட்களின் விலையும். ஒரே விலை ஆனால் அதன் பொருளாதார சுமை சமமானதல்ல.



இந்த பொதுவான சமூக, பொருளாதார நிலைகளுக்கு அப்பால் என்.பி.பி. அரசாங்கத்திற்கு எதிராக ஒரு வலுவான எதிர்க்கட்சித் தலைமையை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ரணில் விக்கிரமசிங்க.:. ரணில் ராஜபக்ச காலம் அரசியல் முடிவை நெருங்குகின்ற நிலையில் ஒரு மாற்றுத் தலைமையை தென்னிலங்கை மக்கள் தேடுகின்றனர். சஜீத் பிரேமதாசாவின் கடந்த கால தலைமைத்துவம் அவர்களுக்கு நம்பிக்கை அளிப்பதாக இல்லை. பாராளுமன்றத்தில் எதிர்கட்சி தலைவராக இருப்பது மட்டும் போதாது மக்கள் மத்தியில் ஒரு செயற்பாட்டு அரசியல் அவசரதேவையாக உள்ளது. இதை ஒப்பீட்டளவில் நாமல் ராஜபக்ச வழங்க முடியும் என்று மக்கள் நம்புகிறார்கள்.

ரணிலுக்கும், சஜீத்திற்கும் இடையிலான பொது உடன்பாடற்ற தலைமைத்துவப் போட்டி மக்களுக்கு கடந்த ஜனாதிபதி, பாராளுமன்ற தேர்தல்களை நினைவூட்டுகிறது. தாங்கள் விட்ட தவறின் குற்ற உணர்வாகவும் அது வெளிப்படுகிறது. ஆக, மூன்று உறுப்பினருடன் இருந்த ஜே.வி.பி.யை கடந்த தேர்தலில் ஆட்சியில் அமர்த்தியது போன்று தற்போது மூன்று உறுப்பினர்களுடன் உள்ள மொட்டு கட்சியின் பக்கம் அவர்கள் படிப்படியாக திரும்புகின்றனர். திசை காட்டி விடும் ஒவ்வொரு அரசியல் தவறும் மக்களை மொட்டுவின் பக்கமே திசையை காட்டும் என்பதையே அநுராதபுரம் எமக்கு சொல்லும் செய்தியாகும்.

சிறுபான்மையினர் கட்சிகளை அல்லது மக்களை பொறுத்து மட்டில் ராஜபக்சாக்களுக்கு எதிரான அப்பட்டமான அரசியல் பழிவாங்கல் முதன்மை பெறுகிறது. இது ஊழல், இலஞ்சம், போதைப்பொருள் என்று பேசப்பட்டாலும் இந்த வார்த்தைகளுக்கு பின்னால் ஒழிந்து இருப்பது முள்ளிவாய்க்கால், ஈஸ்டர் படுகொலை, ஜனாஷா எரிப்பு. இந்த பழிவாங்கல் அரசியலே கொள்கையற்று சரத்பொன்சேகாவுக்கும், பழிவாங்குவதற்காக சஜீத்திற்கும் புள்ளடி போட வைத்தது. இந்த அணுகுமுறை தென்னிலங்கை சிங்கள மக்களை தடுத்து நிறுத்துமா? என்பதை இப்போது கூறுவது கஷ்டம்.

22வது அரசியல் அமைப்பு திருத்தம் குறித்த ஜே.வி.பிக்கு எதிரான அதன் என்.பி.பி.யின் பங்காளிகளின் நிலைப்பாடு மீண்டும் பேசு பொருளாகியிருக்கிறது. பிரதமர் ஹரூணி அமரசூரிய சட்டத்தரணிகள் சங்க தலைவரும், பிரதமரின் சகோதரருமான சஜீவ் அமரசூரியவின் நிலைப்பாட்டுடன் உடன்படுவதாக தெரிய வருகிறது. நீதிமன்ற தீர்ப்பு பாராளுமன்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மையா? அல்லது மூன்றில் இரண்டு பெரும்பான்மையும், மக்கள் வாக்கெடுப்புமா? என்பதை பொறுத்தே என்.பி.பி.யில் ஏற்பட்டுள்ள கீறலை நீக்குவது தங்கியிருக்கிறது.

22வது திருத்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போது பிரதமர் ஹருணி அமரசூரிய வெளியிடவுள்ளதாக குறிப்பிடப்படும் அறிக்கை குறித்து கொழும்பு வட்டாரங்களில் கசியும் செய்திகள் உண்மையாயின் அது என்.பி.பி.யில் கடந்த இரண்டு வருடங்களாக இருந்து வருகின்ற கீறலை ஆழப்படுத்தும் – வெளிப்படுத்தும். அப்படி நடந்தால் அந்த அரசியல் அறுவடையையும் எதிர்க்கட்சிகளே பங்கிட்டுக் கொள்ளும்.

இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன தனது ஆட்சியில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பயன்படுத்தி ஆட்சியை நீடித்தார். ஜே.வி.பி. இன்னும் 30 ஆண்டுகள் ஆளப்போவதாக கூறுகிறது. அரசியல் எதிரிகளை பழிவாங்க சிறிமாவோ பண்டாரநாயக்கா, பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா ஆகியோரின் குடியுரிமையை பறித்து ஜனநாயக எதிர்க்கட்சி அரசியலை பலவீனப்படுத்தினார். இந்த நினைவு ஊட்டலோடு நாமல்: மொட்டுக் கட்சியின் எதிர்காலம் (?) என்ற இந்த பத்தி நிறைவு பெறுகிறது.

**கட்டுரையாளர்:**
– அழகு குணசீலன் –

# நேட்டோவுடன் கூட்டு வைக்கிறதா இலங்கை?

கனடாவின் விக்டோரியா நகரில் இந்தோ-பசுபிக் பிராந்திய நாடுகளின் இராணுவ தலைவர்களின் மாநாடு அண்மையில் இடம்பெற்றது.

பல்வேறு நாடுகளின் சார்பில், சேவையில் உள்ள இராணுவத் தலைமைத் தளபதிகள் அல்லது கூட்டுப் படைத்தளபதிகள் அல்லது பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானிகள் அந்த மாநாட்டில் பங்கேற்றிருந்தனர்.



ஆனால் இலங்கையின் சார்பில் தற்போது சேவையில் இல்லாத முன்னாள் விமானப்படை அதிகாரியான பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்த கலந்து கொண்டிருந்தார். அவர் அமெரிக்காவின் தேசிய காவல்படைத் தளபதி உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் இராணுவத் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார். இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவது, அவரது சந்திப்புகள், கலந்துரையாடல்களின் முக்கியமான நோக்கமாக இருந்தது.

நேட்டோ இராணுவக் குழுவின் தலைவரும் நேட்டோ உறுப்பு நாடுகளின் அரசியல் தலைமைக்கான மூத்த ஆலோசகருமான அட்மிரல் குயிசெப்பே காவோ டிராகோன் உள்ளிட்ட மூத்த நேட்டோ அதிகாரிகளுடன் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்த கலந்துரையாடியிருந்தார்.

இராணுவ பரிமாற்றம் தகவல் மற்றும் நிபுணத்துவப் பகிர்வு, மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் இணைய வழித் திறன்களை உள்ளடக்கிய இராணுவ நவீனமயமாக்கல் ஆகியவை இதன்போது கலந்துரையாடப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு முன்னர் இலங்கை பல்வேறு நாடுகளுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு பேச்சுக்களை நடத்தியிருக்கிறது. பாதுகாப்பு ஒத்துழைப்பு சார்ந்த புரிந்துணர்வு உடன்பாடுகளையும் கூட செய்திருக்கிறது.

அமெரிக்காஇ இந்தியா, சீனா போன்ற பல்வேறு நாடுகளுடன் பாதுகாப்பு சார்ந்த ஒத்துழைப்புகளை இலங்கை பேணி வருகிறது. ஆனால் நேட்டோ இராணுவக் குழுவின் தலைவரும் நேட்டோ உறுப்பு நாடுகளின் அரசியல் தலைமைக்கான மூத்த ஆலோசகருமான அட்மிரல் குயிசெப்பே காவோ டிராகோன் மற்றும் அதிகாரிகளுடன் இலங்கை நடத்தியிருக்கின்ற பேச்சு கவனத்துக்குரிய ஒன்றாக மாறியிருக்கிறது.

அதற்கு முக்கிய காரணம், நேட்டோ என்ற ஒரு இராணுவ கூட்டணியின் தலைவருடனான சந்திப்பு என்பதே ஆகும். இது சந்திப்பு என்பதற்கு அப்பால் இருதரப்பு உறவுகள் ஒத்துழைப்புக்களை வலுப்படுத்துவது

பற்றிய கலந்துரையாடல்களை உள்ளநேட்டோ அமைப்பின் இராணுவ தலைவருடனான இந்த கலந்துரையாடல் பற்றிய தகவல்களை பாதுகாப்பு அமைச்சு சற்று தாமதமாகவே வெளிப்படுத்தியது.

ஆனால் அது ஊடகங்களிலும் சரி, அரசியல் பரப்பிலும் சரி அவ்வளவு பெரிய கவனத்தை ஈர்த்திருக்கவில்லை. 22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூல விவகாரம்இ நாமல்ராஜபக்ஷ கைது உள்ளிட்ட பல்வேறு பரபரப்பான அரசியல் நிகழ்வுகளின் பின்னணியில், இந்த சந்திப்பு மற்றும் பேச்சுக்கள் குறித்த விபரங்கள் ஊடகங்களின் கூடுதல் கவனத்தை பெறவும் இல்லை, அரசியல் கட்சிகளால் அது பற்றி அதிகம் கவனத்தில் கொள்ளப்படவும் இல்லை. இதற்கு எதிர்வினையாற்றும் வகையில் அறிக்கையை வெளியிட்டது, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மாத்திரமே. அந்தகட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி ஜி.வீரசிங்க ஒரு நீண்ட அறிக்கையில் இந்த பேச்சுக்கள் மற்றும் ஒத்துழைப்பு தொடர்பான பலத்த விமர்சனங்களை முன்வைத்திருந்ததுடன் அரசாங்கத்திடம் கேள்விகளையும் எழுப்பியிருந்தார்.

ஏனென்றால் இது அடிப்படையில் இலங்கையின் அணிசேரா கொள்கையை கேள்விக்கு உட்படுத்தக் கூடிய ஒரு விடயமாக இருந்தது. சிறிமாவோ பண்டாரநாயக்கவின் காலத்தில் இருந்து இலங்கை, அணிசோரா கொள்கையை பின்பற்றி வருகிறது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு, எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் நாசர், இந்தோனேசியாவின் தலைவர் சுகார்னோ, யூகோஸ்லாவியாவின் மார்சல் டிட்டோ போன்ற தலைவர்களுடன் இணைந்து அணிசேரா அமைப்பை உருவாக்குவதில் முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவும் குறிப்பிடத்தக்க பங்காற்றியிருந்தார்.

உலகம் நேட்டோ என்றும் வோர்சோ என்றும் இரண்டாக பிளவுபட்டு நின்று பனிப் போரில் ஈடுபட்டிருந்த சூழலில் இந்த இரண்டு முகாம்களுக்குள்ளேயும் சிக்கிக் கொள்ளாமல், நடுநிலையான வெளிவிவகாரக் கொள்கையின் ஊடாக தங்களின் அரசியல் அணுகுமுறைகளை கொண்டு செல்வதே இந்த அணிசேரா கொள்கை ஆகும். இதனை இன்றுவரை பின்பற்றி வருவதாக இலங்கை அரசாங்கம் கூறுகிறது.

ஒவ்வொரு அரசாங்கமும் இதனை முறையாக பின்பற்றியதோ இல்லையோ, அதனை கைவிடவில்லை எனவும் தொடர்ந்து பின்பற்றுவதாகவும் கூறி வந்திருக்கின்றன. பனிப்போர் முடிவுக்கு வந்த பின்னரும் கூட அணிசேரா கொள்கை பல நாடுகளுக்கு அவசியமானதாக இருந்தது. ஏனென்றால் அமெரிக்கா–ரஷ்யா என்றிருந்த பனிப்போர் கால அதிகாரப் போட்டி ஆயுதப் போட்டி, அதன் பின்னர் மெல்ல மெல்ல அமெரிக்க –சீன அதிகாரப் போட்டியாக, வர்த்தக போட்டியாக ஆயுதப் போட்டியாக மாறி இருக்கிறது. இந்த சூழலில் மதில் மேல் பூனையாக இருந்து இருந்து கொள்வது பல நாடுகளுக்கு பாதுகாப்பானதாக காணப்பட்டது. அணிசேரா கொள்கையை பின்பற்றுவதன் மூலம் இலங்கை போன்ற நாடுகள்இ தங்களை நடுநிலை நாடுகளாக குறிப்பிட்டு வந்தன.

இதனூடாக இரண்டு நாடுகளையும் பகைத்துக் கொள்ளாத வகையில் நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தன. இப்போது இலங்கை அரசாங்கம் அந்த நடுநிலைப் போக்கில் அல்லது அணிசேரா கொள்கையில் உறுதியாக இருக்கிறதா என்ற கேள்வி அவ்வப்போது எழுப்பப்படுகிறது.

ஏனென்றால் ஆட்சிக்கு வரும்போது மார்க்சிஸ்ட் அரசாங்கம் என அடையாளப்படுத்தப்பட்டிருந்த போதும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அமெரிக்க இந்திய சார்பு நிலைப்பாட்டுக்குள்ளேயே பெரும்பாலும் தன்னை முன்னகர்த்தி வந்திருக்கிறது.

இது ஏற்கெனவே இலங்கையின் அணி சேரா கொள்கை நிலைப்பாடு உண்மையானதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்த சூழலில் தான் அமெரிக்காவின் தலைமையிலான வட அத்திலாந்தின் ஒப்பந்த நாடுகள் என சொல்லப்படுகின்ற நேட்டோ அமைப்பின் இராணுவத் தலைவருடன் இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் பேச்சு நடத்தி இருக்கிறார். நேட்டோ என்பது ஓர் இராணுவக் கூட்டணி. அது அரசியல் கூட்டணியும் அல்ல வர்த்தக கூட்டணியும் அல்ல.

அமெரிக்காவே அதற்குத் தலைமை தாங்குகிறது. அமெரிக்கா தலைமை தாங்குகின்ற அல்லது அங்கம் வகிக்கின்ற பல அரசியல் கூட்டணிகள் இருக்கின்றனஇ வர்த்தக கூட்டணிகள் இருக்கின்றன. அவற்றிலிருந்து புறம்பான ஒன்றாகவே நேட்டோ கூட்டணி இருக்கிறது.இது முற்று முழுதாக இராணுவ ரீதியான பயிற்சிகள் ஒத்துழைப்புகள் போர் நடவடிக்கைகள் போன்றவற்றிலேயே கவனம் செலுத்துகிறது. நேட்டோ நாடுகளில் ஒன்றின் மீது மேற்கொள்ளப்படக் கூடிய இன்னொரு நாட்டின் படையெடுப்பை இந்த அமைப்பில் உள்ள அங்கத்துவ நாடுகள் தங்கள் மீதான ஆக்கிரமிப்பாகவே கருதும். அந்தளவுக்கு வலுவான இராணுவக் கூட்டணி இது. ஐரோப்பிய நாடுகள் வட அமெரிக்க நாடுகள் போன்றவற்றை பெரும் பாலும் உள்ளடக்கிய இந்த நேட்டோ கூட்டணி திடீரென இலங்கையின் மீது கவனம் செலுத்தி இருப்பதும் இலங்கையின் கவனம் அதன் மீது திரும்பி இருப்பதும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடிய விடயங்கள் அல்ல. இந்திய பெருங்கடலில் இலங்கை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாடு.

இதற்கென இருக்கின்ற பூகோள அரசியல் முக்கியத்துவம் இந்த பிராந்தியத்தில் இருக்கின்ற மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையை ஒரு படி மேலே உயர் நிலையில்

**கட்டுரையாளர்:**
**தமிழகத்தில் இருந்து**
**கேணல் ஹரிகரன்**



வைத்திருக்கிறது. இதனால் தான் இலங்கையை தங்கள் கைக்குள் வைத்துக் கொள்வதற்காக அமெரிக்கா, இந்தியா, சீனா, பாகிஸ் தான், ஜப்பான் என்று பல நாடுகள் போட்டி போடுகின்ற சூழல் இருக்கிறது. அமெரிக்காவின் தலைமையிலான நேட்டோ கூட்டணி முழுமையாக இராணுவ நோக்கில் இயங்குகின்ற சூழலில் அதனுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்த இலங்கை அரசாங்கம் முற்படுவது நேட்டோ கூட்டணியுடன் இணைந்து செயற்படுவதற்கான ஒரு முயற்சிய என்ற கேள்வியை எழுப்ப வைத்திருக்கிறது. இந்த விடயம் தொடர்பாக அரசாங்கம் பதிலளிக்க வேண்டும் என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. அதற்கு இதுவரை அரசாங்கத்திடம் இருந்து எந்த பதிலும் வந்ததாக தெரியவில்லை. அரசாங்கம் இதற்கு பதிலளிக்குமா என்பதும் சந்தேகம் தான்.


ஆனால், நேட்டோ கூட்டணியுடனான ஒத்துழைப்புக்களை இலங்கை வலுப்படுத்திக் கொள்ள முற்படுவதானது, அது புதியதொரு பாதையை நோக்கிய பயணத்தை ஆரம்பித்துள்ளதா அல்லது ஆரம்பிக்க முற்படுகிறதா என்ற கேள்விகளை எழுப்ப வைத்திருக்கிறது. இவ்வாறான ஒரு சூழலுக்குள் இலங்கை சிக்கிக் கொள்ளுமானால் அதன் அணி சேரா கொள்கை தான் முதலில் பலிக்கடா ஆக்கப்படும். இப்போது கூட அது பற்றிய சந்தேகங்கள் தான் எழுப்பப்படுகிறது.

ஆனால் அணிசேரா கொள்கையில் இருந்து இலங்கை விலகிக் கொண்டாலும் அல்லது விலகிக் கொள்வதற்கு முயற்சித்தாலும், அதற்கு இருக்கின்ற பாதுகாப்பு கவசம் உடைந்து போகும்.


எதிர்காலத்தில் அணிசேரா கொள்கையை வைத்து பல நாடுகளின் எதிர்ப்புக்களை அல்லது கோபங்களை சமாளிக்க முடியாத நிலை இலங்கைக்கு ஏற்படும். அத்தகைய ஒரு வேண்டாத வினையை இலங்கை ஆட்சியாளர்கள் தேடிக் கொள்வார்கள் என்று நம்ப முடியவில்லை.

ஆனால் நேட்டோடனான இலங்கையின் உறவுகள், ஒத்துழைப்புக்கள் என்பது எதிர்காலத்தில் இந்தியப் பெருங்கடலில் இலங்கையை மையப்படுத்திய பூகோள அரசியல் நகர்வுகளில், கூடுதல் அதிர்வுகளை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை.


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! சுப நிகழ்ச்சிகளில் இருந்து வந்த தடை நீங்கும். மனசோர்வு அக லும். மன அமைதி பாதிக்கும் படியான சூழ்நிலை ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரத்தில் அதிக லாபம் பெறுவர். அலுவலக வேலைகளால் அலை ச்சல் உண்டாகும். குடும்பத்தில் இருப்ப வர்களின் செயல்களால் வீண் டென்ஷன் ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி செயல்படுவது நன்மை தரும்.





ரிஸபராசி அன்பர்களே! மனத் துணிவு உண்டாகும். எந்த ஒரு காரியத்தையும் துணிவு டன் செய்து அதிக நன்மை அடைவீர்கள். போட்டி பந்தயங்களில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடை க்கும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். உறவினர்களுடன் பேசும் போது நிதானத்தை கடைப் பிடிப்பது நல்லது. புரட்டாதி சனிக்கிழமைகளில் சனிபகவானுக்கு தீபம் ஏற்றி வழிபடவும்.





மிதுனராசி அன்பர்களே! முன்பு தடைபட்ட காரியங்கள் எவ்வித இடையூறுமின்றி நடந்து முடி யும். வெளியூர் பயணங்கள் உண்டாகும். அதனால் நன்மை யும் ஏற்படும். வழக்குகளில் இருந்து வந்த சோதனைகள் மாறும். சொத்து சம்பந்தமான விஷயங்களில் இருந்து வந்த தடைகள் அகலும். நண்பர்கள் பல விதங்களிலும் ஆத ரவாக இருப்பர். தொழில் வியாபாரத்தில் இருந்த இடையூறுகள் குறையும். கண வன் மனைவிக்கிடையே மகிழ்ச்சி நீடிக்கும்.





கடகராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியம் சாதகமாக நடந்து முடி யும்.தொழில் வியாபாரத்தில் கூடு தல் அலைச்சல் இருந்தாலும் முடிவில் சாதகமான பலன் கிடைக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல் வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர் களுக்கு மேலதிகாரிகள் ஆதரவு கிடைக் கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். கணவன், மனைவி பிரச்னைகளை நிதான மாக பேசுவது நல்லது.





சிம்மராசி அன்பர்களே! எதிர் பாராத நல்ல திருப்பம் உண் டாகும். திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடியே நடக்கும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் வியாபாரத்தில் மேன்மை உண்டாகும். வியாபார போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். வாடிக்கை யாளர்களை அனுசரித்து செல்வது நல் லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் முன் னேற்றம் காண்பர்.




கன்னிராசி அன்பர்களே! எதிர் பாராத நல்ல திருப்பம் உண் டாகும். திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடியே நடக்கும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் வியாபாரத்தில் மேன்மை உண்டாகும். வியாபார போட்டிகளில் சாத கமான பலன் கிடைக்கும். உத்யோகத் தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பர். நிலுவையில் உள்ள தொகை வந்து சேரும். கணவன், மனைவி உறவு மகிழ்ச்சிகரமாக இருக்கும்.





துலாம்ராசி அன்பர்களே! நினை த்த காரியத்தை செய்து முடிப்ப தில் வேகம் காட்டுவீர்கள். தொழில் வியாபாரத்தில் ஏற்படும் பண தேவையை சரிகட்ட நண்பர்கள் மூலம் உதவி கள் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர களுக்கு அலுவலகம் தொடர்பான வேலைகளில் அலைச்சல் இருக்கும். மேலிடத்திலிருந்து கனிவான உபசரிப்பு கிடைக்கும். குடும்பத்தில் அனுகூலமான பலன்கள் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே பழைய விஷயங்களை பேசாமல் இருப்பதன் மூலம் ஒற்றுமை இருக் கும்.





விருச்சிகராசி அன்பர்களே! எதிர்ப்புகள் நீங்கி எதிலும் உற் சாகம் உண்டாகும். மனமகிழ்ச்சி க்காக பணம் செலவு செய்ய தயங்க மாட்டீர்கள். நண்பர்கள் சேர்க்கை யும் அவர்களால் உதவியும் கிடைக்கும். வாக்கு வன்மை அதிகரிக்கும். வியாபாரம் தொடர்பான வெளியூர் பயணங்கள் சாதக மான பலன் தரும். உத்யோகத்தில் பொறு ப்புகள் கூடும். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வும் கிடைக்கக்கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.








தனுசுராசி அன்பர்களே! எந்த ஒரு காரியம் பற்றியும் ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுப்பீர்கள். வெளியூரில் இருந்து வரும் கடிதங்கள் மூலம் மகிழ்ச்சி ஏற்படும். தொழில், வியாபாரத்தில் புதிய உத்வேகம் பிறக்கும். தொழில் தொடர்பான விவகாரங் களில் இருந்து வந்த வீண் இடையூறு கள் ஏற்பட்டு நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் மூலம் அனுகூலம் ஏற்படும். புதிய வேலையில் சேர்ந்தவர்களுக்கு பதவி உயர்வு வரும்.




மகரராசி அன்பர்களே! எடுத்த காரியம் கைகூடும். கடன் விவ காரங்களில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். வழக்கு களில் இருந்து வந்த தொய்வு நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். பயணங்கள் மூலம் லாபம் கிடைக்கலாம். மேலதிகாரிகளால் உத்யோகஸ்தர்களுக்கு நன்மை உண்டா கும். சக ஊழியர்கள் உங்களுக்கு ஆதர வாக இருப்பர். வாழ்க்கை துணை மூலம் ஆதாயம் கிடைக்கும்.




கும்பராசி அன்பர்களே! எதிர் பாராத சுபச்செலவுகள் ஏற்படும். எதிர்ப்புகள் நீங்கும். கவலையை விட்டு விட்டு தொழில் வியாபார த்தில் கவனம் செலுத்துவது நல்லது. உத்யோகஸ்தர்களுக்கு வெளியூர் மாற்றங் கள் உண்டாகலாம். சக ஊழியர்களிடம் பேசும் போது கோபப்படாமல் இருப்பது நன்மை தரும். குடும்ப உறுப்பினர்களிடம் இருந்த மனத்தாங்கல் நீங்கி மகிழ்ச்சியும், சகஜ நிலையும் காணப்படும்.




மீனராசி அன்பர்களே! வரவை போலவே செலவும் இருக்கும். பயணங்களால் அலைச்சலும், எதிர்பாராத பொருள் இழப்பும் இருக்கும். எனவே கவனமாக இருப்பது நல்லது. திடீர் கவலை ஏற்பட்டு நீங்கும். கூட்டு தொழில் செய்பவர்கள் முன்னேற்றம் காண்பர். வியாபாரம் தொடர்பான முயற்சி வீண் முயற்சியாக இருந்தாலும் பின்னாளில் அதற்கான பலன் கிடைக்கும். உத்யோக த்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் வேலை சுமை இருக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# நான் கண்ட டி.பி.எஸ்.ஜெயராஜ்!

(21ம் பக்கத் தொடர்ச்சி) மூலமும் அறிய முடியாது என்பது போல அவரது செய்திகளுக்கு மூலம் எது என்று அறிய முடியாதவகையில் செய்திகளை நுட்பமாக வழங்கி வந்தார். வீரகேசரியிலிருந்து விலகி அவர் 'தி ஐலண்ட்' பத்திரிகையில் ஈழப்போர் சம்பந்தமான ஆய்வுக்கட்டுரைகள் எழுத ஆரம்பித்த நாட்களிலேயே, அவர் எழுத்துகளை பலரும் தேடி வாசித்ததை நான் பல்கலைகழகத்தில் இருந்த காலத்தில் இருந்தே அவதானிக்க முடிந்தது. நான் ஜெயராஜை கடைசியாக 1987 இறுதிப் பகுதியில் கொழும்பு ஆமர் வீதி யில் சந்தித்து உரையாடியது இன்னமும் ஞாபகத்தில் உள்ளது. அப்போதும் அவர் தனக்கு நேர்ந்த கஷ்டங்கள் பற்றியும் நான்காம் மாடி அனுபவங்கள் பற்றியும் என்னோடு உரையாடினார்.

அந்தநாளில், ரிச்சர்ட் டி சொய்சா என்று ஒரு முற்போக்கான பத்திரிகையாளர் ஆங்கில தொலைகாட்சியில் கடமையாற்றிவந்தவர். ஆனால், அவர் இருந்தாற் போல் இனந்தெரியாதோரால் கொலை செய்யப்பட்டார். அண்மையில் கொழும் பிலிருக்கும் நண்பர் ஒருவரோடு பேசிய போது டி.பி.எஸ். இலங்கையில் இருந்திருந்தால் அவருக்கும் எப்போதோ அதே கதி வந்திருக்கும் என்று தெரிவித்தார்.

ஜெயராஜின் வாழ்க்கை எப்போதும் மிகவும் கடினமானதாகவும் சவால்கள் நிறைந்ததாகவும் இருந்து வந்திருக்கிறது. இருந்தாலும், அவற்றையெல் லாம் தாங்கி வீறு நடை போட்டு தனக்கென்றே ஒரு வாசகர் கூட்டத்தையும் உருவாக்கியிருந்தார். அவரது ஆங்கில கட்டுரைகள் பலவற்றை இந்த நேரத் தில் தமிழாக்கம் செய்து வெளியிடுவது உண்மையிலேயே அவருக்கு செய் யும் ஒரு சிறப்பு மரியாதையாகும் என்பதோடு நமது தேசியப் போராட்டத்தின் நீண்ட பயணத்தையும் பக்கச் சார்பின்றி வருங்கால சமூகத்தினருக்கு சொல்லுவது மிகவும் பொருத்தமானது.

# ஜே.வி.பி.யின் இலக்கு என்னவாக இருக்கும்?

(14ம் பக்கத்தொடர்ச்சி)எதிர்பார்ப்பது, எதிர்பார்ப்பவர்களின் அரசியல் அறிவீன மாகவே இருக்க முடியும். முக்கியமாக தமிழர் பிரச்சினையில் எந்தவொரு ஆக்கபூர்வமான முடிவையும் அவர்கள் எடுக்கப் போவதில்லை. எடுக்கவும் முடியாது. இதுவே இதுவரையான தென்னிலங்கை அரசியல் வரலாறு. அந்த வரலாற்றுக்கு மாறாக நகர்ந்தால் ஜே.வி.பி தோல்விடைந்து விடும். வரலாற் றில், எவராவது, கிடைத்த அதிகாரத்தை இழக்கும் முட்டாள்களாக இருப் பார்களா?

# தெற்கின் அரசியல் போட்டியில் தமிழ்த்தரப்பு

(19ம் பக்கத் தொடர்ச்சி) இவ்வாறான விடயங்களில் மூக்கை நுழைப்பதைத் தவிர்ப்பதே தமிழ் மக்களுக்கும் தனிப்பட்ட ரீதியில் செல்வம் அடைக்கல நாதனுக்கும் நன்மை பயக்கும். முன்னைய ஆட்சிகளைப் போலவே தற்போதைய ஆட்சியிலும் தமிழ் மக்களுக்கு எந்தவித நன்மையும் இல்லை என்பது உண்மையாயினும் தெற்கைப் பொறுத்தவரை அல்லது இலங்கையைப் பொறு த்தவரை பல வழிகளில் முன்னைய ஆட்சியை விட தற்போதைய ஆட்சி மேலா னது என்பது பெரும்பாலான மக்களின் கணிப்பாக உள்ளது.

அந்தவகையில் தெற்கின் தற்போதைய அரசியல் போட்டியில் தமிழ்த்தரப்பு பங்கா ளராவது எவ்வகையிலும் ஆரோக்கியமாக அமையப்போவ தில்லை. பதிலாகப் பார்வையாளராக இருந்து கொண்டு இப்போட்டியில் உருவாகக்கூடிய வாய்ப்பு களை எவ்வாறு தமிழ் மக்களுக்கானதாக மாற்றமுடியும் என்பதைப் பற்றிச் சிந்திப்பதே கூடிய நன்மை பயக்கும்.

# சவுதியில் 5 வருட சிறைத் தண்டனை பெற்ற இலங்கை தமிழ்

(3ம் பக்கத் தொடர்ச்சி) அரச தரப்பில் மேற்கொள்ளப்பட்டு வந்த முயற்சிகளுக்கு மத்தி யில் இந்தத் தீர்ப்பு பெரும் அதிர்ச் சியை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் தகவல் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே வெளியிடப்படுவதாகவும், அனோஜனுக் காக அடுத்த கட்டமாக மேற்கொள்ளப்பட வேண்டிய சட்ட ரீதியான மற்றும் பிற முயற்சிகளுக்கு அனைவரினதும் ஒத்துழைப்பும் ஆதரவும் எதிர்பார்க்கப்படு வதாகவும் சமூக செயற்பாட்டாளர் ராஜ்குமார் ரஜீவ்காந்த் தனது முகநூல் பதி வில் தெரிவித்துள்ளார்.

# ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் எயார்பஸ் வழக்கு:-

(4ம் பக்கத் தொடர்ச்சி) மற்றும் சந்தேகநபர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத் தரணி ஷவீந்திர பெர்னாண்டோ ஆகியோரின் சமர்ப்பணங்களைப் பரிசீலித்த கொழு ம்பு பிரதான நீதவான் அசங்க எஸ். போதரமை இக் கட்டளையைப் பிறப்பித்தார். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு எயார்பஸ் விமானங் களை கொள்வனவு செய்யும் போது இடம் பெற்றதாகக் கூறப்படும் முறைகேடு தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளுக்கு அமையவே நாமல் ராஜபக்ஷ கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த வழக்கு தொடர் பிலான மேலதிக சட்ட நடவடிக்கைகள் நீதிமன்றத்தில் தொடர்ந்து முன்னெடு க்கப்பட்டு வருகின்றன.


## விமல் வீரவன்சவை விசாரிக்க உத்தரவு

இதேவேளை முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச ஆற்றிய உரையொன்றின் மூலம் நீதிமன்ற அவமதிப்பு இடம்பெற்றுள்ளதா என்பது குறித்து விசாரணைகளை முன்னெடுக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் பொலிஸ் அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது. 12ஆம் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் விமல் வீரவன்சவி னால் வெளியிடப்பட்ட கருத்தொன்று நீதிமன்றத்தை அவமதிப்பதாகக் கூறி, இல ஞ்ச ஊழல் ஆணைக்குழு முன் வைத்த கோரிக்கையை பரிசீலித்த கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ். போதரமை இக் கட்டளையைப் பிறப்பித்துள்ளார்.

எயார்பஸ் கொடுக்கல் வாங்கல் விவகாரம் தொடர்பில் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு 18 செப் 2026 வெள்ளிக்கிழமை நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்தக் கோரிக்கை முன் வைக்கப்பட்டது. இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஜனக பண்டார, விமல் வீரவன்சவின் உரை அடங்கிய குறுந்தகடு ஒன்றை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து விசாரணைக்கு கோரி க்கை விடுத்தார். இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பிரதான நீதவான் அசங்க எஸ். போதரமை, சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணை நடத்தி நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸ் மா அதிபருக்குக் கட்டளையிட்டார்.

# தெற்கின் அரசியல் போட்டியில் தமிழ்த்தரப்பு பங்காளரா? அல்லது பார்வையாளரா?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
-க. அருந்தவபாலன் -



முன்னைய ஆட்சியாளர்கள் மற்றும் உயர் அரச நிர்வாகிகள் மீதான அனுர அரசாங்கத்தின் தற்போதைய சட்ட நடவடிக்கைகள் கடந்தகால முறைகேடுகளுக்கு நீதிவழங்குவது மட்டுமன்றி தமது எதிர்கால அரசியல் இருப்பை உறுதிப்படுத்துவதற்குமானது என்பதைப் புரிந்து கொள்வதற்கு ஆழமான அரசியல் அறிவு தேவையில்லை.

அதிலும் அந்நடவடிக்கைகள் ராஜபக்ஷ தரப்பினரை அதிகளவில் மையங்கொண்டிருப்பதற்குக் கரணம் கடந்த காலத்தில மிக அதிகளவிலான ஊழல் மற்றும் அதிகார முறைகேடுகளில் ஈடுபட்டிருந்தது அவர்கள் தான் என்பதற்கப்பால் எதிர்காலத் தேர்தல்களில் தேசிய மக்கள் சக்திக்கு அதிகளவு சவால் விடுக்கக் கூடியவர்களும் அவர்கள் தான் என்பதனாலாகும்.

இந்த வகையில் அரசாங்கத்தின் இந் நடவடிக்கைகளில் ஆட்சி மேம்பாட்டை விட தெற்கின் அரசியல் போட்டியே மேலோங்கியுள்ளது என்பது தான் உண்மையான நிலை. அவ்வாறாயின் இந்த அரசியல் போட்டியில் வெற்றியடைவதற்காக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் தமிழ்த் தலைவர்கள் எத்தகைய அணுகுமுறைகளைப் பின்பற்றுவது பொருத்தமாக அமையும்?

தெற்கின் அரசியல்போட்டி என்பது இந்நாட்டின் பௌத்த சிங்கள பேரினவாதத்துக்கு யார் தலைமை தாங்குவது என்பதற்கான ஒரு போட்டியாகும். அது இந்நாட்டில் வாழும் ஏனைய சிறுபான்மைத் தேசிய இனங்களுக்கான உரிமைகளை வழங்குவதற்கான ஒரு போட்டியன்று. பதிலாக அவர்களின் உரிமைகளைக் கருவறுப்பதில் யார் மேலானவர் என்பதுடனும் அது இறுகப்பிணைந்த ஒன்று.

அனுர அரசாங்கம் தமிழ் மக்கள் தொடர்பில் எதுவும் செய்யாமல் இருப்பது, அவ்வாறு எதுவும் செய்யாமல் இருக்கும் போதே தமக்கெதிரான அரசாங்கத்தின் நடவடிக்கைகளைத் தவிர்ப்பதற்கு எதிர்கட்சிகள் இனவாதக் கருத்துக்களை விதைப்பது இரண்டுமே இதனை நன்கு வெளிப்படுத்தும். இதனால் தான் இப்போட்டியில் தமிழர் தரப்பு பங்காளராக வேண்டுமா அல்லது பார்வையாளராக இருந்தால் போதுமா என்ற கேள்வி எழுகின்றது.

தெற்கின் அரசியல் போட்டிக்காக அரசாங்கம் எடுக்கும் முக்கிய முடிவுகள் சில இந்நாட்டின் குடிமக்கள் என்ற வகையில் தமிழ் மக்களையும் பாதிக்கும். அதற்கு மேலாக மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படும்போது இனங் கடந்து சிந்திக்க வேண்டும். அதனால் அவ்வாறான விடயங்களில் பங்கெடுக்க வேண்டியது அவசியமானது என்ற தமிழ் அரசியல் தலைவர்கள் சிலரின் கருத்துகளில் உண்மை இருப்பினும் அதனால் தமிழ் மக்களுக்கு கிடைக்கக் கூடிய தேறிய நன்மை அல்லது தீமை என்ன என்பதற்கே தமிழ்த்தரப்பு கூடிய முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்பதையும் மறக்கக் கூடாது. அது மட்டுமன்றி இவ்வாறான விடயங்களில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை எதிர்ப்பது என்பது மறைமுகமாக எதிர்த்தரப்பின் பக்கம் தமிழ்தரப்பு நிற்கிறது என்ற தோற்றத்தையும் உருவாக்கும்.

இதன் விளைவுகள் பற்றியும் அவர்கள் சிந்திக்கவேண்டும். தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் எல்லா அரசாங்கங்களும் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள் தான் என்றாலும் ஒப்பீட்டு ரீதியில் முன்னையவை மிகமோசமான நாற்றங் கொண்டவை என்பதை மறுக்க முடியாது.

இந்தப் பின்புலத்தில் வைத்தே அரசாங்கத்தின் முக்கிய தீர்மானங்கள் தொடர்பிலான தமிழ்த்தலைவர்களின் எதிர்வினைகள் பற்றிய சில விமர்சனங்கள் எழுகின்றன. இதில் தற்போது அதிகளவு பேசு பொருளாகவுள்ள அரசியலமைப்புக்கான 22ஆவது திருத்தம் முக்கியம் பெறுகிறது. இத்திருத்தத்துக்கான அடிப்படை நோக்கமும் அதற்கு இரு தரப்புகளாலும் பூசப்படும் கவர்ச்சிகரமான முலாமும் வேறுபட்டவை என்பது வெளிப்படையானவை.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை இந்த அரசியல் போட்டியில் அது வெற்றிக் கொள்வதற்கு தற்போதைய பிரதம நீதியரசர் தொடர்ந்து பதவியிலிருப்பது அவசியமாகும். அரசாங்கமொன்று தன்னைப் பலப்படுத்துவதற்குக் கையாளக்கூடிய பிரதான உத்திகள் இரண்டு. ஒன்று பொருளாதார, சமூக நல ரீதியாக நாட்டை உயர்த்தி மக்களைக் தனது பிடிக்குள் வைத்திருப்பது. இரண்டாவது எதிர்க் கட்சிகளைப் பலவீனப்படுத்துவதன் மூலம் தன்னைத் தக்கவைத்துக் கொள்வது.

இவற்றுள் முதலாவது உத்தியைப் பயன்படுத்துவதில் அனுர அரசாங்கத்துக்கு பல மட்டுப்பாடுகள் உள்ளன. கையறு நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த நாட்டின் பொருளாதாரம். அதனை மீட்பதற்று சர்வதேச நாணய நிதியத்திடம் சரணடைந்தமை. அதனால் ஒருபுறத்தில் சமூக நலன்புரிச் செலவுகளின் மட்டுப்பாடு மறுபுறத்தில் வரிகள் மற்றும் நுகர்வுப்பொருட்களின் விலை உயர்வுகள். இவை யாவும் மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் தொடர்புபட்டவை. அதனால் அவற்றின் இன்றைய நிலை அரசாங்கத்துக்குச் சாதகமானவையல்ல.

எதிர்க் கட்சிகள் அதிகாரத்தில் இருந்தாலும் அவர்களுக்கும் இதே நிலை தான் என்றாலும் தற்போது எதிர்த்தரப்பில் இருப்பதால் அவர்களுக்கு இது சாதகமானது. இந்நிலைமை படிப்படியாக அரசாங்கத்தின் மீதான அதிருப்தியைத் தோற்றுவித்து வருகின்றது என்பதையும் அதனால் அரசாங்கத்தின் மீதான மக்கள் ஆதரவு வீழ்ச்சியடைந்து வருகிறது என்பதையும் சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதனால் அரசாங்கம் தன்னை வளர்ப்பதற்கான உத்திக்குப் பதிலாக எதிராளிகளைப் பலவீனப்படுத்துவதற்கான உத்தியையே அதிகளவில் கையாள வேண்டியுள்ளது. அதற்கான நிறைய வாய்ப்புகளை ராஜபக்ஷாக்கள் உட்பட முன்னைய ஆட்சியாளர்கள் விட்டுச் சென்றுள்ளனர். அந்த வாய்ப்புகளை தமக்கானதாக மாற்றுவதற்கு அரசாங்கத்துக்கு தற்போதைய பிரதம நீதியரசர் அவசியமானவர்.

தற்போதைய அரசியலமைப்பு விதிகளின்படி அவர் இவ்வாண்டு ஓய்வு பெற்றால் அப்பதவிக்கு அடுத்து வரவிருப்பவர் கோதாபயவினால் நியமனஞ் செய்யப்பட்ட உச்சநீதிமன்ற நீதியரசர் ஒருவர். அவர் அரசாங்கத்தின் இத்தகைய முன்னெடுப்புகளுக்கு எவ்வகையில் ஒத்துழைப்பார் என்பது கேள்விக்குறியாக இருப்பதால் தற்போதைய பிரதம நீதியரசரின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு அரசாங்கம் விரும்புகிறது என்பதுதான் உண்மை.

அது மட்டுமன்றி அரசாங்கத்தின் பயனுறுதியான செயற்பாடுகளுக்கும் இன்னும் இரண்டு ஆண்டுகளே உள்ளன. அதற்கடுத்த இறுதி ஆண்டு தேர்தலுக்கான முனைப்புகளே முக்கியம் பெறும். அதனால் அடுத்துவரும் இரண்டாண்டுகளும் தேசிய மக்கள் சக்தியின் எதிர்கால அரசியல் இருப்புகானவை. எனவே பிரதம நீதியரசரின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கு அனுபவமுள்ளவர்களைத் தக்க வைத்தல், நிலுவையிலுள்ள வழக்குகளை விரைந்து முடித்தல் என்ற கதைகள் அரசாங்கத்தால் அளக்கப்படுகின்றன.

மறுபுறத்தில் தற்போதைய நீதியரசர் ஓய்வுபெற்று அடுத்தவர் வந்தால் தமக்கு மூச்சுவிட வழியேற்படக் கூடும் என்ற ஊகமே எதிர்க்கட்சிகள் இச் சட்டமூலத்தை எதிர்ப்பதற்கான உண்மையான காரணம். ஆனால் அவர்கள் அதற்குப 'பூசும் கவர்ச்சி முலாம் நீதித்துறையைப் பாதுகாத்தல் என்பது.

இவ்வாறு போட்டியின் உண்மைத் தன்மை வேறாக இருக்கையில் இவற்றுள் தமிழ்த்தரப்பு அதிகளவில் மூக்கை நுழைப்பது அவசியம்தானா? நீதித்துறைச் சுதந்திரம் பாதிக்கப்படக் கூடும் என்பது ஒரு ஊகந்தான். அதற்கு மேலாக இலங்கையின் நீதித்துறையில் அரசாங்கங்களின் தலையீடு என்பது இந்நாட்டுக்குப் புதியதொன்றல்ல. முன்னைய ஆட்சிகளுடன் ஒப்பிடும்போது இந்த வயது அதிகரிப்பு மாற்றம் வெறும் ஜீப்பிதான். அதற்கு மேலாக தமிழ் மக்களின் முக்கிய விடயங்களில் இந்நாட்டின் நீதித்துறை எப்போது சுதந்திரமாக இருந்தது? அதற்கு மேலாக எல்லாவற்றிலும் தமிழ்த் தேசியம் பேசுவோர் எதிர்த்தரப்புகளுடன் இணைந்து ஸ்ரீலங்கா தேசியத்துக்குக் குரல் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன என்ற கேள்வியும் இங்கே எழுகின்றது. நாளைக்கு தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கையொன்றில் அவர்கள் ஒன்றுபட்டுவிடுவார்கள். தமிழ்தரப்பு தனித்து விடப்படும். இதுவே கடந்த கால வரலாறு.

சட்டத்தரணிகள் தொழில் சார்ந்து இவ்வாறான விடயங்களில் ஈடுபடுவது வேறு விடயம். ஆனால் அதனை தமிழ்மக்களின் அரசியலுடன் இணைப்பதும் அவர்களிடம் அவற்றைத் தமிழ் மக்களிடம் விற்க முயற்சிப்பதும் தவிர்க்கப்பட வேண்டும். அதுமட்டுமல்ல தமிழ் அரசியல்வாதிகள் பலர் சட்டத்தரணிகளாக இருப்பதால் அவர்களின் தொழில்முறை முன்னெடுப்புகள் அரசியல் முன்னெடுப்புகளாகவும் பார்க்கப்படும் நிலைமை உள்ளதால் இவ்வாறான விடயங்களை முன்னெச்சரிக்கையுடன் அணுகுவதே தமிழர் அரசியலுக்கு நல்லது. சிறைச்சாலை அசம்பாவிதத்தை எதிர்த்து நீதியமைச்சருக்கெதிராகப் பாராளுமன்றில் கொண்டவரப்பட்ட நம்பிக்கையில்லா முன்மொழிவு போன்ற எதிர்கட்சிகளின் அரசியல் நோக்கிலான முன்னெடுப்புகளுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாகவும் தமிழ்க்கட்சிகள் அவதானமாக இருக்கவேண்டும்.

அண்மையில் பாராளுமன்றில் உரையாற்றும்போது ரெலோ கட்சித்தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கோதாபய ராஜபக்ஷவை இன்னும் ஏன் கைது செய்யவில்லை என கேள்வி எழுப்பியிருந்தார். கோதாபய கைது செய்யப்படவேண்டும். அதன் மூலம் தமிழ் மக்களுக்கான நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால் அது தமிழ் மக்களுக்கெதிராக அவரால் செய்யப்பட்ட கொடூரங்களுக்கான தண்டனையாக இருக்க வேண்டும்.

இப்போது கோதாபயவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தமிழ் மக்களுடன் தொடர்புபட்டவையல்ல. அவ்வாறான நடவடிக்கைகள் எவற்றிலும் அனுர தரப்பு இறங்காது என்பதையும் துணிந்து கூறமுடியும். அரசாங்கத்தின் தற்போதைய நடவடிக்கைகள் தெற்கின் அரசியல் போட்டிக்கானவை. இதில் கோதாபயவை கைது செய்வது அல்லது விடுவது என்பது அவர்களின் பிரச்சினை. (18ம் பக்கம் பார்க்க)



# வரலாற்றை ஒரு போதும் மாற்ற முடியாது! முதல்வர் விஜய்க்கு மு.க.ஸ்டாலின் பதிலடி!



திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் 10 செப் 2026 அக்கட்சிக்கு எதிராகத் தமிழக முதல்வர் சி. ஜோசப் விஜய் முன்வைத்த குற்றச்சாட்டுகளுக்குப் பதிலடி கொடுத்தார்.

வரலாற்றை ஒரு போதும் மாற்ற முடியாது என்று இதன் போது வலியுறுத்திய அவர், அவசரநிலைக் காலத்தில் திமுக மேற்கொண்ட போராட்டங்களையும், குறிப்பாக 'உள்நாட்டுப் பாதுகாப்புப் பராமரிப்புச் சட்டத்தின்' (MISA) கீழ் தான் கைது செய்யப்பட்டதையும், காவலில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதாகக் கூறப்படுவதையும் நினைவுபடுத்தினார்.

'எக்ஸ்' (ஓ) தளத்தில் பகிரப்பட்ட காணொளிச் செய்தி ஒன்றில், தமிழ்நாடு சட்டமன்றத்தில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் அண்மையில் தெரிவித்த கருத்துகளுக்குப் பதிலளித்த ஸ்டாலின் அரசியல் குற்றச்சாட்டுகளால் திமுகவின் வரலாற்றையோ அல்லது அதன் கொள்கை ரீதியான போராட்டத்தையோ மாற்றிவிட முடியாது என்றும் கூறினார்.

தம்பி விஜய், நீங்கள் சொன்னது உண்மை தான் அது பொய் அல்ல. அவசர நிலைக் காலத்தில் அதை எதிர்த்துத் தலைவர் கலைஞர் மெரினா கடற்கரையில் ஒரு பிரம்மாண்டமான பொதுக்கூட்டத்தை ஏற்பாடு செய்து, மிசா சட்டத்தைக் கடுமையாக விமர்சித்தார்.

அதைத் தொடர்ந்து அப்போது ஆட்சியில் இருந்த மத்திய அரசு, 1976ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதியன்று திமுக அரசைக் கலைத்தது என்று ஸ்டாலின் கூறினார்.

தமது கைது நடவடிக்கையை நினைவு கூர்ந்த ஸ்டாலின், திமுக அரசு கலைக்கப்பட்ட உடனேயே காவல்துறையினர் தனது தந்தையும் முன்னாள் முதலமைச்சருமான மு. கருணாநிதியின் கோபாலபுரம் இல்லத்திற்கு வந்ததாகக் கூறினார்.

அரசு கலைக்கப்பட்ட அடுத்த வினாடியே மிசா (MISA) சட்டத்தின் கீழ் என்னைக் கைது செய்யக் காவலர்கள் கோபாலபுரம் வீட்டிற்கு வந்தனர். அன்று நான் வீட்டில் இல்லை. என் மகன் தேர்தல் பிரச்சாரத்திற்குச் சென்றிருந்தான் அவன் நாளை தான் திரும்புவான். அவன் வந்ததும் நானே உங்களுக்குத் தகவல் தருகிறேன் அப்போது வந்து அவனைக் கைது செய்துகொள்ளுங்கள் என்று கூறி கலைஞர் அவர்களைத் திருப்பி அனுப்பினார், என்று அவர் கூறினார்.

வீடு திரும்பிய மறுநாளே தான் கைது செய்யப்பட்டதாகக் கூறிய ஸ்டாலின், சிறையில் கடுமையான உடல் மற்றும் மன ரீதியான சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டதாகவும் குற்றம் சாட்டினார்.

சிறையில் எனக்குப் பல கொடுமைகள் இழைக்கப்பட்டன. தொழுநோயாளிகள் வைக்கப்பட்டிருந்த ஒரு இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு நாங்கள் அடைத்து வைக்கப்பட்டோம். ஒரு சிறிய அறையில் பத்து பேர் அடைக்கப்பட்டிருந்தனர் என்று கூறிய அவர், காவலர்கள் கைதிகளைத் தடிகளால் தாக்கியதாகவும், பூட்ஸ் காலணிகளால் உதைத்ததாகவும் தெரிவித்தார்.

சிறையில் தாக்கப்பட்டதைத் தொடர்ந்தே திமுக தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிட்டி பாபு உயிரிழந்தார் என்று குற்றம் சாட்டிய அவர், அந்தத் தாக்குதலின் போது தனது தாடை எலும்பும் உடைந்ததாகக் குறிப்பிட்டார்.

நீங்கள் உங்களை ஒரு கொள்கை சார்ந்த தலைவர் என்று கூறுகிறீர்கள். பேரறிஞர் அண்ணா காலத்திலிருந்தே இது தான் திமுகவின் வரலாறு. அந்த வரலாற்றின் ஒரு பகுதியாக நானும் இருப்பது எனக்குப் பெருமைக்குரிய விடயம். என்னை யார் இழிவுபடுத்த முயன்றாலும், வரலாற்றை ஒரு போதும் மாற்ற முடியாது. அது என்றென்றும் அப்படியே நிலைத்திருக்கும் என்று ஸ்டாலின் கூறினார்.

சர்க்காரியா ஆணையம் மற்றும் கருணாநிதி மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து விஜய் முன்வைத்த குற்றச்சாட்டுகளையும் ஸ்டாலின் நிராகரித்தார். அக் குற்றச்சாட்டுகள் உண்மையானவையாக நிரூபிக்கப்பட்டிருந்தால், அடுத்தடுத்து வந்த அரசுகள் நடவடிக்கை எடுத்திருக்கும் என்று அவர் கூறினார்.

அமலாக்கத் துறை வழக்குகளை திமுகவிற்கு எதிரான ஆதாரங்களாகப் பயன்படுத்துவதை அவர் மேலும் விமர்சித்ததுடன், அரசியல் பழி வாங்கும் நோக்கத்திற்காக அந்த அமைப்பு பயன்படுத்தப்பட்டதாகவும் குற்றம் சாட்டினார்.

முதலமைச்சர் பதவிக்குரிய கண்ணியத்தைக் காத்து நிர்வாகப் பணிகளில் கவனம் செலுத்துமாறு ஸ்டாலின் விஜயை வலியுறுத்தினார்.

தமிழ்நாடு சட்டமன்றம் கண்ணியமும் மதிப்பும் வாய்ந்தது. பல சிறந்த தலைவர்கள் மற்றும் சான்றோர்களால் செதுக்கப்பட்ட ஓர் இடம் இது. அந்தப் பொறுப்பு இப்போது உங்கள் வசம் உள்ளது, என்று ஸ்டாலின் கூறினார்.

தேவையற்ற சர்ச்சைகளை விடுத்து, சட்டம்-ஒழுங்கு, நலத்திட்டங்கள், தமிழ்நாட்டின் வளர்ச்சி மற்றும் மாநிலத்தின் உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றின் மீது சட்டமன்ற விவாதங்களை மையப்படுத்துமாறு அவர் விஜய்யிடம் கேட்டுக்கொண்டார்.

சட்டம்-ஒழுங்கு பராமரிப்பு, பரந்தூர் விமான நிலையத் திட்டம், விவசாயக் கடன் தள்ளுபடி மற்றும் சமையல் எரிவாயு உருளை தொடர்பான வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட தோல்விகள் எனப் பல்வேறு விவகாரங்கள் குறித்து விஜய் தலைமையிலான அரசு மீது ஸ்டாலின் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்.

உங்கள் நிர்வாகமும் ஒரு திரைப்படப் படப்பிடிப்பைப் போலவே உள்ளது. திறமையற்ற உங்கள் நிர்வாகத்தை மறைக்க, இது போன்ற பல்வேறு 'ரீல்ஸ்' (reels) காணொளிகளை வெளியிட்டு ஒரு முழு தலைமுறையையும் நீங்கள் ஏமாற்றுகிறீர்கள்,'' என்று அவர் குற்றம் சாட்டினார்.

அதிகாரத்தில் இல்லா விட்டாலும், தமிழ்நாட்டிற்காகவும் அதன் மக்களுக்காகவும் திமுக தொடர்ந்து பாடுபடும் என்று ஸ்டாலின் கூறினார்.

அதிகாரத்தை இழந்ததால் திமுக ஒரு போதும் தோல்வியடைந்ததாகக் கருதப்பட்டதில்லை. நாணயத்தின் இரு பக்கங்களைப் போல, இதை மக்கள் சேவையின் மற்றொரு முகமாகவே நான் பார்க்கிறேன். நாம் அதிகாரத்தில் இருந்தாலும் இல்லா விட்டாலும், தமிழ்நாட்டின் உரிமைகள், அதன் வளர்ச்சி மற்றும் மக்களுக்காகத் தொடர்ந்து போராட வேண்டும் என்று அவர் கூறினார்.

அவர்களது தாத்தாவுக்காக நாங்கள் போராடினோம். அவர்களது தந்தைக்காகவும் போராடினோம். இப்போது அவர்களுக்காகவும் போராடுவோம். இதுவே நமது திமுகவின் வரலாறு. அந்த வரலாறு ஒருபோதும் மாறாது மாறவும் கூடாது என்று அவர் மேலும் கூறினார்.

செப்டம்பர் 7 அன்று சட்டமன்றத்தில் பேசிய விஜய், திமுக மீது ஊழல் குற்றச்சாட்டுகளை முன் வைத்ததோடு, கருணாநிதி தலைமையிலான அரசுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பாக சர்க்காரியா ஆணையத்தின் அறிக்கையையும் சுட்டிக்காட்டிய சில நாட்களுக்குப் பின்னர் அவரது இந்தக் கருத்துகள் வெளியாகியுள்ளன.

கட்சி நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதன் மூலம் திமுக ஊழலில் ஈடுபட்டதாக அமுலாக்கத் துறை குற்றம் சாட்டியுள்ளதாகவும், கட்சி நிதி என்ற பெயரில் பணம் வசூலித்தது தொடர்பாக ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர் செந்தில் பாலாஜி ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் விஜய் கூறினார்.

காவல்துறையில் உள்ள காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்றும், அரசியல் தலையீடு இன்றி காவல் துறை சுதந்திரமாகச் செயல்படும் என்றும் கூறிய முதலமைச்சர், சட்டம் - ஒழுங்கை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் நியாயப்படுத்தினார்.

அரசியல் விமர்சனங்கள் கடுமையாக இருக்கலாம் என்றாலும், அவை கண்ணியமற்ற அல்லது அவதூறான மொழியைப் பயன்படுத்தும் எல்லைக்குச் செல்லக்கூடாது என்று குறிப்பிட்ட விஜய், பெண்களைக் குறிவைத்துச் சொல்லப்படும் அவதூறான கருத்துகளுக்கு எதிராகவும் தனது கருத்தைப் பதிவு செய்தார்.

## ஒரு செங்கல்லை வைத்தாலும் போராட்டம்! விஜய் அரசுக்கு மீனவர்கள் எச்சரிக்கை!

புதிய தலைமை செயலகத்தை பட்டினப்பாக்கத்தில் கட்டும் முடிவை தமிழக அரசு உடனடியாக கைவிட வேண்டும் என அப்பகுதி மீனவர்கள் கூறியுள்ளனர். இந்த விவகாரத்தில் ஒரு செங்கல்லை நட்டு வைத்தாலும் கூட மிக பெரியளவில் போராட்டம் நடத்துவோம் எனவும் அதற்கான விளைவுகளை சந்திக்க நேரிடும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இப்போதுள்ள தலைமை செயலகத்தில் கடும் இடப்பற்றாக்குறை இருப்பதாக நீண்ட காலமாகவே புகார் இருக்கிறது. இதன் காரணமாக புதிய தலைமை செயலகம் அமைக்க ஏற்கனவே பல முயற்சிகள் நடந்தன. இருப்பினும், சில காரணங்களால் அது அமையவில்லை.

இதற்கிடையே நடந்து முடிந்த சட்டசபை கூட்டத்தொடரில் புதிய தலைமை செயலகம் குறித்த அறிவிப்பை வெளியிட்டார். யுடளழ சுநயன தலைமைச் செயலகம் கட்ட எதிர்ப்பு படகு, கொடிக்கம்பங்களில் இருந்து தவெக கொடியை கழற்றி வீசிய மீனவர்கள் எதிர்ப்பு பிறகு இந்த தலைமை செயலகம் பட்டினப்பாக்கத்தில் அமையும் என்று அரசாணை வெளியிடப்பட்டது. இந்த அரசாணை வெளியான முதலே பல்வேறு தரப்பினரும் கடும் கண்டனம் தெரிவித்து வருகிறார்கள். இதனால் மீனவர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்பதே அவர்கள் கருத்து. புதிய தலைமை செயலகத்தை ஆதரிக்கும் பலரும் கூட வேறு இடத்தில் அதை கட்டலாம் என்கிறார்கள். தவெக கூட்டணி கட்சியினரே பட்டினப்பாக்கம் வேண்டாம் என்றே சொல்கிறார்கள்.

மீனவர்கள் இது விவாதமாக மாறியுள்ள நிலையில், 9 மீனவ கிராமங்களை சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்ற ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டது. இதற்கிடையே தங்கள் கோரிக்கையை ஏற்று புதிய தலைமை செயலகத்திற்கான அரசாணையை தமிழக அரசு உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை வைத்துள்ளனர். ஒருவேளை ரத்து செய்யாவிட்டால் மிக பெரியளவில் போராட்டம் நடத்தப்படும் என்றும் இதற்காக ஒரு செங்கல்லை நட்டு வைத்தாலும் அதற்கு கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் எனவும் எச்சரித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும், 'இந்த பகுதியில் சட்டசபை அமைந்தால்.. இந்த பகுதியே பாதுகாப்பு மண்டலமாக மாறிவிடும். அப்படி பாதுகாப்பு பகுதியாக மாற்றப்பட்டால், எங்கள் மக்கள் யாரும் கடலில் மீன் பிடிக்கப் போக முடியாது. மீன் வியாபாரமும் செய்ய முடியாது. (12ம் பக்கம் பார்க்க)

# நான் கண்ட டி.பி.எஸ்.ஜெயராஜ்!

நான் யாருடனும் பேசும் போது ஜெயராஜ் என்ற பெயரைக் குறிப்பிட்டால் உடனே 'எந்த ஜெயராஜ்?' என்று தான் அடுத்த கேள்வி வரும். ஏனென்றால் இந்தப் பெயரில் இலங்கையைச் சேர்ந்த இரு பிரபலமானவர்களை நம்மில் பலரும் அறிந்திருக்கிறோம். ஒருவர் கம்பவாருதி, மற்றவரோ பிரபல பத்திரிகையாளர் டி.பி.எஸ். இருவருமே தத்தமது துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்கள் ஆங்கிலத்தில் Subject Matter Expert அல்லது SME என்று அழைப்பார்கள். ஆனால், நான் இங்கே குறிப்பிடுவது இரண்டமவரைத் தான்.

1980ஆம் ஆண்டில் எனது உயர்தர படிப்பினை முடித்து விட்டு பெறுபேறுகளுக்காக காத்திருந்த வேளையில் அப்போது ஐம்பதாவது வயதினைப் பூர்த்தி செய்து கொண்டிருந்த வீரகேசரியில் செய்தியாளராக கடமையாற்றும் வாய்ப்பு எனக்கு கிட்டியது. அங்கே நான் சந்தித்தவர்களும் பெற்ற அனுபவங்களும் என் வாழ்நாளில் மறக்க முடியாதவை. அவ்வகையில் நான் சந்தித்த அனுபவம் மிக்க சில பத்திரிகையாளர்களில் மறைந்த பத்திரிகையாளர் ஜெயராஜ் முக்கியமான ஒருவர்.

அப்போது காலஞ்சென்ற கே. சிவப்பிரகாசம் பிரதம ஆசிரியராக இருந்த காலம். டி.பி.எஸ். ஜெயராஜ் என்னைவிட சில ஆண்டுகள் கூடுதலாக வீரகேசரி ஆசிரிய பீடத்தில் மூத்த செய்தியாளராக கடமையாற்றியிருப்பினும், இடையிலே அவர் சட்டப் படிப்புக்காக விடுமுறையில் இருந்ததாகவும் அறிந்தேன். ஆனால், நான் வீரகேசரியில் சேர்ந்த சிறிது காலத்தில் அவர் மீண்டும் முழு நேரமாக பத்திரிகைத்துறையிலேயே கடமையாற்ற ஆரம்பித்திருந்தார். அதனால் தான் அவரோடு நான் பழகும் வாய்ப்பு கிட்டியது.

தமிழ்த் தேசிய அரசியல் அப்போது சூடு பிடித்துக் கொண்டிருந்த காலம். ஜெயராஜ் அது சம்பந்தமான செய்திகளைச் சேகரிப்பதிலும் தமிழ் அரசியல்வாதிகளை பேட்டி காண்பதிலும், ஆய்வு கட்டுரைகள் எழுதுவதிலும் அப்போதிருந்தே ஆர்வம் காட்டினார்.

அந்நாளில், ஜெயராஜுக்குத் தெரியாத தமிழ் அரசியல்வாதிகள் யாரும் இல்லை எனலாம். அவர் எந்த ஓர் அரசியல்வாதியோடும் மிக இலகுவில் அறிமுகத்தை ஏற்படுத்தி அவர்களோடு நெருக்கமாகவும் நம்பிக்கையுடனும் பழகும் தன்மை கொண்டவராக இருந்தமையால் பல சிக்கலான அரசியல் விடயங்களையும் அவர்களோடு பேசி, அவை பற்றி மற்றைய பத்திரிகைகளில் வர முதலே கூடிய விபரங்களோடு செய்திகளைப் பிரசுரித்து விடுவார். அதனாலே ஆசிரிய பீடத்தில் அவருக்கென்று ஒரு தனி மரியாதை இருந்தது. அத்தோடு அவர் எந்த ஒரு விடயத்தையும் நன்றாக ஆராய்ச்சி செய்து அறிந்த பின்னரே அது பற்றி எழுதுவார்.

அந்த நாட்களில், நாம் அவ்வப்போது இரவு வேளைகளிலும் அலுவலகத்தில் பணியாற்ற வேண்டியிருந்தது. ஜெயராஜ் இரவு வேளைகளில் தான் அநேக நாட்களில் வேலை செய்வதை நான் அவதானித்திருக்கிறேன். ஏனென்றால் இரவில் தான் முக்கியமான பலரையும் தொடர்பு கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று நினைக்கிறேன். வீரகேசரி, அந்நாளில் பல பதிப்புகளை வெளியிட்டு வந்தது.

இரவு தபால் புகையிரதம் யாழ்ப்பாணம் மட்டக்களப்பு போன்ற நகரங்களை நோக்கிப் புறப்படும் முன்னர் அதன் மூலம் அனுப்புவதற்காக ஒரு பதிப்பு தயாராகி விடும். மேலதிக பதிப்பு ஒன்று நள்ளிரவுக்கு கிட்டவாக வெளியிடப்படும். ஆனால், இரவு பதிப்பில் தான் சில முக்கிய பிந்தி கிடைத்த செய்திகள் பிரசுரிக்கப்படும். அதில் ஜெயராஜின் சூடான செய்திகளும் இடம் பெற்றிருக்கும்.



பத்திரிகை உலகில் 'ஸ்கூப்' (Scoop) என்பது ஒரு பெரிய விடயம். அதாவது மிகவும் முக்கியமான செய்திகளை முன்கூட்டியே அறிந்து மற்றைய பத்திரிகைகளில் அந்தச் செய்தி வெளியாவதற்கு முன்னதாகவே தத்தமது பத்திரிகைளில் பிரசுரிப்பதை 'ஸ்கூப்'என ஆங்கிலத்தில் கூறுவார்கள்.

அக்காலத்தில் வெளிவந்த மற்றைய தமிழ் பத்திரிகைகள் அவற்றின் சகோதர சிங்கள, ஆங்கில பத்திரிகைகள் மூலமாக முக்கிய செய்திகளை விரைவில் அறிய வாய்ப்பிருந்தது. ஆனால், வீரகேசரி தனித் தமிழ் பத்திரிகையாக மட்டுமே இருந்ததனால் மற்றைய பத்திரிகைகளோடு கடும் போட்டி போட வேண்டிய நிலைமை இருந்தது. இருந்தாலும் பலவிதமான ஸ்கூப் செய்திகளை மற்றைய பத்திரிகைகளை விடவும் முன்கூட்டியே வீரகேசரியில் பிரசுரித்ததற்கு, ஜெயராஜ் போன்ற திறமையான பத்திரிகையாளர்கள் இருந்தமையே காரணம்.

பல தடவைகள் அவர், பிரதம ஆசிரியர் சிவபிரகாசத்துடன் நீண்ட ஆலோசனைகள் நடத்துவதையும் பார்த்திருக்கிறேன். சிவப்பிரகாசம் ஒரு நல்ல மனிதர். அவர் ஆசிரிய பீட செய்தியாளர்களோடு நன்றாகப் பழகுவார். அவர் தனது அரசியல் மூதறிவினை மற்றவர்களுடன் பகிர்ந்ததோடு நில்லாமல், செய்தியாளர்களை பல விதத்திலும் ஊக்குவித்தும் வந்தார். அந்த வகையில், அவர் ஜெயராஜ் போன்றவர்களுக்கு பல ஆலோசனைகள் வழங்கி எந்தெந்தச் செய்திகள் எந்தெந்தக் கோணங்களில் வெளிவர வேண்டுமென்றெல்லாம் அறிவுரை வழங்குவார்.

அவர் தனக்குத் தெரிந்த அரசியல்வாதிகள், சட்ட நிபுணர்கள் என்போரையும் அறிமுகம் செய்து வைப்பார். அதேநேரம், ஒரு முக்கிய செய்தியை நாம் தவற விட்டு விட்டோம் என்றால் அவர் மிகவும் கடுமையாகக் கண்டிக்கவும் தவற மாட்டார்.

அந்த நாட்களில் நான் சிறில் மத்தியூ (விஞ்ஞான, கைத்தொழில் அமைச்சு), ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் (இராஜாங்க அமைச்சு) போன்ற அமைச்சர்களின் திணைக்கள அதிகாரிகளோடு ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில் தொடர்பில் இருந்தேன். அத்தோடு வீரகேசரி ஞாயிறு இதழுக்கும் தவறாது பத்திகள் எழுதி வந்தேன்.

மறைந்த பொன். இராஜகோபால் தான் ஞாயிறு இதழுக்கு பொறுப்பாக இருந்தார். அவரின் விருப்பப்படி, நான் விஞ்ஞானம், மற்றும் வாழ்வியல் (lifestyle), மற்றும் சில பயணக் கட்டுரைகளை வார இதழில் எழுதி வந்தேன். ஆனால், ஜெயராஜோ அரசியல் மட்டுமல்லாது சினிமா சம்பந்தமான கட்டுரைகளையும் ஞாயிறு இதழுக்கு எழுதி வந்தார். அவர் தமிழக முதல்வரும் நடிகருமான எம். ஜி இராமச்சந்திரன் பற்றி தொடர் கட்டுரை ஒன்றையும் எழுதி வந்தது எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. அதன் மூலமாக அவருக்கு, மறைந்த எம். ஜி. ஆர். மீதிருந்த பற்றுதலையும் என்னால் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

ஜெயராஜ், பின்னாளிலும் தனது டி. பி எஸ் ஜெயராஜ் என்ற சொந்த இணையத் தளத்திலும் தமிழ்ச் சினிமா சம்பந்தமான சுவாரசியமான பல கட்டுரைகளை வழங்கி இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவரை நான் யாழ்ப்பாணத்தில் சந்தித்த நாட்களில் அவரோடு ஒரு முறை ஆங்கிலப் படம் ஒன்று பார்க்கச் சென்றது எனக்கு நினைவில் உள்ளது. எந்த படத்தை எப்போது பார்த்தாலும் எந்தவொரு சம்பவம் எங்கே நிகழ்ந்தாலும் அவரது ஞாபக சக்தி மிகவும் துல்லியமானது, அவை அவரது எழுத்துகளிலும் பிரதிபலித்தன என்றே சொல்லவேண்டும். அக்காலத்தில் நியூஸ் பிரிண்ட் கடதாசியில் தான் நாம் எல்லோரும் செய்தி சேகரிக்கும் போது குறிப்பெடுப்போம். அவரது சிறு குறிப்புகளை நான் அவ்வப்போது அவதானிக்க நேர்ந்ததுண்டு. அவரது கை எழுத்துக்கள் சற்றே சிறு பிள்ளைகளின் எழுத்துபோல இருக்கும். பத்திரிகைத் தாளின் மூலை முடுக்கெகெல்லாம் ஏதோ சிறு சிறு குறிப்புகளை எழுதி வைத்திருப்பார், மறந்து விடாமல் இருக்க.

கட்டுரையாளர்:
லண்டனில் இருந்து பேராசிரியர்
எஸ்.ஆனந்தவிஜயன்

பல்வேறு துறைகளிலும் உள்ளது போல பத்திரிகை உலகமும் மிகவும் போட்டி பொறாமை நிறைந்தது. அதற்கு நண்பர் ஜெயராஜ் விலக்கல்ல. அதனால் அவரோடு வேறு சிலர் அவ்வப்போது முரண்பட்டதையும் நான் அறிவேன். ஆனால், அவர் அது பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளாமல், மாறாக தனது தொழிலை மிக நிதானமாக செய்தார் என்றே சொல்லலாம். அவர் பாரபட்சமின்றி எழுதிய எழுத்துக்கள் சிலருக்கு பிடிக்காமல் போயிற்று, அதனால் பலரோடும் அவர் முரண்பட்டுக் கொண்டார். அதுவே அவர் வாழ்வில் திருப்பு முனையாகவும் அமைந்தது எனலாம்.

நான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் படித்து கொண்டிருந்த காலத்தில் 1982 – 1985 வரை, சில சமயங்களில் அவரை நான் சந்தித்ததுண்டு. அப்படியான சந்தர்ப்பங்களில் தனது தனிப்பட்ட வாழ்க்கையிலிருந்து அரசியல் வரை அளவளாவுவார். எண்பதுகளின் ஆரம்பத்தில், அவர் யாழ்ப்பாணம் வீரகேசரி காரியாலயத்தில் கடைமையாற்றிய வேளைகளில் அவர் அந்த காரியாலயத்திலேயே தங்கி இருந்து கடைமையாற்றினார். அவ்வப்போது, அங்கேயே அவர் பழைய பத்திரிகைகளை மெத்தையாக்கி படுத்துறங்கிய நாட்களை இப்போதும் நினைவு கூருகிறேன்.

எனக்கு நன்றாக அறிமுகமான ஸ்ரீஸ்கந்தராஜா என்பவரே அப்போது வீரகேசரியின் யாழ்பாணக் காரியாலயத்தில் முகாமையாளராக இருந்தார். யாழ்ப்பாண நிருபராக இருந்த செல்லத்துரை என்பவர் சுகவீன முற்று பின்பு காலமாகி விட்டதால், ஜெயராஜின் திறமையில் நம்பிக்கை வைத்த ஆசிரியர் குழு அவரை யாழ்ப்பாணத்தில் சிறிது காலம் கடமையாற்ற நியமித்தது.

அந்த கால கட்டத்தில், யாழ்ப்பாணத்தில் துரிதகதியில் பல அரசியல் மாற்றங்கள் நடைபெற்றன. தீவிரவாத இயக்கங்கள் ஒரு புறம் தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணி பாராளுமன்ற அரசியல்வாதிகள் மறுபுறம், மற்றும் அரச இயந்திரம் இன்னொரு புறம் என்று, பத்திரிகையாளர்களைப் பொறுத்தவரை எப்போது என்ன நடக்குமென்றோ எது நடக்கும் என்றோ, எந்த நேரத்திலும் நித்திரையால் எழுப்பப் படலாம் என்ற நிலை.

அதே நேரம் புதிதாகச் சில பத்திரிகைகளும் யாழ்பாணத்தில் இருந்து வெளிவர ஆரம்பித்தன. அதனால் தான் அந்த நேரத்தில் ஜெயராஜ் போன்ற திறமை மிகுந்த பத்திரிகையாளர்களை வீரகேசரி நிர்வாகத்தினர் யாழ்ப் பாணத்தில் பணியாற்ற நியமித்திருந்தார்கள். நதி மூலமும் ரிஷி (18ம் பக்கம் பார்க்க)

# ஈரானில் அமெரிக்க விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதால் ஈரானுக்குள் சிக்கிய விமானியின் 48 மணி நேர திகில் அனுபவம்



இரான் மீது பறந்து கொண்டிருந்த போது தனது விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து, சேதமடைந்த பாராசூட்டுடன் தரையை நோக்கி கட்டுப்பாடின்றி விழுந்ததாக அமெரிக்க விமானப் படை விமானி தெரிவித்துள்ளார். அவரை மீட்பதற்காக ஆபத்தான மீட்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

ஒரு கட்டத்தில் மேலே பார்த்த போது பாராசூட் தெரியவில்லை. நான் இதுவரை பார்த்ததிலேயே மிகவும் பயங்கரமான விஷயம் அதுதான்,' என்று சிபிஎஸ் நியூஸ் நிறுவனத்தின் '60 மினிட்ஸ்' நிகழ்ச்சிக்கு அளித்த பேட்டியில் அந்த விமானி தெரிவித்தார். அவரது பெயர் வெளியிடப்படவில்லை.

ஞாயிற்றுக்கிழமை ஒளிபரப்பான இந்த நிகழ்ச்சி, ஏப்ரல் மாதம் இரான் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்ட விமானிகளில் ஒருவர் தனது அனுபவம் குறித்து முதன்முறையாகப் பேசியது ஆகும்.

சேதமடைந்த விமானத்தில் இருந்து இரண்டு அமெரிக்க வீரர்கள் வெளியேறினர். அவர்கள் இருவரும் தனித்தனியாகப் பிரிந்தனர். அமெரிக்க சிறப்புப் படையினர் தங்களை மீட்பதற்காக வரும் வரை, இரான் படைகளிடம் சிக்காமல் அவர்கள் மறைந்திருக்க வேண்டியிருந்தது.

நான் கட்டுப்பாடின்றி விழுந்தேன் என்று சொல்வது பொருத்தமாக இருக்கும்,' என்று சிபிஎஸ் நிகழ்ச்சியில் 'பிராவோ' என்ற பெயரில் அடையாளப்படு த்தப்பட்ட அந்த அமெரிக்க விமானப்படை வீரர் கூறினார்.

நான் எந்த வேகத்தில் கீழே விழுந்து கொண்டிருக்கிறேன் என்பதில் கவனம் செலுத்தவில்லை. அதற்குப் பதிலாக, எனக்கு முன்னால் இருந்த பிரச்சனைகளைச் சரி செய்யவும், பாராசூட்டை விரிக்க அல்லது அதன் சிக்கியிருந்த பகுதிகளை இழுத்து விடுவிக்கவும் என்னால் முடிந்த அனைத்தையும் செய்வதில் கவனம் செலுத்தினேன்,' என்று அவர் கூறினார்.

தான் உயிர் பிழைத்ததை 'ஓர் அதிசயம்' என்று அவர் குறிப்பிட்டார். எனினும், இந்தச் சம்பவத்தில் அவரது முதுகெலும்பு, தோள்பட்டை மற்றும் கை ஆகியவற்றில் முறிவு ஏற்பட்டது. அவர் தரையில் மோதியபோது அவரது வேகம் மணிக்கு 70 முதல் 100 மைல்கள் (மணிக்கு 113 முதல் 161 கி.மீ.) வரை இருந்ததாக அவர் கூறினார்.

சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்தில் இருந்த மற்றொரு அமெரிக்க விமானப்படை வீரர் 'ஆல்ஃபா' என்று அடையாளப்படுத்தப்பட்டார். அவர் சிபிஎஸ் நிறுவனத்துக்கு பேட்டி அளிக்க மறுத்து விட்டார்.

சுமார் 3 கோடி டாலர் மதிப்புள்ள இரு இருக்கைகள் கொண்ட எஃப்-15இ ரக போர் விமானம், தோளில் சுமந்து ஏவக்கூடிய ஏவுகணையால் சுட்டு வீழ்த்தப்பட்டது. அந்த ஏவுகணையின் விலை சுமார் ஒரு லட்சம் டாலர் என பிபிசியின் அமெரிக்க கூட்டு செய்தி நிறுவனமான சிபிஎஸ் தெரிவித்துள்ளது.

காயமடைந்திருந்த போதிலும், இரான் படைகளிடம் சிக்கிவிடுவோம் என்ற அச்சத்துடன், பிராவோ நீண்ட தூரம் நடந்து சென்று உயரமான மலை முகட்டின் உச்சியை அடைந்தார். அந்த சூழ்நிலையில் தன்னைத் தானே ஆறுதல் படுத்திக் கொள்ள, 'தைரியத்தை இழக்காதே் இல்லையெனில் நீ இரான் தொலைக்காட்சியில் காணப்படுவாய்,' என்று தன்னிடமே கூறிக் கொண்டதாக தெரிவித்தார்.

ஆல்ஃபா ஆறு மணி நேரத்துக்குள் மீட்கப்பட்டார். அந்த மீட்பு நடவடிக்கையில் கடுமையான துப்பாக்கிச் சண்டை நடைபெற்றதாக அமெரிக்க பாதுகாப்புத் துறை செயலாளர் பீட் ஹெக்செத் தெரிவித்தார். உள்ளே செல்லும் போதும் வெளியே வரும் போதும் முழுவதும் துப்பாக்கிச் சண்டை தான் நடைபெற்றது. ஆனால், அவர்கள் ஆல்ஃபாவை மீட்டு அழைத்து வந்து விட்டனர்,' என்று ஹெக்செத் கூறினார்.

இரான் படைகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதியில் 48 மணி நேரத்துக்குப் பிறகு பிராவோ மீட்கப்பட்டார். ஒரு கட்டத்தில் இரானுக்குள் 90க்கும் மேற்பட்ட அமெரிக்க ராணுவ வீரர்கள் தரையில் இருந்ததாக அமெரிக்க மத்திய கட்டளையின் அட்மிரல் பிராட் கூப்பர் தெரிவித்தார். 46 ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்கப் படைகள் இரானுக்குள் செயல்பட்டது இதுவே முதல் முறை என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால், வீரர்களை வெளியேற்றுவதற்குத் தேவைப்பட்ட விமானங்களும் ஹெலிகாப்டர்களும் பாலைவன மணலில் சிக்கிக் கொண்டன. சிறப்புப் படையினர் மாற்று மீட்புக் குழுவுக்காகக் காத்திருந்தநிலையில், அவற்றை அங்கேயே அழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இரான் மீது பறந்து கொண்டிருந்த போது தனது விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து, சேதமடைந்த பாராசூட்டுடன் தரையை நோக்கி 'கட்டுப்பாடின்றி விழுந்ததாக'' அமெரிக்க விமானப் படை விமானி தெரிவித்துள்ளார். அவரை மீட்பதற்காக ஆபத்தான மீட்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

அழிக்கப்பட்ட அமெரிக்க விமானங்களில் இரண்டு, தலா சுமார் 10 கோடி டாலர் மதிப்புடையவை என்று சிபிஎஸ் தெரிவித்துள்ளது. மேலும், 'லிட்டில் பேர்ட்' ரக ஹெலிகாப்டர்கள் பலவற்றையும் அழிக்க வேண்டியிருந்தது. அவற்றில் இருந்த தொழில்நுட்பங்கள் இரான் வசம் சென்று விடாமல் இருப்பதற்காக அவை அழிக்கப்பட்டதாக சிபிஎஸ் குறிப்பிட்டுள்ளது. அமெரிக்காவும் இஸ்ரேலும் இரானுக்கு எதிராகத் தொடங்கிய போரில் சுமார் ஐந்து வாரங்கள் கடந்த நிலையில் இந்த மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தற்போது ஏழாவது மாதத்தை எட்டியுள்ள இந்தப் போர், அமெரிக்காவில் நவம்பரில் நடைபெறவுள்ள நாடாளுமன்ற இடைக்காலத் தேர்தலுக்கான பிரசாரம் தொடங்கவுள்ள நிலையில், அந்நாட்டு மக்களிடையே பெருகிவரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

உலகளாவிய எரிசக்தி விலைகள் கடுமையாக உயர்ந்ததும், அதன் தொடர்ச்சியாகப் பிற பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட தாக்கமும் இந்த அதிருப்திக்கு முக்கியக் காரணங்களாக உள்ளன. கடந்த வாரம், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், நவம்பர் 3-ஆம் தேதி நடைபெறவுள்ள தேர்தல் நாள் வரை இந்தப் போர் குறைந்தபட்சம் தொடரும் என்று கணித்திருந்தார். நன்றி:- பிபிசி

## போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைக்கு அழைத்த டட்ரம்ப்! ஈரான் கொடுத்த பதிலடி என்ன தெரியுமா?

ஈரானுடன் போர்நிறுத்தம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ள நிலையில் அவரது அழைப்பை ஈரான் நிராகரித்துள்ளது.

அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தும் நிலைப்பாட்டில் ஈரான் இல்லை என அந்நாட்டின் பாதுகாப்புத்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ட்ரம்ப்பின் அழைப்பு தொடர்பாக ஈரானின் தேசிய பாதுகாப்புத் துறை செயலாளர் மொஹ்சென் ரெஸாயி தனது எக்ஸ் தள பதிவில் அமெரிக்க ஜனாதிபதியின் முரண்பாடான கருத்துக்களால் யாரும் திசை திரும்ப வேண்டாம் என குறிப்பிட்டுள்ளார்.

எண்ணெய் வர்த்தகம் மற்றும் ஹோர்முஸ் நீரிணை தொடர்பான சூழ் நிலை மாறி விட்டதாகவும், ஈரான் முன் வைக்கும் நிபந்தனைகளை அமெரிக்கா ஏற்றுக்கொள்வதாக உறுதியளிக்கும் வரை பேச்சுவார்த்தை நடத்தப்படாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



போர்நிறுத்த ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு இது மிகவும் ஆரம்ப கட்டம் என பல நாட்களாக கூறி வந்த ட்ரம்ப் வெளியிட்ட சமூக ஊடகப் பதிவில் ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்கா தயாராக இருப்பதாக தெரிவித்திருந்தார். ஈரான் விரைவாக போர்நிறுத்த ஒப்பந்தத்தை மேற்கொள்ள விரும்புவதாகவும், அதில் அமெரிக்கா ஈடுபட வேண்டுமா என்பதை தானே தீர்மானிப்பதாகவும் ட்ரம்ப் குறிப்பிட்டிருந்தார்.

இதனிடையே, போர் நிறுத்தம் மற்றும் ஹோர்முஸ் நீரிணை மீதான முற்றுகையை விலக்கிக் கொள்வதற்கு ஈரான் சில நிபந்தனைகளை முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

போரினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கான இழப்பீடு மற்றும் பொருளாதாரத் தடைகளை நீக்குதல் உள்ளிட்ட கோரிக்கைகளை ஈரான் முன் வைத்துள்ள போதிலும், அவற்றை ஏற்க அமெரிக்கா மறுத்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

# யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அனைத்துலக மாநாடு!

கடந்த 30 ஆகஸ்ட் 2026 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் அனைத்துலக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. அந்த நிகழ்வு ஒரு சர்வதேச மாநாடாக ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. ஐநாவின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட வர்களுக்கான சிறப்பு பணிக் குழுவின் உறுப்பினராகிய அனா .சர்வதேச மன்னிப்புச் சபையின் தென்னாசியப் பிரிவுக்குப் பொறுப்பான பெண் உட்பட கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களின் தமிழ் பிரதிநிதிகளும் அங்கே வந்திருந்தார்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளும் அரசியல் செயற்பாட்டாளர்களும் சிவில் செயற்பாட்டாளர்களும் வெளி மாவட்டங்களில் இருந்தும் கொண்டு வரப்பட்டிருந்தார்கள். மண்டபம் நிறைந்த சனம்.

அந்த நிகழ்வின் ஒரு பகுதியாக முதலில் வீரசிங்க மண்டபத்துக்கு முன்னிருந்து ஒரு வாகன ஊர்த்தி புறப்பட்டு யாழ்ப்பாணம் நகரப் பகுதியூடாக நகர்ந்து வந்து முடிவில் தந்தை செல்வா கலையரங்கை வந்தடைந்தது. இந்த வாகன ஊர்தியில் ஒரு பாரம் தூக்கி வாகனத்தில் ஒரு வெள்ளை வான் வைக்கப்பட்டிருந்தது.அந்த வானின் வெள்ளை உடல் முழுவதும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் முகங்கள் பதிக்கப்பட்டு இருந்தன.

அந்த நிகழ்வை செய்தியாக்குவதற்கு கொழும்பிலிருந்து வந்திருந்த ஒரு தமிழ்ச் செய்தியாளர் இவர் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக கொழும்புக்கும் மாலை தீவுக்குமான அனைத்துலக ஊடகம் ஒன்றுக்கு செய்தியாளராக இருக்கிறார்– அந்த நிகழ்வு பற்றி பின்வருமாறு கேட்டார்

அந்த ஊர்வலம் தீப்பந்தங்களோடு யாழ் நகரப் பகுதியூடாக நடந்து வந்த போது அது நகரத்தின் வழமையான இயக்கத்தை எந்த வகையிலும் பாதித்திருக்கவில்லை. நகரம் தன் பாட்டில் இயங்கிக் கொண்டிருந்தது. ஊர்வலம் அதன் பாட்டில் போய்க் கொண்டிருந்தது. நகரத்திலிருந்து நடந்து போகக்கூடிய தூரத்தில் தான் தந்தை செல்வா கலையரங்கு உண்டு. அங்கே நூற்றுக்கணக்கானவர்கள் மண்டபத்தில் திரண்டிருந்தார்கள். அந்த நிகழ்விற்கும் நகரத்தின் செயற்பாடுகளுக்கும் இடையில் எந்த தொடர்பும் இருக்கவில்லை. நகரம் தன்பாட்டில் இயங்கிக் கொண்டிருந்தது. அந்த மாநாடு அதன் பாட்டில் நடந்து கொண்டிருந்தது. ஏன் இந்த செயற்பாடுகள் மக்கள் பயப்படவில்லை என்ற பொருள்பட அவர் கேட்டார்.

இது தான் கடந்த 17 ஆண்டுகளுக்கு மேலான தமிழ்த் தேசிய அரசியல் யதார்த்தம் ஆகும். பாதிக்கப்பட்ட மக்களே பாதிக்கப்பட்ட மக்களுக்காகப் போராடுகிறார்கள். தம் பிள்ளைகளை பறிகொடுத்த உறவினர்கள் தான். தமது பிள்ளைகளுக்கு நீதி கேட்டுத் தெருவில் நிற்கிறார்கள். அரசியல் கைதிகளுக்காக பெரும்பாலும் அரசியல் கைதிகள்தான் போராடுகிறார்கள். மட்டக்களப்பில் மேச்சல் தரைகளுக்காக பண்ணையாளர்கள் தான் போராடுகிறார்கள். தையிட்டியில் ஒவ்வொரு முழுநிலா நாளின் போதும் காணிகளின் சொந்தக்காரர்கள் தான் தொடர்ந்து போராடுகிறார்கள். அவர்களோடு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கட்சி உறுப்பினர்களும் காணப்படுவார்கள்.

மேற்படி போராட்டங்களில் சிவில் சமூகங்கள் சிறிய அளவில் இணைவதுண்டு. சில சமயங்களில் கட்சிகளும் சிவில் சமூகங்களும் இணையும்போது போராட்டம் பெரிதாகுவதுமுண்டு.




கடந்த 17ஆண்டுகால தமிழ்த் தேசியப் போராட்டக் காட்சி அது தான். பாதிக்கப்பட்ட மக்களே போராடுகிறார்கள். ஏனைய பெருந் திரள் மக்கள் அதில் சம்பந்தப்படாதது போல விலகி பார்வையாளர்களாக நிற்கிறார்கள். அல்லது உணவு திருவிழாக்களுக்கும் வாகனப் பெருவிழாக்களுக்கும், கோவில் பெரு விழாக்களுக்கும் போகிறார்கள். புதிய பெரிய கடைகள் திறக்கப்படும் போது அங்கே போய் வரிசையில் நிற்கிறார்கள். தமிழ் மக்கள் தங்களுடைய சொந்த அரசியலின் மீது தங்களுடைய தலைமுறைகளின் எதிர்காலத்தை தீர்மானிக்கக்கூடிய அரசியலில் மீது உணர்திறன் குறைந்தவர்களாகக் காணப்படுகிறார்கள் என்பதனை அது காட்டுகிறது.

ஒரு புறம் இளம் தலைமுறையின் ஒரு பகுதி எப்படிப் புலம் பெயரலாம் என்று சிந்திக்கிறது. அரைக் களிசானும் குளிரில் ஒப்பீட்டளவில் வெள்ளையாக மாறிய கால்களுமாக, கைகளில் தண்ணீர் போத்தல்களோடு, ஊரில் நடந்து திரியும் புலம் பெயர்ந்த தமிழர்கள் தான் ஒரு பகுதி இளையோருக்கு முன்னுதாரணமாகக் காணப்படுகிறார்கள். நாட்டிலுள்ள படித்தவர்கள், நல்ல பதவிகளில் உள்ளவர்கள், தொழில் முனைவோர் போன்றவர்களை அவர்கள் முன்னுதாரணமாகக் கொள்ளவில்லை.

எப்படிப் புலம் பெயரலாம்? எப்படி இலகுவாக விசா எடுக்கலாம்? விசா எடுப்பதற்கு என்ன படிக்க வேண்டும்? எதைப் படித்தால் விசா இலகுவாக கிடைக்கும்? போன்ற ஆலோசனைகளை அதாவது புலம்பெயர்வதற்கான ஆலோசனைகளை வழங்குவதற்கு என்று முக்கிய தமிழ் நகரங்களில் கடைகள் அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான தமிழ் கிராமங்களில் ஆளில்லா வீடுகள் அதிகரித்து வருகின்றன. ஆளில்லா வீடுகள் இரண்டு வகைப்படும். ஒன்று ஆட்கள் எங்கே என்று தெரியாத போரில் இறந்துபோன புலம்பெயர்ந்து விட்ட தமிழர்களின் வீடுகள்.அவை அநேகமாக பாழடைந்த வீடுகள். இன்னொரு புறம், தமது சொந்த ஊரில் தமது செல்வச் செழிப்பைக் காட்டுவதற்காக புலம்பெயர்ந்த தமிழர்கள் கட்டும் பிரம்மாண்டமான மாட மாளிகைகள். இந்த மாட மாளிகைகளை ஒன்றில் செக்யூரிட்டி நிறுவனங்கள் பாதுகாக்கின்றன. அல்லது சிசிடிவி கமராக்கள் கண்காணிக்கின்றன. இவ்வாறாக தாயகம் என்று தமிழ் மக்கள் அழைத்துக் கொள்ளும் பகுதிகளில், குறிப்பாக கிராமப்புறங்களில், ஒரு பகுதி வீடுகளில் ஆட்கள் இல்லை. அதாவது தாயகத்தில் சனத் தொகை குறைகிறது என்று பொருள்.

இருக்கின்ற ஜனத் தொகையையும் தாயகத்தில் காலூன்றி, வேர் கொண்டு, பூத்துக் காய்க்க வேண்டும் என்று ஊக்கப்படுத்தும் ஜனவசியம் மிக்க தலைவர்கள், செயற்பாட்டாளர்கள், பேச்சாளர்கள், எழுத்தாளர்கள்,சமூகத் தலைவர்கள் எத்தனை பேர் உண்டு?

அண்மையில் ஒரு மத நிறுவனத்தின் வளாகத்தில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் நடாத்தப்பட்ட கருத்தரங்கு பற்றி இங்கு கூறவேண்டும். இந்தச் சந்திப்பில் 60க்கும் குறையாதவர்கள் வந்திருந்தார்கள். மூன்று மதங்களையும் சேர்ந்த படித்தவர்கள், அரச ஊழியர்கள், கிராம மட்டச் செயற்பாட்டாளர்கள், மதகுருக்கள், ஆண்கள், பெண்கள் என்று 60க்கும் குறையாதவர்கள் வந்திருந்தார்கள். அங்கு உரைநிகழ்த்திய வளவாளர் கடைசியாக சில கேள்விகளைக் கேட்டார்.

அதில் முதலாவது கேள்வி. உங்களுடைய மிகப்பெரிய பயம் எது? அங்கிருந்த பெரும்பாலானவர்களின் பதில் என்ன தெரியுமா? எமது அடுத்த தலைமுறை எங்களுடைய முழுமையான கட்டுப்பாட்டுக்குள் இல்லை. அந்தத் தலைமுறையை எப்படி நெறிப்படுத்தப் போகிறோம் என்பது தான் எங்களுக்குள்ள பெரிய பயமும் கவலையும் என்று சொன்னார்கள்.

அடுத்த கேள்வி உங்களுடைய மிகப் பெரிய நம்பிக்கை எது? எல்லாருமே ஒரே குரலில் சொன்ன விடயம். ஒன்றில் நாங்கள் எங்களை நம்புகிறோம். அல்லது கடவுளை நம்புகிறோம் என்பது தான். அதாவது அங்கு வந்திருந்த யாருமே எந்த ஒரு கட்சித் தலைவரையோ அல்லது மதத் தலைவரையோ சமூகத் தலைவரையோ தங்களுடைய ஆதர்ச தலைவராக கூறவில்லை. தமிழ் அரசியல் குறிப்பாக தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் அந்த மக்களை கவரத்தக்க ஜனவசியம்மிக்க தலைவர்கள் இல்லை என்று பொருள்.

இது ஓர் ஆபத்தான வளர்ச்சி. தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பகுதியினர் தற்போதுள்ள தலைவர்களை ஏற்றுக் கொள்ளவில்லை. இன்னொரு பகுதியினர் யாருக்கு வாக்களித்தார்களோ, அவர்களை ஒன்றில் திட்டுகிறார்கள் அல்லது சந்தேகிக்கின்றார்கள். இப்படிப்பட்டதோர் அரசியல் பின்னணியில், நமது கட்சிகள் மாகாண சபைத் தேர்தலை வைக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்கின்றன. இந்தியாவைக் கேட்கின்றன. தனித்தனியாகக் கேட்கின்றன. கூட்டாகச் சேர்ந்து நின்று கேட்கின்றன.

ஆனால் தமிழ் மக்கள் தங்களுடைய சொந்த அரசியலின் மீது உணர்திறன் குறைந்தவர்களாக மாறி வருவதை குறித்து அல்லது அதை விட கூர்மையான வார்த்தைகளில் சொன்னால், தமிழ் மக்கள் படிப்படியாக அரசியல் நீக்கம் செய்யப்படுவது குறித்து இந்தக் கட்சிகள் என்ன கருதுகின்றன? தமிழ் மக்களை அரசியல் நீக்கம் செய்வது எதிரியல்ல. தமது சொந்த மக்களை தமது சொந்த அரசியலின் மீது உணர்திறன் மிக்கவர்களாக மாற்றத் தவறிய மேற்படி கட்சிகள்தான் என்பதனை அந்த கட்சிகள் உணர்ந்திருக்கின்றனவா? சிவப்பு மஞ்சள் கொடிகளை அசைத்தால் தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள் என்று இந்த கட்சிகள் இப்பொழுதும் நம்புகின்றனவா?

இப்பொழுது இக்கட்டுரையைத் தொடங்கிய இடத்துக்கே வருவோம். கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த மாநாட்டை ஒழுங்குபடுத்தியது பாதிக்கப்பட்ட மக்களின் அமைப்புகள் தான். கட்சிகள் அல்ல. சிவில் சமூகங்களும் அல்ல. பாதிக்கப்பட்ட மக்களுக்கு புலம்பெயர்ந்து வாழும் தமிழ் அமைப்புகளும் தனி நபர்களும் உதவுகிறார்கள். அந்த உதவிதான் கடந்த 17 ஆண்டுகளாக அம்மாக்களின் போராட்டத்தை அணைய விடாது பாதுகாத்து வருகிறது. அதேசமயம் அம்மாக்களுக்கு இடையில் ஏற்படும் முரண்பாடுகளுக்கும் அந்த உதவி தான் காரணம் என்ற ஓர் அவதானம் உண்டு.

எதுவானாலும் அந்தப் போராட்டத்தை கட்சிகள் ஒழுங்குபடுத்தவில்லை. போராடும் அம்மாக்கள் அழைத்தால் கட்சிகள் போய் அங்கே அமர்ந்திருக்கின்றன. எனினும் அழைக்கப்பட்ட விதம் தொடர்பில் ஏற்பட்ட அதிருப்தி காரணமாக தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரும் பதில் செயலாளரும் அங்கு வந்திருக்கவில்லை. நீதிக்கான போராட்டத்தின் உணர்ச்சிகரமான ஒரு பகுதியாகிய அம்மாக்களின் மாநாட்டுக்கு இருப்பதில் பெரிய கட்சியின் ஒரு பகுதி வரவில்லை.சிறீதரனும் இரண்டு மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அங்கே காணப்பட்டார்கள். இருப்பதில் பெரிய கட்சி இப்படித் தான் அனைத்துலக மாநாடு ஒன்றை எதிர்கொள்ளுமாக இருந்தால் தமிழ் அரசியல் எங்கே நிற்கிறது? இந்த லட்சணத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாகாண சபைத் தேர்தல் நடத்தப் பட்டால் அதில் தாங்கள் மிகப்பெரிய வெற்றியைப் பெறுவோம் என்று அவர்கள் நம்புகிறார்களா?




# மஹிந்த ராஜபக்ஷ கூட்டத்தை புகழ்ந்து பாடிய பைத்தியத்தை தெளிய வைக்க வேண்டும் - ஈரோஸ் தலைவர் பிரபாகரன் கோரிக்கை!

யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற ஒரு பைத்தியம் முள்ளிவாய்க்கால் மட்டுமல்ல வடக்கு கிழக்கு மாகாணங்களில் கொத்துக் கொத்தாக தமிழர்களை கொன்று குவித்த மஹிந்த ராஜபக்ஷ கூட்டத்தை அது புகழ் பாடிய அந்த பைத்தியத்தை தெளிய வைக்க விரைவில் மருந்து கட்டுவேன் அதேவேளை அனுர அரசாங்கம் 20 வருடம் நிலைத்து நின்று ஆட்சி செய்யும் என ஈரோஸ் கட்சி தலைவர் இராஜநாதன் பிரபாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வொய்ஸ் ஒப் மீடியாவில் 14 செப் 2026 திங்கட்கிழமை இடம் பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார். தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக கொலை, கொள்ளை, குடிகாரர்கள், குடிகாரர்கள் தான் இருக்கின்றனர் என உலகத்துக்கே தெரிந்துள்ளது இருந்த போதும் அரசாங்கத்துக்கு எதிராக அனுராதபுரத்தில் பெரிய ஒரு கூட்டம் நடந்தது அந்த கூட்டத்திற்கு சென்றவர்கள் அனைவரும் வீதியில் தவழ்ந்து கொண்டதை முகநூலில் பார்த்திருப்பீர்கள் அது மட்டுமல்ல மஹிந்த



அல்லது நாமல் கூட்டம் கொடுத்து பணத்தை பெற்றுக் கொண்டதற்காக அனுரா கள்ளன் என அடுத்த சொல் நாமல் கள்ளன் கோஷமிட்டனர் உண்மையில் அடி மனதால் நாமல் கொரா என சொல்லப்பட்டது.

பணத்தையும் மதுபானத்தையும் வாங்குவதற்கு அனுரா கொரா என சொல்வது கடமை ஏன் என்றால் பணத்தையும் மதுபானத்தையும் பெற்றுக் கொண்டதற்காக ஆனால் அடிமனதில் இருந்து நாமல் கொரா என சொன்னது இது தான் நிலைமை

இலங்கையில் இவ்வளவு பேரும் தான் அனைத்து கட்சிக்கும் ஆதரவாளர்கள் என்பது ஊடகங்கள் மூலம் தெரிகின்றது கடந்த ஊடக சந்திப்புக்களில் தெரிவித்தேன் முடியும் என்றால் இந்த அரசாங்கத்துடன் சேர்ந்து செயற்படுங்கள் அப்படி இல்லை என்றால் கட்சியை கலைத்து விட்டு வீட்டுக்கு சென்று ஓய்வு எடுங்கள் என உங்கள் ஒவ்வொருவருக்கும் 75, 80, 90 வயது இனி உங்களால் முடியாது என இந்த அரசாங்கம் மக்களின் மனதை தொட்ட அரசாங்கம், மக்களால் உருவாக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் எனவே இந்த அரசாங்கத்துக்கு எதிராக எதுவும் செய்து வேலை இல்லை.

மக்கள் மனசில் இருந்து அகற்றினால் தான் இந்த அரசாங்கத்தை கவிழ்க்க முடியும் எனவே தயவு செய்து அதை கை விட்டுவிட்டு அரசாங்கத்துக்கு நல்ல ஆலோசனைகளை வழங்குங்கள் என்னதான் தலைகீழாக நின்றாலும் 20 வருட காலம் இந்த அரசாங்கம் தான் நிலைத்திருக்கும் இன்று இலங்கையில் உள்ள மூவின மக்களும் ஜனநாயக காற்றை சுவாசித்துக் கொண்டு சுதந்திரமாக நடந்து கொண்டு சுதந்திரமாக தொழில் செய்து சந்தோஷமாக வாழுகின்ற தோற்றப்பாட்டு நிலை ஏற்பட்டுள்ளது.

அதே நேரத்தில் முள்ளிவாய்க்கால் மட்டுமல்ல வடக்கு கிழக்கு மாகாணங்களில் கொத்துக் கொத்தாக தமிழர்களை கொன்று குவித்த மஹிந்த ராஜபக்ஷ கூட்டத்துக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு பைத்தியம் சென்று அந்த நயவஞ்சகர்களை புகழ் பாடுது அந்த பைத்தியம் வாங்கிய பணத்துக்கு ஆடியுள்ளார் எனவே அவர் கடவுளை மன்றாட வேண்டும் எனது கண்ணில் முழித்து விடக் கூடாது என இந்த பைத்தியத்துக்கு கூடிய விரைவில் மருந்து கட்டுவேன் பைத்தியத்தை தெளிய வைக்க வேண்டும் இது தமிழ் மக்களுக்கு ஒரு விசமி சாபக்கேடு. இவ்வாறான பைத்தியங்கள் கால காலமாக வரும் அதை நாங்கள் தான் இனம் காண வேண்டும் என்றார்.

# பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு நாங்கள் மதுபானம் வாங்கிக் கொடுக்கவில்லை - அவர்களாகவே வாங்கிக் குடித்தார்கள்



எமது கூட்டங்களுக்கு மதுபானம் அருந்தாமல் வருமாறு குறிப்பிடும் அதிகாரம் எமக்கு இல்லை. மது அருந்துவது அவர்களின் உரிமை. மது அருந்தி விட்டு கூட்டத்துக்கு வருமாறு நாங்கள் குறிப்பிடவும் இல்லை, வாங்கிக் கொடுக்கவும் இல்லை என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் கடந்த 14 செப் 2026 திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

அநுராதபுரத்தில் இடம் பெற்ற எமது கட்சியின் கூட்டத்தில் ஏழை விவசாயிகளும், தொழிலாளர்களும் கலந்துக் கொண்டார்கள். அவர்களை அவமதிக்கும் வகையில் சமூக வலைத்தளங்களில் திரிபுப்படுத்தப்பட்ட வகையில் காணொளிகள் பரிமாற்றப்படுகின்றன இலங்கையில் வருடாந்தம் பெருந்தொகையான மதுபானம் உற்பத்தி செய்யப்படுகிறது. அவற்றை இலங்கையர்கள் தான் குடிக்கிறார்கள். மதுபானம் அருந்துவதும், அருந்தாமல் இருப்பதும் அவரவர் விருப்பமாகும்.

எமது கூட்டத்துக்கு மதுபானம் அருந்தாமல் வர வேண்டாம் என்று நாங்கள் எவரையும் குறிப்பிடவில்லை. மதுபானம் அருந்துவது அவர்களின் உரிமையாகும். அதற்கு நாங்கள் தடை விதிக்கவில்லை.

கூட்டத்தில் கலந்துக் கொண்டவர்களுக்கு நாங்கள் மதுபானம் வாங்கிக் கொடுக்கவில்லை. மதுபானம் அருந்துவதும், அருந்தாமல் இருப்பதும் அவர்களின் தனிப்பட்ட விருப்பமாகும் என்றார்.

## பிள்ளையானுக்கு விளக்கமறியல் நீடிப்பு!

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர், பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் எதிர்வரும் 29ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த வழக்கு தொடர்பான விசார ணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக சட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட மற்றும் யோஷித ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 13ஆம் திகதி விசாரணைக்கு முன்னரான ஒன்றுக் கூடலுக்கு அழைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரவீந்திர பிரேமரத்ன முன்னிலையில் இந்த வழக்கு 17 செப் 2026 விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில், பிணையில் உள்ள பிரதிவாதிகள் இருவரும் நீதிமன்றில் முன்னிலையாகினர்.